
# காவல் நீதிக்கான குரல்

# Voices for Custodial Justice




Source : The Hindu 14-08-2010




Source : The Hindu 14-08-2010

# இந்தியா

## இந்திய குடியரசு

| | | |
|---|---|---|
| ஜனாதிபதி | : | பிரதிபாபட்டில் |
| பிரதம மந்திரி | : | மன்மோகன்சிங் |
| மரணதண்டனை | : | நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது |
| ஜனத்தொகை | : | 1198 மில்லியன் |
| சராசரி வாழ்நாள் | : | 63.4 வருடங்கள் |
| குழந்தை இறப்பு (5 வயதுக்கு கீழ்) ஆ/பெ. | : | 77/86 – 1000க்கு |
| வயது வந்தோர் கல்வி | : | 66 சதவீதம் |

**மும்பையில் 2008–ல் நடந்த தாக்குதல் காரணமாக பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கை தொடர்பாக சித்ரவதை மற்றும் விசாரணை நிறுத்திவைக்கப்பட்டவர்கள் பற்றிய அறிக்கைகள் உள்ளன. இந்தியாவின் மத்திய பகுதிகளில் மாவோயிஸ்டுகள் நடத்திய வன்முறை சம்பவங்கள் மேற்கு வங்காளம் வரை பரவி உள்ளூர்வாசி மக்கள் 300 நபர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், பல மாநிலங்களில் நீதிமன்ற தீர்ப்பாணை இன்றியே பலர் மரண தண்டணைக்குட்படுத்தபட்டதோடு மனித உரிமை காவலர்கள் அச்சுறுத்தப்பட்டதோடு விசாரணை இன்றி காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முந்தைய காலகட்டங்களில் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காமல் தோல்வியுற்ற நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்கிறது. அதேபோல் மதங்களில் அடிப்படையிலான சிறுபான்மையினர் மீதான வன்முறையும் தொழிற்சாலை வன்முறையும் தொடர்கிறது. ஆதிவாசிகள், சிறு விவசாயிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நகர வாசிகள் போன்றோரின் வாழ்வாதாரங்கள் அதிவேக வளர்ச்சி மற்றும் அரசாங்க வேலைகளின் காரணமாக வாழ்வாதாரங்கள் அச்சுறுத்தப்படுவதும் அவர்களின் நிலங்கள் மற்றும் இயற்கை வளங்களை கையகப்படுத்துவதை எதிர்த்து நடக்கும் இயக்கங்களும் தொடர்கின்றன. குறைந்தது ஐம்பது நபர்கள் மரணதண்டனைக்கு என்று தீர்ப்பு அளிக்கப்பட்டாலும் தொடர்ந்து 5வது வருடமாக மரணதண்டனை நிறைவேற்றப்படவில்லை.**

**பின்னணி:** மும்பையில் 2008 ஆம் வருடம் நடந்த தாக்குதலில் பாகிஸ்தானைச் சேர்ந்த மக்கள் அல்லது குழுவினர் சம்மந்தப்பட்டிருப்பதாக இந்திய அதிகாரிகள் வலியுறுத்திச் சொன்னதின் காரணமாக இந்திய, பாகிஸ்தானுக்கு இடையே நடந்த சமாதான பேச்சு வார்த்தைகள் முடிவடையாமல் போய் விட்டன. இந்த தாக்குதல்கள் மூன்று நாளாக தொடர்ந்து நடந்ததோடு 174 நபர்கள் கொல்லப்பட்டனர். காஷ்மீர் பிரச்சினை குறித்த இந்திய பாகிஸ்தான் பேச்சு வார்த்தைகளும் எந்த முன்னேற்றமும் காணாமல் இருக்கிறது. மாவோயிஸ்டுகளின் ஊடுறுவல்களை எதிர்த்து நடத்தும் நடவடிக்கைகளில் இந்திய பாதுகாப்புத் துறையும் போலீஸ் மற்றும் ராணுவத்துறையும் இணைந்து செயலாற்றுவதில் மனித உரிமை மீறல்கள் இருபக்கங்களிலும் நடப்பதாக கூறப்படுகிறது. ஏப்ரல், மே மாதங்களில் நடந்த தேர்தல்களின் போது குண்டுவெடிப்புத் தாக்குதல்கள் நாடு முழுவதும் நடந்ததில் ஏறத்தாழ 200 நபர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

பொருளாதார வளர்ச்சி நகரப்பகுதிகளில் மட்டுமே நிகழ்ந்துள்ளதோடு அகிலம் முழுவதும் நிகழ்ந்த பொருளாதார பின்னடைவு, பாதுகாப்பு சம்மந்தப்பட்ட விஷயங்கள் மற்றும் மனித உரிமை மீறல் போன்றவற்றில் மாநில மற்றும் ராணுவத்துறை சம்பந்தப்பட்டிருக்கிறது. 2005ம் வருட கணக்கெடுப்புக்குப் பின் ஏறத்தாழ ஆண்களில் ஒரு பகுதி மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் தள்ளப்பட்டிருப்பதாக அரசாங்கமே கூறுகிறது.

**பயங்கரவாதத்திற்கான மாற்று மற்றும் பாதுகாப்பு:** 2008ஆம் வருடம் மும்பையில் நிகழ்ந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பின் 30த்திற்கு மேற்பட்ட நபர்கள் பல மாநிலங்களில் விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். சித்ரவதை மற்றும் கடுமையான அடி, உதை மற்றும் கொல்லுதல் போன்றவை இவர்கள் மீது நடந்ததாக சந்தேகப்படும் அறிக்கைகள் வெளியாகி உள்ளதோடு இவைகளுக்கு எதிரான போராட்டங்களும் நடந்துள்ளன.

- கடந்த அக்டோபர் மாதம் 2008 செப்டம்பரில் டெல்லியிலுள்ள பாட்லாஹவுஸ் என்னுமிடத்தில் 2 இளைஞர்களும் 1 காவல் அதிகாரியும் சுட்டுக்கொல்லப்பட்டதை விசாரிக்கக் கூறிய மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

- டெல்லியில் செப்டம்பர் 2008ல் தொடர்ந்து நடந்த குண்டுவெடிப்புகளில் இந்த 2 இளைஞர்களும் சம்மந்தப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

**ஐக்கிய நாடு சபைகளின் சிறப்பு நல்லுறவு அதிகாரி எழுதிய அறிக்கையில் எல்லைப்பாதுகாப்பு இராணுவத்தினர் நீதிமன்ற உத்தரவு இல்லாமலே பல நபர்களை கொன்று விடுவதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.**

**பாதுகாப்பு படை, ராணுவம் மற்றும் மாவோயிஸ்டுகள் இடையில் நடந்த வன்முறை சம்பவங்கள்:** மத்திய இந்தியா மற்றும் சத்தீஸ்கரில் நடந்த சண்டை என்பதானது மாவோயஸ்யிடுகள் மற்றும் காவலர்களுக்கு இடையே நடந்ததாகும். இந்த சண்டை மற்ற மாநிலங்களுக்கும் பரவலாயிற்று. இரண்டு பக்கமுமே பொது மக்களை அடைத்து வைத்து சித்ரவதைப்படுத்தி கொன்றனர். சால்வாஜிடும் மிலிசியா என்னும் பாரா மிலிடரி மாநில அரசினாலேயே வளர்த்தெடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இதனால் ஏறத்தாழ 40,000 ஆதிவாசிகள் நிரந்தரத் தங்குமிடம் இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் 20,000 பேர் பக்கத்து மாநிலமான ஆந்திரபிரதேசத்தில் அங்கும் இங்குமாய் திரிந்து வாழ்கிறார்கள், மனித உரிமை காவலர்கள் அரசின் இந்த அநியாயங்களை வெளிப்படுத்தினார்கள் என்பதற்காக அரசு அதிகாரிகளால் தொடர்ந்து துன்பப்படுத்தப்படுகிறார்கள்.

- ஆதிவாசிகளின் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் சமூகபொருளாதார கலாச்சார உரிமைகளுக்காக பணியாற்றும் மருத்துவரான பினாயக் சென், மே மாதம் 2 வருட சிறை வாசத்திற்கு பின் ஜாமினில் விடுதலை செய்யப்பட்டார். இவர் சத்தீஸ்கரிலுள்ள சால்வாஜீடும் பற்றி விமர்சிப்பவரும் ஆவார். மாவோயிஸ்டுகளுக்கு உதவி செய்வதாக தொடர்ந்து இவர் குற்றம் சாட்டப்படுகிறார்.
- செப்டம்பர் 17ஆம் தேதி 6 கிராமத்தினரை கொன்றதோடு காச்சன் பள்ளியிலுள்ள அவர்களின் வீட்டையும் காவல் அதிகாரிகள் எரித்துவிட்டனர். காச்சன்பள்ளி என்பது சத்தீஸ்கரிலுள்ள தாண்டிவாடா என்னும் மாவட்டத்தைச் சேர்ந்தது.
- அக்டோபர் 1ஆம் தேதி அன்று 9 கிராமத்தினர்கள் காவல் அதிகாரிகளால் கொல்லப்பட்டனர். இந்த 9 நபர்களும் கோம்பாடு என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அதிலும் 4 நபர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இந்த கிராமமும் தாண்டிவாடா மாவட்டத்தைச் சேர்ந்தது.
- டிசம்பரில் கோப்பாக்குஞ்சம் என்ற நபர் கைது செய்யப்பட்டார். இவர் வனவாசி சேத்னா ஆஸ்ரம் என்னும் அரசுசாரா நிறுவனத்தைச் சேர்ந்தவர். இந்நிறுவனம் ஆதிவாசிகளின் புலம் பெயர் தலை தடுப்பதும் சத்தீஸ்கரில் நடந்த கலகத்தில் வீடு இழந்தோர்களுக்கு உதவி செய்யும் நிறுவனம் ஆகும். இந்த நிறுவனத்தின் கட்டிடங்களை மே மாதத்தில் நொறுக்கித் தள்ளினர் அரசு அதிகாரிகள்.

இந்தக்கலகம் மேற்கு வங்காளம் வரை பரவியது ஏறத்தாழ 8,000 ஆதிவாசிகள் வீடு இழந்ததோடு தற்காலிக முகாம்களிலும் சிலர் தங்கி இருக்கிறார்கள்.

- செப்டம்பரில் மேற்கு வங்காள அதிகாரிகள் 23 பெண்களை மாவோயிஸ்டுகள் என்று கூறி கைது செய்தனர். பின்னர் மாவோயிஸ்டுகள் பிடித்து வைத்திருந்த காவல் அதிகாரிக்கு பிணையாக 14 பேரை விடுதலை செய்தனர்.
- அக்டோபரில் மாவோயிஸ்டு தீவிரவாதிகள் துப்பறியும் அதிகாரி ஒருவரை கடத்திச்சென்று கொன்று போட்டதோடு காயமடைந்த அவருடைய உடம்பை அருகிலுள்ள ஜார்க்கண்ட் மாநில ஹைவே ஒன்றில் போட்டு விட்டுச் சென்றனர்.

**சட்டத்தை மீறிய கொலைகள்:** வடகிழக்கு மாநிலங்களில் அதிலும் குறிப்பாக மணிப்பூர் மற்றும் அஸ்ஸாமில் ராணுவ பிரிவுகள் ஏற்படுத்தும் சிறு சிறு கலகங்களில் பலர் சட்டத்திற்கு புறம்பாக கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வடகிழக்கு மற்றும் காஷ்மீர் பகுதிகளில் தொடர்ந்த போராட்டங்களுக்கு பின்பும் இராணுவ அதிகாரிகள் இராணுவத்திற்கான சிறப்பு அதிகாரச் சட்டம் 1958ஐ திரும்பப் பெறாமலே இருக்கின்றனர். ஐக்கிய நாடு சபைகளின் சிறப்பு நல்லுறவு அதிகாரி எழுதிய அறிக்கையில் எல்லைப்பாதுகாப்பு இராணுவத்தினர் நீதிமன்ற உத்தரவு இல்லாமலே பல நபர்களை கொன்று விடுவதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

- கௌகாத்தியில் அஜி என்னும் தின பத்திரிக்கையின் ஆசிரியர் அணில் மசூந்தால் என்பவரை துப்பாக்கி எந்திய ஒரு நபர் மார்ச் மாதத்தில் யுனெட்டர் லிபரேஷன் பிராண்ட் என்னும் அமைப்புக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் அமைதி பேச்சு வார்த்தை ஆரம்பித்ததின் பின் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

- மே மாதத்தில் சத்தீஸ் லைட்வோம்கோபாம் பேபாம் கொணன்ட் ரோசிங் என்னும் இம்பாலைச் சேர்ந்த இருவரும் அஸ்ஸாம் ரைபில் நபர்களால் மணிப்பூரில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு பின் இனம் தெரியாத இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.
- ஜீலையில் மணிப்பூர் காவல் அதிகாரிகள் சஞ்சசித்துன்காம் என்பவரையும் ரபினாதேவி என்ற கர்ப்பிணிப் பெண்ணையும் இம்பாலில் உள்ள கெளவை ராம்பாண்டு பஜாரில் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள். அதை வீடியோவில் பார்க்கும் போது அந்த நபரை கைது செய்த பின் கொன்றது தெரியவருகிறது.

**கட்டுப்பாடு இல்லாத கைதுகளும் காவலில் வைத்தலும்:** ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நடைபெற்ற போராட்டங்களின் போது 10 மனித உரிமை காவலர்களை மணிப்பூர் அதிகாரிகள் கைது செய்ததோடு அவர்களுடைய அலுவலகங்களையும் திடீர் தாக்குதல் செய்தனர். அவர்களுள் ஜிட்டனயும் நாம் அந்த வருட இறுதிவரை சிறையில் அடைக்கப்பட்டார் மற்றும் 90 நபர்கள் பாதுகாப்பு காவல் என்னும் பெயரில் அடைக்கப்பட்டு வைத்தனர்.

**வணிக நிறுவனங்களின் பொறுப்பின்மை:** நாடு முழுவதும் நலிந்த வகுப்பினர் வணிக நிறுவனங்களின் பொறுப்பற்ற தன்மையால் பாதிக்கப்பட்டதை அரசினால் காப்பாற்ற முடியவில்லை.

**போபால்:** 25 வருடத்திற்கு முன் அதாவது 1984ல் நடந்த போபால் விஷவாயு கசிவுக்கு பின்னர் உலகிலேயே மிக மோசமான தொழிற்சாலை பேரழிவு இது. தற்போதும் உள்ளூர் வாசிகள் அதன் பாதிப்பால் துயருருகிறார்கள், மேலும் நீதிக்காக பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அரசின் செயல்கள் யாவும் போதுமானதாக இல்லாததோடு நஷ்டஈடும் போதாததாகவும் கசிவு நிகழ்ந்த இடம் இன்னும் அசுத்தப்படுத்தப்பட்டு இருப்பதோடு பாதிப்பு அடைந்தவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் அரசால் எதுவும் செய்யப்படாமல் இருக்கிறது.

**கட்டாய வெளியேற்றம்:** பல மாநிலங்களில் நலிந்த வகுப்பினர் நிலமற்ற விவசாயிகள் மற்றும் ஆதிவாசிகள் போன்றவர்கள் வெளியேறுமாறு அச்சுறுத்தப்படுகிறார்கள். அவர்களுடைய இடங்கள் தொழிற்சாலைகளுக்கும், வணிக நிறுவனங்களின் திட்ட செயல்பாடுகளுக்கும் கொடுக்கப்படுகிறது. ஆதிவாசிகளுக்கு என்றே இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குறிக்கப்பட்டிருந்த இடங்களிலிருந்தே வெளியேற்றப்படுகிறார்கள். கட்டாயமாக்கப்பட்ட பொது விசாரணையில் கூட அவர்களுக்கு தேவையான தகவல்கள் கொடுக்கப்படுவதில்லை. மேலும் முடிவெடுக்கும் விஷயங்களிலும் அவர்களை அரசு அதிகாரிகள் கலந்து ஆலோசிக்கவில்லை.

**ஆதிவாசிகளுக்கு என்றே இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குறிக்கப்பட்டிருந்த இடங்களிலிருந்தே வெளியேற்றப்படுகிறார்கள். கட்டாயமாக்கப்பட்ட பொது விசாரணையில் கூட அவர்களுக்கு தேவையான தகவல்கள் கொடுக்கப்படுவதில்லை. மேலும் முடிவெடுக்கும் விஷயங்களிலும் அவர்களை அரசு அதிகாரிகள் கலந்து ஆலோசிக்கவில்லை.**

- டோங்கிரியாகோள் மற்றும் பிற ஆதிவாசி வகுப்பினர் ஒரிஸாவிலுள்ள நியாம்கிரி என்னுமிடத்தில் அரசு அதிகாரிகளுக்கு எதிரான போராட்டத்தை மீண்டும் துவங்கினர். இந்த போராட்டம் என்பது சுற்றுச்சூழல் சம்பந்தமானதாகும். அந்த இடத்தில் யு.கே.விலுள்ள வேதாந்தா ரிசோசர்ஸ் மற்றும் ஒரிஸ்ஸா சுரங்க கழகம் இரண்டும் இணைந்து பாக்சைடு அரங்கம் நடத்துவதற்காக அவ்விடத்தில் வசித்த ஆதிவாசிகளை வெளியேறுமாறு அதிகாரிகள் கேட்டதற்கிணங்க நடத்திய போராட்டம் அது.

**அளவுக்கு மீறிய அதிகாரம்:** பல மாநிலங்களில் நலிந்த பிரிவினர்களின் போராட்டங்களை அடக்குவதற்காக காவல்துறை அளவுக்கு மீறிய அதிகாரங்களை பயன்படுத்தினர். கிராமங்களிலுள்ள நிலம் மற்றும் சுற்றுச்சூழல், உரிமைகளை பாதுகாப்பதற்காக பிரச்சாரத்தில் ஈடுபடும் மனித உரிமை போராளிகளை காவல்த்துறை கைது செய்வது காவலில் வைப்பது, பயமுறுத்துவது கட்டாயப்படுத்துவது போன்ற அளவுக்கு அதிகமான அதிகாரங்களை பயன்படுத்துகிறார்கள்.

- நவம்பரில் ஆதிவாசித் தலைவர்களான சிங்கன்ன மற்றும் ஆன்டு நாசிக்கா இருவரையும் காவல்த்துறை சுட்டுக்கொன்றது. இவர்கள் இருவரும் ஒரிசாவில் கோரத்பூர் மாவட்டத்திலுள்ள நாராயண்பட்னாவிலுள்ள ஆதிவாசி சங்கம் என்னும் ஒரு நிறுவனத்தைச் சார்ந்தவர்கள். இந்நிறுவனம் ஆதி வாசிகளின் நில உரிமைக்காக பணிபுரிய கூடியதாகும். இந்த இரண்டு நபர்களும் காவல்துறை ஆதிவாசிகளை எப்படி காட்டுமிராண்டித்தனமாய் நடத்துகிறது என்று கூறி கண்டன ஆர்ப்பாட்ட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டனர். காவல்துறை அந்நிகழ்ச்சியை தாக்குதல் என்று விவரித்திருந்தது.

**மனித உரிமைகள் மற்றும் நீதிக்கான இந்திய நிர்வாகம் சர்வதேச நீதிக்கான மக்கள் நீதிமன்றம் வெளியிட்ட அறிக்கையில் 2900 மக்கள் காஷ்மீர் கலகத்தின் போது காணாமல் போனதாக கூறப்படுகிறது.**

- அக்டோபரில் மத்தியப் பிரதேச போலீஸ் “நர்மதாவைக் காப்போம்” என்ற இயக்கத்தின் தலைவர்கள் அமைதியாய் போராட்டம் ஒன்றை நடத்திய போது அவர்கள் மீது வன்முறையாக நடந்து கொண்டதோடு 20 தலைவர்களையும் கைது செய்தது.
- ஆகஸ்டு மாதத்தில் ஒரிசா அதிகாரிகள் கம்யூனிஸ்டு கட்சியை சேர்ந்த அப்பே சாகு என்பவரை விடுதலை செய்தது. இவர் 10 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டாலும் அவர் செய்தது இதுதான். தென் கொரிய ஸ்டீல் பிளான்ட் நிறுவனத்திற்காக அங்கே வசித்தவர்களை கட்டாய வெளியேற்றம் செய்ததை கண்டித்து நடத்திய கண்டனம் ஆர்ப்பாட்டம்.

**தண்டனை விலக்கு:** இந்திய அரசாங்கம் முன்பு நடந்த பல மனித உரிமை மீறல் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்கத் தவறிவிட்டது.

### 1984 படுகொலை:

1984ல் அப்போதைய பிரதம மந்திரி கொலை செய்யப்பட்ட போது 3,000க்கு மேற்பட்ட சீக்கியர்கள் வட இந்தியாவில் (டெல்லி உட்பட) கொன்று குவிக்கப்பட்டனர். திட்டமிட்டு நடந்த இப்படுகொலையில் 20 நபர்களை தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

- ஜெகதீர் டைட்டில்லர், சஜன்குமார் இருவரையும் டெல்லியில் நடந்த படுகொலைக்கு காரணமானவர்களாக CBI கருதி வழக்குத் தொடுப்பதற்கு பொதுமக்களிடமிருந்து வந்த அழுத்தமே காரணமாகும். இருந்தாலும் ஆரம்பத்தில் அவர்களிடம் சாட்சியங்கள் ஏதும் இல்லை என்று சி.பி.ஐ (CBI) யால் சொல்லப்பட்டது. ஆனால் படுகொலையை எதிர்த்து கண்டனம் செய்தவர்கள் ஆளும் கட்சியால் இருந்த காங்கிரஸ் கட்சியிலிருந்து அந்த இரண்டு நபர்களையும் பொதுத்தேர்தலில் போட்டியிடவிடாமல் வலுவாக அழுத்தம் கொடுத்து தடுத்துவிட்டார்கள்.

### மனித உரிமை மீறல்கள்:

பஞ்சாப்பில் 1984 முதல் 1994 வரையும் அஸ்ஸாமில் 1998 முதல் 2001 வரையும் நீதிமன்ற உத்தரவின்றி கொலைகளும் பல நபர்களை காணாமல் போக்கிவிடுவதுமான மனித உரிமை மீறல்கள் நடத்தியவர்கள் வழக்கு ஏதும் இல்லாமல் தப்பித்தே வந்தார்கள். 1989லிருந்து காஷ்மீரில் நடந்த கலகங்களின் போது ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல்போனது நிகழ்ந்த போதும் யாரும் வழக்கிற்கு கொண்டுவரப்படவில்லை. மனித உரிமைகள் மற்றும் நீதிக்கான இந்திய நிர்வாகம் சர்வதேச நீதிக்கான மக்கள் நீதிமன்றம் வெளியிட்ட அறிக்கையில் 2900 மக்கள் காஷ்மீர் கலகத்தின் போது காணாமல் போனதாக கூறப்படுகிறது.

### வகுப்புக்கலவரம்:

2002ஆம் வருடம் குஜராத்தில் நடந்த தாக்குதலின் போது சிறுபான்மையினரான முஸ்லீம்களின் மீதும் மற்ற மனித உரிமை மீறல்களுக்கும் காரணமாய் இருந்தவர்கள் மீது எவ்வித வழக்குகளும் தொடுக்கப்படவே இல்லை. இருந்த ஒன்றிரண்டு வழக்குகள் மீதும் மேற்கொண்டு நடவடிக்கைகள் என்று இந்த வருடத்தில் முன்னேற்றம் எதுவும் இல்லை.

- இஸ்ரத், ஜகான மற்றும் மூவரை குஜராத் போலீஸ் 16 ஜீன் 2004 அன்று கொலை செய்ததை “இரக்கமற்ற கொலைகள்” என்று நீதிபதியின் விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது இருந்தபோதும் இந்த அறிக்கையை உயர்நீதிமன்றத்தில் சிறப்பு ஆய்வுக் குழு ஒன்றை ஏற்படுத்தி குஜராத் அரசாங்கம் சவாலுக்கு உட்படுத்தியது. இஸ்ரத் ஜகான் குடும்பத்தினர் உச்சநீதிமன்றத்தில் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தடைசெய்யப்பட்டிருக்கிறது.

ஏறத்தாழ 15,000 மக்கள் இதில் பெரும்பான்மையினர் கிறிஸ்தவர்கள். ஒரிசாவில் நடந்த வன்முறை கலவரத்தில் தேசிய இந்து நிறுவனங்களால் வீட்டிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டனர். அந்த வருடகடைசியில் பாதிப்பேர்க்கு மேல் இன்னும் வீடு திரும்பாத நிலையில் நீதி விசாரணை முடிவடையாமலும் தாக்குதல் செய்து விரட்டியவர்கள் மீது வழக்கு எதுவும் தொடுக்கப்படாமலே இருக்கிறது.

பாரதிய ஜனதா பார்ட்டியின் 68 தலைவர்கள் மற்றும் தேசிய இந்து நிறுவனத்தை சேர்ந்தவர்களே 1992ல் அயோத்தியில் பாபர் மசூதி இடிப்புக்கு காரணம் என்று ஒரு அதிகார பூர்வமான அறிக்கை கூறுகிறது. இன்றுவரை அவர்கள் மீது எந்த குற்றநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வேறு சில மாநிலங்களிலும் வன்முறைதாக்குதல்கள் நடத்தியவர் மீது எந்தவித தண்டனையும் அளிக்கப்படவே இல்லை.

காஷ்மீரில் காவல்துறையும் பாராமில்டரி என்று சொல்லப்படும் இராணுவ பிரிவான ஒரு படையும் போராட்டக் கண்டனம் தெரிவித்த ஒரு குழுவினரை ஜீன் மாதத்தில் தாக்குதல் நடத்தியதில் 150 மக்கள் படுகாயமுற்றனர். ஒரு மனிதர் உயிரிழந்தார். போராட்டக் கண்டனத்தில் மக்கள் கோரியது சோப்பியான் என்னும் ஊரில் இரண்டு பெண்களை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தி கொலையும் செய்ததில் பாரா மிலிடரி படையின் தொடர்பு இருக்கிறது என்று கூறி நேர்மையான

விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். ஆனால் சி.பி.ஐ. (CBI) அறிக்கையில் பாலியல் பலாத்காரம் எதுவுமில்லை நீரில் மூழ்கி இறந்தனர் என்று முடிக்கப்பட்டிருந்தது. இதன் மீது சுதந்திரமான விசாரணை தேவை.

**பாகுபாடு:**

**தலித்கள்:** இந்தியாவில் பல மாநிலங்களில் தலீத் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தாக்குதலுக்கு உட்படுவதும் சமூக காரியங்களில் தள்ளி வைக்கப்படுவதும் சுகாதாரம், கல்வி மற்றும் சட்ட சேவைகளில் பாகுபாடு காட்டப்படுவது தொடர்கிறது. இவைகளை செய்பவர்கள் மீது தண்டிப்பதற்கான சிறப்புச் சட்டம் பல்லில்லாத பாம்பாகவே இருக்கிறது.

- ஆகஸ்ட் மாதத்தில் நளந்தா மற்றும் ஜகனாபாத் மாவட்டங்களில் நில உடைமை வகுப்பினர்கள் 4 தலித்களுக்கு உணவு மற்றும் அடிப்படை பொருட்கள் கிடைக்காமல் செய்து அதன் காரணமாக அந்த நால்வரும் உயிரிழந்தனர்.
- ஏப்ரல், மே மாதங்களில் நடந்த பொது தேர்தலில் பீஹார், குஜராத், ஆந்திர பிரதேஷ் போன்ற மாநிலங்களில் அச்சுறுத்தப்பட்டும், வன்முறைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

ஏப்ரல் 23ஆம் தேதி அன்று பீகாரிலுள்ள மதுபனி மாவட்டத்தில் தலித் வகுப்பினரைச் சேர்ந்த 74 குடும்பத்தினர் இம்சிக்கப்பட்டார்கள். இதில் 300 பேர் வீடு இழந்தார்கள்.

**சிறுபான்மைக்குழுவினர்:** கர்நாடகாவில் இந்து தேசியக் குழுவினர் சிறுபான்மையுனர்க்கு சொந்தமான வழிபாட்டுத் தளங்களை தாக்குதல் நடத்தினர். இதில் நகரத்தில் வசிக்கும் கலப்பிண தம்பதிகளையும், பெண்களையும் குறிவைத்துத் தாக்கினர்.

- ஜனவரி 25ஆம் தேதி இந்திய தேசிய குழுவினரான ஸ்ரீராமசேனா மங்களுரில் ஒரு பொது இடத்தில் 10 நபர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

**பணியாளர்களின் உரிமைகள்:** கிராமப்பகுதிகளில் வறுமையில் வாழும் மக்களுக்கு வருடத்தில் 100 நாட்கள் வேலைக்கான உத்தரவாதச் சட்டம் இந்தியாவில் சில மாநிலங்களில் நல்ல முறையில் நடைமுறைப் படுத்தப்படுகிறது, இருந்தாலும் நடைமுறைப்படுத்துவதில் உள்ளுர்வாசிகள் மிகவும் விழிப்புடன் இருந்தால்தான் செயல்படுத்தமுடிகிறது. மனித உரிமை காப்பாளர்கள் கண்காணிக்கும் போது அவர்கள் மீது வன்முறை அவிழ்த்து விடப்படுகிறது.

- பிப்ரவரி 10ஆம் தேதி மத்திய பிரதேசத்திலுள்ள ஆதிவாசி தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த ஷமீம்மோடி தொழிலாளர்களுக்கான உரிமைகளைக் கோரி அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்டார். இவர் 21 நாட்கள் சிறையில் வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். ஜீலை மாதத்தில் இந்த அம்மையாரின் அலுவலகத்தை அரசியன் காவல் மற்றும் வனத்துறை முற்றுகையிட்டு 11 ஆதிவாசிகளை தங்கள் பாதுகாப்பில் வைத்துக் கொண்டனர். ஷமீம் மோடி உயிருக்கு ஆபத்து என பயமுறுத்தப்பட்டார். மும்பையில் வனத்துறையைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்கள் ஆட்களை வைத்து அவர் மீது தாக்குதல் நடத்தினர்.

**ஒரின, ஈரின செயற்கையாளர்கள் மற்றும் திருநங்கையர் உரிமைகள்:** ஜீலை மாதத்தில் இந்திய குற்றவியல் சட்டத்திலுள்ள பிரிவு 307 டெல்லி உயர் நீதிமன்றத்தில் தள்ளி வைக்கப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாகும். பிரிவு 377 ஒரின செயற்கையை பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின்போது குற்றம் என வகைப்படுத்தி தண்டிக்க வழிவகுத்தது. இது பாகுபடுத்த கூடியது என்றும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒழுங்குக்கு எதிரானது என்று ஜீலை தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. முறைப்படி அந்த பிரிவினை ரத்து செய்தல் அல்லது நீக்கிவிடல் இன்னும் தீர்மானிக்கப்படாததாக இருக்கிறது.

**மரணதண்டனை:** இந்த வருடத்தில் யார் மீதும் மரணதண்டனை நிறைவேற்றப்படவில்லை என்றாலும் நீதிமன்றங்கள் 50 நபர்கள் மீது மரணதண்டனை விதித்து தீர்ப்பு அளித்திருக்கின்றனர்.

**ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் வருகை/ அறிக்கை:** ஆம்னெஸ்டி இன்டர் நேசனல் பிரதிநிதிகள் பிப்ரவரி / மார்ச் மற்றும் ஆகஸ்ட் /செப்டம்பரில் பார்வையிட்டனர்.

- இந்தியா தன்பொறுப்பிலிருந்து தரப்பிக்கப்பார்க்கிறது. கழகங்கள், போபால் பேரழிவில் (ASa 20/002/2009)
- இந்தியா நியாம்கிரியிலுள்ள டோங்கிரியா கோந்து மக்களை அச்சுறுத்தி வெளியேற்றியதற்கு ஆதரவாய் இருந்த அதிகாரிகள் வேதாந்தா ஒரிஸ்ஸா சுரங்கக்கழகம் அமைக்க கொடுத்திருந்த ஆணையை திரும்பபெறகோரி திறந்த / வெளிப்படையான கடிதம் (ASa 20/004/2009)
- இந்தியா அதிகாரிகள் மிகையான அதிகாரம் மேற்கு வங்கத்தில் பயன்படுத்துவதை தவிர்க்க (ASa 20/006/2009)
- இந்தியா முன்னேச்சரிக்கை கைதுகளை மனித உரிமை காப்பாளர்கள் மீது மணிப்பூரில் நடத்தியதை திரும்ப பெறுதல் (ASa 20/019/2009) ✸

**– Amnesty International Report 2010**

# அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**அமெரிக்க ஐக்கிய நாடுகள்:**

| | | |
|---|---|---|
| அமெரிக்க அதிபர் | : | பாரக்.எச்.ஒபாமா (ஜார்ஜ்புஸ்ஸினுடைய இடத்திற்கு ஜனவரியில் வந்தார்) |
| மரணதண்டனை | : | நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது |
| ஜனத்தொகை | : | 314.7 மில்லியன் |
| சராசரி வாழ்நாள் | : | 79.1 வருடங்கள் |
| குழந்தை இறப்பு (5 வயதுக்கு கீழ் ஆ/பெ) | : | 7/8 –1000க்கு |

**ஒபாமாவின் புதிய நிர்வாகம் ஜனவரி 22, 2010ல் குவாண்டானாமோ சிறையை மூடுவதாக உறுதி கூறி இருந்தபோதிலும் 2009ஆம் வருடம் இறுதி வாக்கில் அங்கு அடைக்கப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 198 ஆகும். ஆராய்ச்சி செய்த யார்யார்க்கு தண்டனை வழங்கலாம், யார், யாரை தண்டிக்கலாம், எவ்வெவர்களை மற்ற நாடுகளுக்கு மாறுதல் செய்து அனுப்பலாம் என்னும் பணி மேல் மட்ட அளவில் துவங்கியுள்ளது. வருடமுடிவில் குவாண்டானாமோவில் இருக்கும் நபர்களில் பெரும்பாலானோர் ஹேபிஸ் கார்பப்ஸ் மனுச்செய்தவர்கள் அவர்களில் பெரும்பாளானோர் அவர்களடைய வழக்கு விசாரணைக்காக காத்திருக்கிறார்கள். ஏறத்தாழ 5 நபர்கள் திருத்தப்பட்ட இராணுவ கமிஷனர்கள் நடத்தும் விசாரனைக்காக அனுப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் பெடரல் நீதிமன்ற விசாரணைக்கு மாற்றப்பட்டிருக்கிறார். மத்திய புலன் ஆய்வு முகமை (CIA) மற்றும் இரகசிய காப்பு அறையில் உள்ளவர்கள் பற்றிய விவரங்கள் மற்றும் சித்ரவதை, மோசமாக நடத்தப்படுதல் போன்ற இன்னபிற விவரங்கள் வெளியாவது அதிபர் ஒபாமாவினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.**

**சிறைச்சாலைகள், காவலில் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் முறையான ஆவனம் இன்றி நாடு கடந்து வந்திருப்பவர்களை தங்க வைத்திருக்கும் இடங்கள் போன்றவற்றின் நிலைமை குறித்து கவலையும் அக்கரையும் இருக்கிறது, மிக அதிகப்படியான பாதுகாப்பு காவலுக்குள் இருக்கும் ஆயிரக்கணக்கான கைதிகளை தனிமைப்படுத்தி வைத்திருக்கும் நிலையானது சர்வதேச தர அளவினற்கும் குறைவாக இருக்கிறது. மின் அதிர்வு கருவிகளை வைத்து விசாரணை நடத்தும் போலீஸ் நடவடிக்கையால் ஒரு டஜன் நபர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். குறைந்தது 105 நபர்கள் மரணதண்டனை விதிக்கப்பட்டும் 52 நபர்கள் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டும் உள்ளது இந்த வருடத்தில்.**

**நாடு, இனம், சிறுபான்மை இனம் போன்றவற்றின் அடிப்படையில் பெண்கள் கர்ப்பணியாகி இருக்கும்போதோ அல்லது பிரசவ நேரத்தின்போதோ உயிர் இழப்பது அதிகமாக இருப்பது வறுமை மற்றும் ஆரோக்கிய கவனிப்பில் இருக்கின்ற பாகுபாட்டினை வெளிப்படுத்தி காட்டுகின்றது.**

**பயங்கரவாதத்திற்கு மாற்று மற்றும் நீதி பரிபாலனம்: குவாண்டானாமோவில் காவலில் இருப்போர்:**
ஜனவரியில் முடிவற்ற காவலில் ஏதும் விசாரணையின்றி அமெரிக்க கடற்படை தளமான குவாண்டானாமோவில் வேற்று நாட்டவர்கள் ''சண்டையில் ஈடுபட்ட எதிரிகள்'' என்று பிரித்து அழைக்கப்பட்டு வருபவர்களானவர்கள் அங்கு வந்து 8 வருடங்கள் ஆகப்போகின்றன. ஜனவரி 22ல் அதிபர் ஒபாமா மேலான ஆணை ஒன்றை பிறப்பித்து இந்தக்கடுங்காவல் இருப்பு ஒரு வருடத்திற்குள் மூடப்பட்டு விடும் என்று அறிவித்தார். எவர்எவர் விடுவிக்கப்படலாம் அல்லது தண்டிக்கப்படலாம் மற்றும் ''சட்டபூர்வமான'' முறையில் நபர்களை விசாரிக்கவோ விடுவிக்கவோ பிறநாடுகளுக்கு மாறுதல் செய்யவோ முடியாது என்பதை கண்டறியுமாறு ஆணையிட்டு இருந்தார்.

அமெரிக்க அதிகாரிகள் காவலில் இருந்தவர்களை அமெரிக்க நாட்டின் முக்கிய பகுதிகளுக்குள் செல்லவோ அல்லது அவர்களை விடுவித்து தங்களுடைய நாடுகளுக்குச் செல்லவோ தொடர்ச்சியாக மறுப்பு தெரிவித்து வந்தார்கள்.

பிப்ரவரி மாதத்தில் மேல் முறையீட்டு நீதிமன்றம் 2008ல் பெடரல் நீதிபதியால் 17 யுகூார் (Uighu) நாட்டைச சேர்ந்த நபர்களை கவானடானாமோவில் 2002 முதல் சிறை வைக்கப்பட்டிருந்த அவர்களை சைனாவுக்கு போகக்கூடாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. யுகூார் நாட்டு 4 நபர்களை சிறை வைக்கப்பட்டிருந்த அவர்களை பெர்மூடாவிற்கு மாற்றினர். மீண்டும் அக்டோபரில் 6 நபர்கள் பாலவ்வில் விடுதலை செய்தனர்.

நவம்பர் 18 ஆம் தேதியன்று அமெரிக்கா அதிபர் ஒபாமா தான் ஏற்கனவே அறிவித்திருந்த சிறைவாசிகளை விடுவிக்கும் தேதிப்படி செயல்படமுடியாது என்பதை ஒத்துக்கொண்டார். அந்த வருட இறுதியில் 198

சிறைவாசிகள் கான்டானா மோவில் இருந்தனர். 2009ஆம் வருடத்தில் 49 சிறைவாசிகள் மாறுல் செய்யப்பட்டார்கள். முகமது அல்ஹனாசி என்னும் யாமினி மனிதர் காண்டானாமோவா சிறையில் இறந்து விட்டார் என்பதோடு சிறையில இறந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்தது. இந்த நால்வர் தற்கொலை செய்ததாக கூறப்படுகிறது.

### இராணுவ கமிஷன்கள்:

அக்டோபர் மாதத்தில் காண்டானாமோவில் சிறை வைக்கப்பட்டிருந்தவர்களை மீள் ஆய்வு செய்து 2010 ஆம் வருடம் இயற்றப்பட்ட சட்டத்தை (தேசிய இராணுவ அதிகாரச் சட்டம்) மாற்றி இராணுவ கமிஷன் சட்டம் என்று பெயரிடப்பட்டது.

நவம்பர் மாதத்தில் உயர் அதிகார அரசு வழக்கறிஞர் (அட்டானி ஜெனரல்) நீதித்துறை 5 காண்டானாமோவா சிறைவாசிகளை வழக்கு விசாணைக்கு வந்ததாக அறிவித்தார்.

- கனடா நாட்டைச் சேர்ந்த ஒமர்காதர் என்பவர் அமெரிக்க காவலில் வைக்கப்பட்டிருந்தவர் வருட இறுதியில் இராணுவ கமிஷன் நடத்திய வழக்கு விசாரணையில் போரில் பங்கெடுத்துக்கொண்டதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அதுவும் அவர்தம் 15வது வயதில் இந்த குற்றம் புரிந்ததாக விசாரணையின்போது வந்தது.

### பெடரல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டவர்கள்:

- ஜீன் மாதம் அகமது ஹால்பான் ஹைலானி என்பவர் அமெரிக்காவின் இரகசிய சிறைவாசத்தில் 2 வருடம் இருந்ததின் காண்டானாமோவா சிறைக்கு 2006ல் மாற்றப்பட்டார். மீண்டும் நியூயார்க்கிலுள்ள சிறைக்கு மாற்றப்பட்டார். பெடரல் நீதிமன்ற விசாரணைக்காக மாற்றப்பட்டிருக்கிறார் என்பதோடு 1998ல் டான்ஸாமியா மற்றும் கென்யா நாடுகளில் இருந்த அமெரிக்க தூதரகங்களின் மீது குண்டு வீசியதாக கூறப்பட்ட குற்றமாகும் அது.
- நவம்பரில் உச்சநீதிமன்ற வழக்கறிஞரான எரிக்கோல்டர் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில் கூறப்பட்டதாவது காலீத்சேக் முகமது, வாலிதுபின் ஆட்டாஸ், ராம்ஜி பின் அல்சிபா, அலிஅப்தல் அவீஸ் மற்றும் முஸ்தபா அல்ஹவாசா ஆகிய 5 வருடம் பெடால் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு விசாரிக்கப்படுவார்கள் இவர்கள் மீதான குற்றச்சாட்டு என்னவென்றால் 2001 ஆம் வருடம் செப்டம்பர 11 ஆம் தேதி நடந்த தாக்குதலுக்கு இவர்கள் காரணம் என்பதாகும். இந்த 5 நபர்களும் இன்னமும் காண்டானாமோவாவின் சிறையில் தான் இந்த வருடம் முடிய இருந்தார்கள்.
- மார்ச் மாதத்தில் அலிகாலே காலா அல் மாரி என்னும் நபர் குவாடாரி நாட்டை சேர்ந்தவர். இவர் 2003ம் வருடத்திலிருந்து அமெரிக்க இராணுவ காவலில் வைக்கப்பட்டிருந்து பெடரல் நீதிமன்ற விசாரணைக்காக மாற்றப்பட்டிருக்கிறார். வெளி நாட்டு பயங்கரவாத நிறுவனத்துக்கு பொருட்களும் வளங்களும் கொடுத்துதவியதாக குற்றச்சாட்டு 100 மாத சிறை தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. நீதிபதி ஒன்பது மாதங்கள் குறைத்துள்ளார். அலி, அல் மாரி ஜீல் 23, 2003ல் இருந்து 2004 வரை அவர் இருந்த கடுமையான சிறைவாசத்தை எண்ணி இந்த தண்டனை குறைப்பு என்று சொல்லப்படுகின்றது.

### ஹேபியஸ் கார்பஸ் மனு விசாரணை கவான்டானாமோ சிறை வாசிகளுக்கு:

கவான்டானாமோ சிறையில் 18 மாத சிறை தண்டனைக்குப் பிறகு பௌமிடின் புஸ் வழக்கில் அங்குள்ள கைதிகளுக்கு ஹேபியஸ் கார்பஸ் மனு மீதான விசாரணை போன்று விசாரணை நடத்தலாம் என்று சொல்லி அவர்களை சட்ட முறைப்படிதான் வைக்கப்பட்டுள்ளார்களா என கேள்வி எழுந்தது பலருடைய வழக்குகள் இன்னும் விசாரணைக்கு வராமலே உள்ளது. விசாரணைக்கு வந்து தீர்ப்புகள் சொல்லப்பட்டவற்றில் அங்கு சிறை வைக்கப்பட்டவர்கள் சட்டத்துக்குப் புறம்பாக அங்கு வைக்கப்பட்டுள்ளனர் என தெரிந்து அப்படி தீர்ப்பு வந்த பின்பும் அங்கேயே வைக்கப்பட்டுள்ளனர். நிர்வாகத்திலுள்ளவர்கள் எப்படி செய்வதென்று தெரியாதிருப்பதால் நவம்பரில் உச்ச நீதிமன்ற அரசு வழக்கறிஞர் செனட் விசாரணையின் போது கூறியது என்னவென்றால்; கவான்டாநாமோ வழக்குகள் யாவும் மீளாய்வு செய்து முடிந்து விட்டால் நிர்வாகத்தினர் சிறைக் கைதிகளை "போருக்கான சட்டம்" வாயிலாக அவர்களை அங்கேயே வைத்திருக்க முயற்சிப்பார்கள். வேறு வழக்கின் கீழ் கொண்டுவரும் அவசியம் இருக்காது.

### பாங்ராம் மற்றும் ஆப்கானிஸ்தானிய சிறை:

அமெரிக்க ராணுவம் நூற்றுக்கணக்காக இளைஞர்களை குழந்தைகளை வழக்கறிஞர்களோ நீதிமன்றங்களுக்கோ போக வழியில்லாமல் பாங்ராம் விமானதளத்தில் (ஆப்கன்); அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் (ஆப்கானிஸ்தான் அறிக்கையையும் காண்க). அமெரிக்காவின் பெடறல நீதிமன்றங்களில் பாங்ராம் சிறைவாசிகள் அமெரிக்க

நீதிமன்றங்களை அணுகலாமா என்று பற்றி சட்ட விவாதம் தொடர்கின்றது.

ஏப்ரல் 2ம் தேதியன்று பெடரல் நீதிமன்ற நீதிபதி பாங்ராம் சிறையிலிருக்கும் நால்வரில் மூவரின் ஹேபியஸ் கார்பஸ் மனுவின் வைக்கப்பட்டிருப்பதாக கூறினார். அந்த நால்வரில் மூவர் ஆப்ஹானிஸ்தானத்தவரல்லர். ஒருவர் மட்டுமே ஆப்ஹானிஸ்தர். செப்டம்பரில் இந்த தீர்ப்பை எதிர்த்து அரசு மேல் முறையீடுக்கு சென்றது. விசாரணைக்கே வரவில்லை.

**விசாரணை முறைகள் என்னவென்றால் கட்டாயமாக நிர்வாணமாக்குவது தூங்கவே விடாமல் வெய்தல் நீரினுள் மூழ்கடிப்பது தூண்டுதலுக்காக) போன்றனவையாகும்.**

### துப்பறியும் பிரிவின் இரகசிய தங்கல் திட்டம்:

ஏப்ரல் மாதத்தில் மத்திய புலனாய்வு முகமை வெளியிட்ட அறிக்கை கூறுவது; அதிபர் ஒபாமா கையெழுத்திட்ட ஆணையின்படி இனிமேல் மத்திய புலனாய்வு விரிவான கேள்வி விசாரணை முறைகளை கைக்கொள்ளாது அல்லது கறுப்பிடங்கள் இனிமேல் தொடரப்படாது. ஆனால் மத்திய புலனாய்வு "குறுகிய காலம் தங்க வைக்கும்" அதிகாரத்தை விட்டுவிடாது என்றும் கூறியது.

ஏப்ரலில் நிர்வாகம் வெளியிட்ட நான்கு பதிவுக்குறிப்பில் (2002 முதல் 2005 வரை) இரகசிய புலனாய்வு முகமையின் கீழ் சிறை வாசம் செய்பவர்களை விரிவான விசாரணை செய்வதற்கான சட்ட ஒப்புதலை அவர்கட்கு வழங்குகின்றது. அந்த விசாரணை முறைகள் என்னவென்றால் கட்டாயமாக நிர்வாணமாக்குவது தூங்கவே விடாமல் வெய்தல் நீரினுள் மூழ்கடிப்பது தூண்டுதலுக்காக) போன்றனவையாகும். மற்றவைகளை விட இந்த நீர் சிகிச்சை அபு சிபைதாவுக்கு 80 முறைகளுக்கு மேலும் காரிது ஹேக் முகமதுவுக்கு 183 முறை நடந்தது என்றும் 2002ல் வெளிவந்த பதிவுக்கு குறிப்பும் 2003ல் வெளிவந்த பதிவுக் குறிப்பும் கூறுகிறது. அதிபர் ஒபாமாவும் உச்ச நீதிமன்ற அரசு வழக்கறிஞரும் கூறுகிறார்கள். "நல்ல நம்பிக்கையில் வெளியிடப்படும் பதிவுக்குறிப்பு யாரையும் தண்டிக்காது".

ஆகஸ்டு மாதத்தில் இரகசிய புலனாய்வு கையாளும் சித்ரவதை மற்றும் துன்புறுத்தல் போன்றன பொது மக்களின் பார்வைக்கு வந்தது. உச்ச நீதிமன்ற அரசு வழக்கறிஞர், "பெடரல் சட்டங்கள் விசாரணைக் கைதிகளை விசாரிக்கும் போது மீறப்பட்டதா என ஆரம்ப மீளாய்வு செய்யப்படும்" என்றார்.

மேலும் சில விளக்கங்களை கைதிகளை விசாரிக்கும் முறையற்ற கூறியது. இது நாட்டின் பாதுகாப்புக் கருதி செய்யப்படுவதாகவும் கூறியது.

### கைதி விசாரணை மற்றும் மாறுதல் பற்றிய கொள்கை:

ஆகஸ்டு மாதத்தில் ஜனவரி 22ல் வெளிவந்த ஆணையின்படி விசாரணை விதங்கள் மற்றும் கைதிகளை இடம் மாற்றுவதை பற்றிய கொள்கைக்காக ஏற்படுத்தப்பட்ட சிறப்பு பணிபடை கொடுத்த சிபாரிசுகளை அமெரிக்க அதிபரின் முன் வைக்கப்பட்டது. இது கைதிகளை விசாரிப்பதற்காக ஏற்பட்ட உயர்மட்ட குழு மற்றும் ராணுவ வழிகாட்டுக்குழுவின் ஆலோசனைகளும் உள்ளடக்கியதாகும்.

### தண்டனையின்மை மற்றும் வழியின்மை:

அதிபர் 'புஸ்' காலகட்டத்தில் நடந்த தான மனித உரிமை மீறல் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கான தண்டனை இன்மை மற்றும் இன்னும் அப்படியேதானிருக்கிறது இதை புஸ் நிர்வாகம் "பயங்கரவாதத்தின் மீதான போர்" என்று விவரிக்கின்றது.

ஜனவரி மாதத்தில் இராணுவக் கமிசனுக்கான அதிகாரி சூசன். ஜே.கிராப்போர்டு கவான்டானாமோ சிறைவாசி முகமது.அல்.குவாடானியை சித்ரவதை செய்ததாக வந்த மனுவை தள்ளுபடி செய்தார். வருட முடிவில் கூட இந்த வழக்கில் குற்ற விசாரணை எதுவும் நடைபெறவே இல்லை.

நவம்பர் 4ம் தேதி இத்தாலி நாட்டிலுள்ள மிலன் அமெரிக்காவைச் சேர்ந்த புலன் விசாரணை அதிகாரிகள் 22 நபர்கள் மற்றும் இராணுவ அதிகாரி ஒருவர் உசாமா முஸ்தபா நசீர் (அபு ஓமர்) என்பவரை பலவந்தமாக கடத்தி எகிப்து கொண்டு சித்ரவதை செய்த குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் தான் என்று தீர்ப்பளிக்கப்பட்டனர். அமெரிக்க அதிகாரிகள் பற்றிய விசாரணை அவர்கள் இல்லாத போது தான் நடந்தேறியது.

### சித்ரவதை மற்றும் சில கொடுமைபடுத்துதல் மின்விசையின் மூலம் அதிர்ச்சி அளித்தல்:

குறைந்தது 47 மக்கள் போலீசாரின் அடி உதையால் உயிரிழந்தனர். 2001ம் ஆண்டில் இருந்து இப்படி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 390 ஆகும். இவர்களில் மூவர் பதின் பருவத்தினர் (ஆயுதமில்லாத) இவர்களை சின்ன தவறுகளுக்காக 49 முறை தொடர் மின் அதிர்வுகட்கு உள்ளாக்கி மே மாதம் டெக்சாஸ் என்னுமிடத்தில் உயிரிழக்க வைத்தனர். இதுவும் இதுபோன்ற வழக்குகளும் பற்றி தகுந்த பாதுகாப்பு உள்ள கருவிகளை விசாரணைக்கு பயன்படுத்துமாறு கவலையான கருத்துக்கள் எழும்பின.

- விருந்தொன்றில் கலந்து கொண்ட 15 வயதே ஆன பிரட் எல்டர் என்பவர் அங்க சரியாக நடந்து கொள்ளவில்லை என்பதற்காக மார்ச் மாதம் மிச்சிகன் மகாணம் ''பே''சிட்டி என்னும் ஊரில் மின் அதிர்வுக்கு உட்படுத்தப்பட்டு உயிரிழந்தார். அந்த பையன் மிகவும் சிறிய உடற்கட்டமைப்பு கொண்டவர். போதையின் வசத்தால் திணறி இறந்தார். மின் அதிர்வும் இறப்புக்கு துணை புரிந்தது என்று அறிக்கை (இறப்புக்கான காரண அறிக்கை) கூறுகின்றது.

**சிறைச்சாலைகளின் நிலவரங்கள்:**

ஆயிரக்கணக்கான சிறைக் கைதிகள் நீண்ட காலம் தனிமைப்படுத்தப்பட்டு மிக அதிகப் பாதுகாப்புச் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தார்கள். மனிதர்களுக்கான சர்வதேசத் தரங்களுக்கு குறைவான அளவில் தான் இந்த அதிகப்பாதுகாப்பு சிறைகளின் தரங்கள் இருந்தன.

- இல்லினாய்ஸ்லிலுள்ள சிறைக் கைதிகளின் கூடாறமான டம்ஸ்ன் CMAX நிலை: பல கைதிகள் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தனர். பலர் பத்துவருடங்கட்கு மேலாக தனிமைப்படுத்தப்பட்டு ஒரு நாளில் 23 மணி நேரங்கள் நான்கு சுவர்களையே பார்த்த வண்ணம் அவர்களின் நிலைமை சரிப்படுத்தவோ மீளாய்வு செய்யவோ இல்லாது பூட்டிவைக்கப்பட்டிருந்தனர். சிறைக் கைதிகளுக்கு வெளியுலகத் தொடர்பே இல்லாமல், எந்த வேலையும் செய்யவிடாமல் கல்வி மற்றும் பொழுது போக்கு அம்சம் என எதுவுமில்லை. செப்டம்பர் மாதத்தில் குடிமைச் சமூகம் மற்றும் மனித உரிமைக் குழுக்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் புது இயக்குநர் (திருத்திட வேண்டிய சிறை அமைப்பு) 10 விதிகள் அடங்கிய ஒரு புதிய திட்டத்தை கொண்டு வந்தார். அவற்றில் இட மாறுதல், வழக்கை விசாரித்தல் (ஒவ்வொரு கைதியின்) மனநிலை ஆரோக்கியம் கண்டறிதல், ஒவ்வொருவரும் கல்வி வளர்ச்சி, மேம்பாடு போன்றவற்றில் ஈடுபடுதல் போன்றன அடங்கும்.

அக்டோபரில் அமெரிக்க பெடரல் நீதிமன்றம் ஒரு சட்டம் இயற்றியது. அதன் படி கருவுற்றிருக்கும் பெண்களுக்கு சிறையில் விலங்குகள் பூட்டி அடைக்கக் கூடாது என்னும் இதை அரசியமைப்புச் சட்டமாக்கி உச்ச நீதிமன்றமும் மற்ற கீழ்நிலை நீதி மன்றங்களிலும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**புலம் பெயர்ந்தோர் மற்றும் அடைக்கலம் வேண்டுவோர்:**

பல்லாயிரக்கணக்கான புலம் பெயர்ந்தோர் (இவர்களில் அடைக்கலம் தேடி வந்தவர்களும் அடங்குவர்) வழக்கமான முறையில் அடைத்து வைக்கப்பட்டனர். இது சர்வதேச விதிகளுக்கு முரணானதுமாகும். மிகக் கொடுமையான முறையிலும், அரோக்கிய வசதிகட்கு வழியின்றியும் உடற்பயிற்சி மற்றும் சட்ட உதவிகளின்றி சிறையில் வாடிக்கிடந்தனர். ஆகஸ்டு மாதத்தில் அரசு பலவித மாற்றங்களை அறிவிப்பு செய்தது. வெளியிலிருந்து வந்தவர்களை நடத்துவது மற்றும் அடைத்து வைக்காமல் மாற்று வழிகள் காண்பது போன்றவற்றை அறிவித்தாலும் நாடு முழுவதற்குமான தரநிர்ணயம் மற்றும் நிர்வாக முறைகளை சட்ட பூர்வமாக நடைமுறைப்படுத்த தவறிவிட்டது.

**ஐம்பத்தி இரண்டு நபர்கள் இந்த வருடத்தில் மரண தண்டனையில் கொல்லப்பட்டார்கள். இது அமெரிக்க உச்ச நீதிமன்றம் 1976ல் மரண தண்டனையை விட்டுவிடுவதாக காலந்தாழ்ந்த கொடுத்த சட்டத்தின் பின்னர் 1188 நபர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.**

மே மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் (UN) நல்லுறவுத் தொடர்பாளர் புலம் பெயர்ந்த மக்கள் தங்கும் இட அமைப்பில் சரியான சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி இன்மை காரணமாக அங்குள்ள மக்கள் இறப்பது குறித்து தன் கவலையை வெளிப்படுத்தி உள்ளார். அலுவலக அறிக்கைகள் 74 என்று வெளியிடுவதைவிட அதிக இறப்புகள் 2003ம் வருடத்திலிருந்து நிகழ்ந்துள்ளதாகவும் அவர்களிடம் நிகழும் இறப்புகள் குறித்து சரியான தகவல்கள் வெளியிட வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார்கள்.

**ஆரோக்கியம் மற்றும் மறுஉற்பத்தி குறித்த உரிமைகள்:**

மே மாதத்தில் டாக்டர் ஜார்ஜ்டில்லர் என்பவர் கான்சாவிலுள்ள விச்சிதா என்னும் இடத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார். கருச்சிதைவுக்கு எதிரான ஒரு செயல்பாட்டாளரால் இவர் கொல்லப்பட்டார். டாக்டர் டில்லர் பெண்களுக்கு கருவளர்ச்சி முடிந்த நிலையில் சட்ட பூர்வமான கருக்கலைப்பு நடத்துவதற்காக பலமுறை அவருக்கு மிரட்டல் வந்த வண்ணம் இருந்தது. டாக்டர். டில்லர் கொலையுண்ட பின்பு பெடரல் அரசு கருக்கலைப்பு செய்யும் பிற மருத்துவர்களுக்கு அதிகப்பாதுகாப்பு அளித்தது, இருப்பினும் மிரட்டல்களும் வன்முறைகளும் டாக்டர்களுக்கும் அவர்கள் நடத்தும் கிளினிக்குகளுக்கும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

**ஆரோக்கியத்துக்கான உரிமை – பிரசவத்தின் போது இறத்தல்:**

இந்த வருடத்தில் பிரசவம் சம்பந்தமான தவிர்த்திருக்கக்

கூடிய இறப்பு விகிதம் மிகவும் அதிகம் பிரசவம் சம்பந்தப்பட்ட ஆரோக்கியக் கவனத்தில் பெருத்த பாகுபாடு காட்டப்படுகிறது. இது பெரும்பாலும் இனம், நாடு மற்றும் வருமானம் என்னும் அடிப்படையில் நிகழ்கிறது. உதாரணமாக வெள்ளை இனப்பெண்களின் இறப்பு விகிதத்தைவிட நான்கு மடங்கு இறப்பு விகிதம் ஆப்பிரிக்க–அமெரிக்க பெண்களிடம் காணப்படுகிறது. 65 வயதுக்கு மேம்பட்ட பெண்களுக்கான ஆரோக்கியக் காப்பீடு 52 மில்லியன் பெண்களுக்கு இல்லை. இது கடந்த வருடத்தைவிட அதிகமானதாகும்.

**கியூபா மீதான வணிகத் தடை உத்தரவு:**

அமெரிக்க அதிபர் ஒபாமா பயணம் சம்பந்தமான கட்டுப்பாடுகளை தளர்த்தியதன் காரணமாக கியூபா – அமெரிக்கர்கள் தங்கள் உறவினர்களை கியூபாவில் சென்று பார்க்கவும் வீட்டினர்க்கு பணம் அனுப்பவும் முடிகிறது இருந்தபோதிலும் கடந்த 47 வருடங்களாக கியூபாவுக்கு இருந்த வணிக தடை உத்தரவு நிடிப்பதன் காரணமாக கியூபாவில் மக்களுக்கு மருந்துகள் கிடைப்பது அரிதாகி விடுவதால் லட்சக்கணக்கான மக்களுக்கு அபாயமான சூழலில் உள்ளனர். (கியூபாவின் அறிக்கை காண்க)

**மனச்சாட்சி பூர்வ மறுப்பாளர்கள்:**

ஆகஸ்டு மாதத்தில் அமெரிக்க ராணுவத்திலுள்ள குழுத்தலைவரான டிராவிஸ்பிசப் என்பவர் தன் மத நம்பிக்கை காரணமாக ஆப்ஹானிஸ்தானில் பணி புரிய மறுத்ததற்காக 1 வருடம் சிறையிலமைக்கப்பட்டார். அவருடைய மனு மனசாட்சி பூர்வ மறுப்பு என்னம் நிலை இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. சமீப காலங்களில் அமெரிக்க ராணுவ வீரர்களில் பலர் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் மீது போருக்கு செல்ல மறுத்ததால் கைது செய்யப்பட்டனர். இவரும் அவர்களில் ஒருவராவர்.

**நியாயமற்ற விசாரணைகள்:**

ஆகஸ்டு மாதத்தில் அமெரிக்காவிலுள்ள தற்காலிக விடுதலை பெற்றுச் செல்பவர்கட்கான கமிஷன் லியோனாடு பெல்ட்டியர் என்பவரை தற்காலிக விடுதலை செய்ய மறுத்துவிட்டது. அவர் கொலை செய்ததாக 1977ல் கூறப்பட்டு கைது செய்யப்பட்டதற்கு பல கண்டனங்கள் எழுந்தது. முந்தைய இந்திய அமெரிக்க இயக்க செயல்பாட்டாளர் ஒருவர் 32 வருடம் ஜெயிலில் உள்ளார். பெடரல் புலன் விசாரணை முகவர் இருவரை 1975 ஜீனில் கொன்றதாக அவர் மீது குற்றச்சாட்டு.

ஜீன் மாதம் அமெரிக்க உச்ச நீதிமன்றம் ஐந்து நபர்கள் தம் மீது விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து செய்திருந்த மனுவை விசாரணைக்கு மறுத்தது. 2001ம் வருடம் இந்த ஐவரும் கியூபா அரசின் பதிவு செய்யாத முகவர்களாக பணி செய்தனர் என்பது அவர்கள் மீது சொல்லப்பட்ட குற்றங்களாகும். மே 2005ல் ஐக்கிய நாடுகள் சபையின் பணிக்குழு தங்கள் மீது சுமத்தப்பட்ட காவல் உத்தரவு நியாய மற்றது ஏனெனில் அவர்கள் மீது நியாயமான விசாரணை நடைபெறவில்லை என கூறியது.

**மரண தண்டனை:**

ஐம்பத்தி இரண்டு நபர்கள் இந்த வருடத்தில் மரண தண்டனையில் கொல்லப்பட்டார்கள். இது அமெரிக்க உச்ச நீதிமன்றம் 1976ல் மரண தண்டனையை விட்டுவிடுவதாக காலந்தாழ்ந்த கொடுத்த சட்டத்தின் பின்னர் 1188 நபர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். மீண்டும் 1977 முதல் கைதிகளை கொல்லுவதற்கான சட்டம் திரும்ப வந்துள்ளது. ஒகியோவில் செப்டம்பர் மாதம் ரோமெல் புரூம் என்னும் 53 வயது ஆப்பிர்க்க அமெரிக்க மனிதரை மரண தண்டனை நிறைவேற்ற முயற்சித்து அது தோல்வியில் முடிந்துள்ளது. லெதல் ஊசியேற்றும் குழு இரண்டு மணி நேரமாக முயற்சித்து ஏற்றுவதற்கான நரம்பு கிடைக்காமல் பின்பு முயற்சியைக் கைவிட்டனர். நவம்பரில் அரசு அதிகாரிகள் மூன்று மருந்துகளை லெதல் ஊசியில் பயன்படுத்துவதிலிருந்து ஒன்றாக குறைத்து விட்டதாக அறிவித்து இருந்தனர். இந்த முறையின் வழியாக டிசம்பர் எட்டாம் தேதியன்று கென்னத் பிரோஸ் என்பவர் கொல்லப்பட்டார்.

டெக்ஸாஸ் 24 நபர்களையும் ஜீனில் 200வது மரணதண்டனையையும் கவர்னர் ரிக் பெர்ரியின் கீழ் இந்த ஆண்டில் நடத்தப்பட்டது. இந்த வருடத்தில் கவர்னர் பெர்ரி டெக்ஸாஸ்ல் 2004ல் கமரூன் வில்லிங்காம் என்பவரை மரண தண்டனைக்கு உட்படுத்தியதில் தீவிர விமர்சனத்துக்கு ஆளாகி உள்ளார். விளக்கங்கள் வெளியாகி வருவது என்னவென்றால் தீ வைத்து கொல்லப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு அவர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அது எதிர்பாராத தீ விபத்தினால் நிகழ்ந்ததாக இருக்கலாம் என்பதே.

ஒன்பது நபர்கள் மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் இந்த வருடம், அவர்கள் குற்றமற்றவர்கள் என்ற அடிப்படையில் 1976ம் வருடத்திலிருந்து இதுபோன்று 130 நபர்களுக்கு மேலான நபர்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மார்ச் மாதம் நியூ மெக்சிகோ மாகாணம் மரண தண்டனையை ஒழிப்பதற்கான சட்ட கொண்டு வந்து அம்மா காண கவர்னர் கையெழுத்திட்டத்தின் பேரில் அமெரிக்காவின் 15 வது அரசு மரணதண்டனை ஒழித்ததாக ஆகியுள்ளது. ✸

**– Amnesty International Report 2010**

## கடலூர் மாவட்டம் நடுவீரப்பட்டு காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்ட ரவி த/பெ.கலியன் என்பவரை சித்திரவதை செய்து அடித்துக் கொலை செய்த காவல் மரணம் குறித்து, காவல் நீதி மன்றும் சித்ரவதை ஒழிப்புப் பிரச்சாரக் குழுவின் உண்மையறியும் அறிக்கை.

கடந்த **19.8.2010** அன்று, தினத்தந்தி, தினகரன், தமிழ்முரசு ஆகிய பத்திரிகைகளின் மூலம், வெளியான செய்தியான கடலூர் மாவட்டம் விருதாச்சலம் வட்டம், தாண்டவன், குப்பத்தில் வசிக்கும் ரவி த/பெ. கலியன் என்ற கிறவர் இனத்தைச் சேர்ந்த வரை பண்ருட்டி D.S.P. மாசனமுத்து தலைமையிலான காவல்துறையினர் அடங்கிய குழு **16.8.2010** அன்று விசாரணைக்கு அழைத்து செல்வதாக கூறி கடத்தி சென்று சித்ரவதை செய்து அடித்துக் கொன்றுள்ளனர். இச்செய்தியின் அடிப்படையில் காவல் நீதி மற்றும் சித்ரவதை ஒழிப்புப் பிரச்சாரம்; மனித உரிமை அமைப்பு ஆகிய அமைப்புகளிலிருந்து **4** நபர்கள் அடங்கிய உண்மையறியும் குழு பாதிப்புக்குள்ளான ரவியின் மனைவி, பெற்றோர்கள் உறவினர்கள், விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களின் உறவினர்கள், அரசு அதிகாரிகள், காவல் துறையினர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் நேரிலும், தொலைபேசியிலும் சேகரித்த தகவலைச் கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை.

**உண்மையறியும் குழுவில் பங்கு பெற்றவர்கள்:–**

M. ஹீமாயுன்கபீர், விருதுநகர் மாவட்ட அமைப்பாளர்,CCJAT, தெய்வேந்திரன், செயலக உறுப்பினர், CCJAT, சென்னை. S.ராஜேஷ், செயலக உறுப்பினர், CCJAT சென்னை. இரா.பாபு, மாவட்ட மனித உரிமை காப்பாளர், இளைஞர்களுக்கான சமூக விழிப்புணர்வு மையம் (SASY)

**சம்பவத்தின் பின்னணி:**

விழுப்புரம் மாவட்டம், திருநாவலூரில் உள்ள கூட்டுறவு வங்கியில் நகைகள் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் குறித்து விழுப்புரம்– கடலூர் மாவட்ட போலீஸ் அதிகாரிகள் தலைமையில் போலீஸ் விசாரணைக் குழு ஒன்றை விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. மாசானமுத்து அமைத்துள்ளார். இக்குழுவில் கடலூர் மாவட்டத்தில் இருந்து பண்ரூட்டி காவல் துணைக் கண்காணிப்பாளர் பிரசன்னகுமார், நெல்லிக்குப்பம் காவல் ஆய்வாளர் பாண்டியன், காவல் உதவி ஆய்வாளர் சந்திரசேகர், புதுப்பேட்டை காவல் உதவி ஆய்வாளர் திருவேங்கடம் உள்ளிட்ட பல போலீசார் இடம் பெற்றுள்ளனர். இக்குழுவில் உள்ள மேற்சொன்ன போலீசார் தான் மேற்சொன்ன ரவியை அவரது வீட்டில் இருந்து அழைத்துச் சென்று நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் வைத்து கடுமையாகத் தாக்கிச் சித்ரவதைச் செய்துள்ளனர். சித்ரவதையைத் தாங்க முடியாமல் மேற்சொன்ன ரவி காவல் நிலையத்திலேயே இறந்து விட்டார். ரவியை சித்ரவதை செய்த போது அவருடன் கைது செய்யப்பட்ட உறவினர்களும் பார்த்துள்ளனர். மேலும் கடலூர் அரசு மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டிருந்த ரவியின் உடம்பில் பல இடங்களில் காயம் இருந்துள்ளதை உறவினர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட பலரும் பார்த்துள்ளனர்.

ரவி சித்ரவதை செய்து கொல்லப்பட்டதை மறைத்து காவல் துறையினர் தங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக **18.08.2010** அன்று மாலை **3.30** மணியளவில், சாத்திப்பட்டு கிராமத்தில் உள்ள முந்திரித்தோப்பில் போலீசார் காவலில் இருந்து ரவி தப்பி ஓடும் போது தவறி கீழே விழுந்து இறந்து விட்டார் என காடாம்புலியூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்றை போலீசார் பதிவுச் செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட ரவியின் மனைவி தன் கணவரைப் போலீசார் அடித்துக் கொலை செய்துவிட்டனர் என மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்துள்ளார். தற்போது பண்ரூட்டி நீதித்துறை நடுவர் எண். **2**ன் நீதிபதி ஈஸ்வரன் விசாரணை மேற்கொண்டு வருகிறார். நீதிபதியிடம் வாக்குமுலம் கொடுத்துள்ள ரவியின் குடும்பத்தினரையும் உறவினர்களையும் காவல்துறையினர் மிரட்டி வருகிறார்கள்.

**I. உண்மையறியும் குழுவினர் சந்தித்து பேசிய நபர்கள்:– (பாதிக்கப்பட்டவர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள்):கஸ்துாரி வயது 30 க/பெ ரவி, மே/பா. தண்டபாணி, பரிந்தல் கிராமம், உளுந்துார்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம்:** நானும் எண் கணவர் ரவியும் கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், நெய்வேலி அருகில் உள்ள தாண்டவன்குப்பம் கிராமத்தில் கடந்த இரண்டு மாதங்களாக வசித்து வருகிறோம். எங்களுக்கு சந்திரலேகா(6), பெரியநாயகி(2) என்ற இரு பெண் குழந்தைகளும் சக்தி, முகேஷ்(4) என்ற இரு

ஆண்குழந்தைகளும் உள்ளன. நாங்கள் இந்து குறவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். பன்றி வளர்ப்பதும் கூடை முடைவதும் எங்கள் பரம்பரைத் தொழில். என் கணவர் ரவியை பண்ரூட்டி துணைக்காவல் கண்காணிப்பாளர் திரு.பிரசன்ன குமார் தலைமையில் அமைக்கப்பட்ட தனிப்படை கடந்த 18.08.10ம் தேதி சித்திரவதை செய்து சட்ட விரேதமாக கொன்றனர். பிறகு என் கணவர் ரவி மேல் எந்தவித திருட்டுக்குற்றமும் கிடையாது. சுமார் 10 வருடங்களுக்கு முன் நானும் எனது கணவரும் சென்னையில் வசித்து வந்தோம். நாங்கள் கூலித்தொழிலாளியாக கட்டிட காண்ட்ராக்ட்களில் வேலை செய்து வந்தோம். அப்போது போலீஸ் என் கணவரைப்பிடித்து பொய் வழக்கு போட்டு ஜெயிலில் அடைத்தது. பிறகு அந்த வழக்கின் உண்மையான குற்றவாளி பிடிபட்ட பிறகு என் கணவரை விடுதலை செய்து விட்டார்கள். அதன் பிறகு போலீஸ் என் கணவரை தேடியது கிடையாது. எந்த வழக்கும் கிடையாது.

கடந்த 16.08.10 ம் தேதி இரவு நானும் என் கணவரும் குழந்தைகளும் வீட்டிற்குள் படுத்து உறங்கிக்கொண்டு இருந்தோம். இரவில் சுமார் 02.00 மணியளவில் சீருடை அணியாத இரு காவல் துறையினர் என் வீட்டிற்குள் அத்து மீறி நுழைந்து என் கணவரை பிடித்துக்கொண்டார்கள். எதற்காக என் கணவரைக் கைது செய்கிறீர்கள் என்று கேட்டேன். வந்தவர்கள் குடித்திருந்தார்கள். அவர்கள் என் கணவரை வலுக்கட்டாயமாக வெளியே இழுத்து வந்தார்கள். நான் என் கணவரை எதற்காக பிடிக்கிறீர்கள் என்றதற்கு வந்தவர்களில் ஒருவர் என்னை ஆபாசமாகத் திட்டினார். ஒருவர் என் கணவரை என்ன சாதி என்று கேட்டார்; நாங்கள் குறவர் சாதி என்று கூறினார். உடனே போலீஸ்காரர்கள் என் கணவரை எங்களுடன் வா என்று கூப்பிட்டார்கள். வெளியில் சீருடையில்லாத 5 போலீஸ்காரர்கள் இருந்தார்கள். ஒரே இருட்டாக இருந்ததால் அவர்களை என்னால் சரியாக அடையாளம் காண முடியவில்லை.

எங்கள் வீட்டில் இருந்த TVS வண்டியை போலீஸ்காரர்கள் எடுத்து ஒருவர் வண்டியை ஓட்ட எண் கணவரை நடுவில் அமர்த்திக்கொண்டு மற்றவர் கடைசியில் உட்கார்ந்து கொண்டு சிறிது தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்திற்கு என் கணவரை கூட்டிச்சென்றார்கள். அவர்கள் சென்றதும் சீருடையில்லாமல் வந்த மற்ற 5 போலீஸ்காரர்களும் என் வீட்டிற்குள் நுழைந்தார்கள். அவர்களில் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத ஒருவர் என் கழுத்தில் கிடந்த 5 பவுன் தங்கச்சங்கிலியை பறித்துக் கொண்டார். அதன் பிறகு என் வீட்டில் பீரோவில் இருந்த ஒரு பவுன் தோடு, மாட்டல் ஒரு பவுன், என் மகளின் 2 கிராம் தோடு, கால் கொலுசு அத்துடன் பன்றி விற்று வைத்திருந்த பணம் ரூ 40,000/– ஆகியவற்றை எடுத்துக்கொண்டார்கள். நீங்கள் எந்த ஸ்டேஷனில் இருந்து வருகிறீர்கள் என்று நான் கேட்டதற்கு குற நாயிக்கு அதையெல்லாம் சொல்ல வேண்டியதில்லை என்று சொல்லி விட்டார்கள். பேங்கில் கொள்ளை போய் விட்டது அதைப்பற்றி விசாரிக்கத்தான் என் கணவரை கூட்டிப்போவதாகச் சொன்னார்கள். அவர்கள் சென்றதும் பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து வந்தவர்கள் யார் என்று கேட்டார்கள். ஏதோ விசாரணைக்காக அழைத்துச் செல்கிறார்கள் என்று அவர்களிடம் கூறினேன்.

அடுத்த நாள் 17.08.10 ம் தேதி என் கணவரை யார் பிடித்துச் சென்றார்கள் எங்கு போய் தேடுவது என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த போது என் கணவரின் தங்கை சித்ரா காட்டுக் கூடலூரிலிருந்து வந்து தன் கணவர் கௌஞ்சியை இரவில் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த போது போலீஸ் பிடித்துக்கொண்டு போய்விட்டதாகச் சொன்னார். என் கணவரை நேற்று இரவு போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டு போன விஷயத்தை அவரிடம் சொன்னேன்.

அடுத்த நாள் 18.08.10ம் தேதி இரவு நானும் எனது குழந்தைகளும் வீட்டு வாசலில் தூங்கிக்கொண்டிருந்தோம். இரவு சுமார் 01.00 மணியளவில் ஒரு டாட்டா சுமோ எங்கள் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து 7 போலீஸ்காரர்கள் இறங்கினார்கள். அதில் ஒருவர் மட்டும் சீருடை அணிந்திருந்தார். சீருடை அணிந்திருந்த போலீஸ்காரர் மட்டும் என்னிடம் வந்து நீ தான் ரவியின் மனைவியா? உனக்கு எத்தனை குழந்தைகள் என்று கேட்டார். எனக்கு நான்கு குழந்தைகள் என்று சொன்னேன். அவர் உன் புருஷனை உன்னிடம் ஒப்படைக்க வேண்டும், இதில் ஒரு கையெழுத்து போடு என்று ஒரு பேப்பரை என்னிடம் நீட்டினார். என் புருஷனை என்ன செய்தீர்கள் என்று நான் கேட்டேன். உன் புருஷனை ஒன்றும் செய்யவில்லை, இந்த பேப்பரில் கையெழுத்துப்போடு உன் புருஷனை உன்னிடம் ஒப்படைத்து விடுகிறோம் என்று கூறினார். நான் படித்துப் பார்க்காமல் கையெழுத்து போட முடியாது என்று கூறிவிட்டேன். சீருடையில்லாமல் இருந்த போலீஸ்காரர் ஆபாச வார்த்தையால் திட்டிக் கொண்டே என் முதுகில் குத்தி கையெழுத்து போடச் சொன்னார். நான் மறுபடியும் கையெழுத்து போட மறுத்தேன். நீ இதில் கையெழுத்து போடாவிட்டால் உன்மேல் விபச்சார வழக்கு போட்டு உள்ளே தள்ளி விடுவேன் என்று கூறிக்கொண்டே என் ஜாக்கெட்டை பிடித்து இழுத்தார், என் ஜாக்கெட் கிழிந்து விட்டது. அவமானப்பட்ட நான் மேற்கொண்டு அவர்கள் எதுவும் செய்து விடக் கூடாது என்பதற்காக மானத்திற்கு பயந்து கையெழுத்து போட்டேன். அதன்பிறகு சீருடை அணிந்த பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த போலீஸ்காரர் நாளை காலையில் கடலூர் வந்து விடு, உன் புருஷன் பாடி ஆஸ்பத்திரியில் இருக்கு, RDO உன்னை

விசாரிப்பார், அதன்பிறகு உன் புருஷன் பாடியை வாங்கிக் கொள்ளலாம் என்று கூறி ஒரு சீட்டை என்னிடம் கொடுத்தார். அய்யய்யோ, என் புருஷனை கொன்று விட்டார்களே என்று நான் சப்தம் போட்டு அழுதேன். என்னுடைய அழுகை சத்தம் கேட்டு அந்த நடு இரவில் ஊர்மக்கள் என் வீட்டு முன் கூடினார்கள். இதைப்பார்த்த போலீஸ்காரர்கள் உடனே அங்கிருந்து போய் விட்டார்கள். என் கணவரை போலீஸ்காரர்கள் அடித்து சித்திரவதை செய்து கொன்று விட்ட விஷயத்தை 19.08.10ம் தேதி காலை 5.00 மணிக்கு தமிழ்நாடு குறவர் பழங்குடி மக்கள் சங்கத்தைச் சேர்ந்த ராஜீ என்பவருக்கு போன் செய்து கூறினேன். அவர் உடனே சென்னை சென்று அங்கிருக்கும் மாவட்டத் தலைவர் மூலமாக நீதிமன்றத்தில் போலீஸ் காரர்கள் மேல் வழக்கு போடும் படியும் அதன்பிறகு பாடியை வாங்கிக் கொள்ளலாம் என்றும் கூறினார். அவர் சொன்ன யோசனைப்படி நான் என் மாமனார் உதவியுடன் சென்னை சென்று சென்னை மாவட்ட அமைப்பாளர் கங்குலியைச் சந்தித்தேன். அவர் இப்போது வழக்குப் போட வேண்டாம், முதலில் பாடியை வாங்கி ஆக வேண்டிய காரியத்தை பார்த்துவிட்டு பிறகு வழக்கு, போடுவதைப் பார்க்கலாம் என்று கூறினார். உடனே நான் 20.08.10ம் தேதி கடலூர் அரசு மருத்துவ மனைக்குச் சென்றேன். என்னுடைய அனுமதி பெறாமல் என் கணவரின் உடலை பிரேத பரிசோதனை செய்து முடித்து விட்டார்கள். என் கணவரை விசாரணை என்ற பெயரில் காவல் துறையினர் சித்திரவதை செய்து கொன்று விட்டனர் என்று மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து புகார் செய்தேன். 20.08.10ம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் என் கணவரின் சொந்த ஊரான விழுப்புரம் மாவட்டம், உழுந்தூர்பேட்டை தாலுகா, பரிந்தல் கிராமத்தில் என் கணவரின் உடல் புதைக்கப்பட்டது. என் கணவரை போலீஸ்காரர்கள் தான் சித்திரவதை செய்து கொன்றார்கள் என்று வெளியில் யாரிடமும் சொல்லக் கூடாது என்றும் இந்த விஷயமாக மேற்கொண்டு எந்தவித வழக்கும் நீதிமன்றத்தில் போடக் கூடாது என்று போலீஸ்காரர்கள் என்னை மிரட்டி வருகிறார்கள்.

என் கணவர் புதைக்கப்பட்ட பிறகு நான் என் கணவர் சாவிற்கு நியாயம் கிடைக்க வேண்டி மனித உரிமை ஆர்வலர் மற்றும் தமிழ்நாடு குறவர் பழங்குடி மக்கள் சங்கத்தினர்கள் உதவியுடன் பலவித சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தேன். அதன் பிறகு 22.08.10ம் தேதி பரிந்தல் பஞ்சாயத்து தலைவர் திலகவதியின் கணவர் தேவ சேனாதிபதி என் கணவரின் அண்ணன் தண்டபாணியிடம் வந்து என் கணவரின் சாவு தொடர்பாக நான் எந்தவித சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தால் ரூ2/– லட்சம் பணம் எனக்கு தருவதாக எலவரசனூர் கோட்டை போலீசார் சொன்னதாக கூறியுள்ளார். எந்த குற்றமும் செய்யாத என் கணவரை விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று சித்திரவதை செய்து கொலை செய்த பன்ருட்டி துணைக் காவல் கண்ணாணிப்பாளர் பிரசன்ன குமார் தலைமையிலான தனிப்படையினர் மீது சட்டப்படி கொலை வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும். என்னையும் என் குடும்பத்தினரையும் நான் போலீசுக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்குகளையும், புகார்களையும் வாபஸ் வாங்க வேண்டுமென்று மிரட்டும் காவல் துறையினரிடமிருந்து பாதுகாப்பு தரப்பட வேண்டும். என் கணவரின் சாவுக்கு சரியான நிவாரணம் தரப்பட வேண்டும். தமிழக அரசு சரியான விசாரணை நடத்தி எனக்கு தகுந்த நீதி வழங்க வேண்டும்.

**தண்டபாணி, (வயது 43), த/பெ. கலியன், பரிந்தல் கிராமம், உளுந்தூர் பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம்:** நான் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இந்து குறவர் சமுதாயத்தைச் சேர்ந்தவன். என் உடன் பிறந்தவர்கள் மணி(40), ரவி(36), சித்ரா(27), ஜீவா(22) ஆகியோர்கள். கடந்த 15.08.10ம் தேதி போலீஸ்காரர்களால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட ரவி எனது இரண்டாவது தம்பி. நானோ என் குடும்பத்தினர்களோ இதுவரை எந்தவித சமூக விரோத செயல்களும் செய்ததில்லை.

கடந்த 18.08.10ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் என் வீட்டில் ஓலை முடைந்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு போலீஸ் வாகனம் என் வீட்டு முன் வந்து நின்றது. அதில் மூன்று சீருடை அணியாத காவலர்களும் சீருடை அணிந்த ஓட்டுநரும் இருந்தார்கள். திருநாவாலூர் காவல் நிலையத்தில் இருந்து வருவதாகச் சொன்னார்கள். அவர்களில் ஒருவர் என்னிடம் உன் பெயர் என்ன என்று கேட்டார். நான் தண்டபாணி என்று சொன்னவுடன், காவல் நிலையத்திற்கு உடனே எங்களுடன் வா உன்னை விசாரணை செய்ய வேண்டுமென்று கூறினார். நான் எந்தத்தப்பும் செய்யவில்லை எதற்காக காவல் நிலையம் வர வேண்டுமென்று கேட்டேன். அதெல்லாம் எங்களுக்குத் தெரியும், உனக்கு எதுவும் சொல்ல வேண்டிய அவசியமில்லை, வண்டியில் ஏறுடா என்று சொல்லி என்னை வண்டிக்குள் தள்ளினார்கள். அந்த வண்டி என்னை ஏற்றிக் கொண்டு இளவரசன் கோட்டை காவல் நிலையத்திற்கு சென்றது. அங்கேயே என்னை உட்கார வைத்து விட்டார்கள். மாலை சுமார் 6.30 மணியளவில் 6 சீருடை அணியாத காவலர்கள் என்னை ஒரு காரில் ஏற்றினார்கள். காவல் நிலையத்திலிருந்து கொடார் என்ற இடத்தில் உள்ள காவல் நிலைய குடியிருப்புக்கு அழைத்துச் சென்று அங்குள்ள சிறு அறையில் என்னை அடைத்து வைத்தார்கள். ஒரு காவலர் வந்து என் பெயர் மற்றும், குடும்ப விபரங்களை விசாரித்து விட்டுப்போனார். இரவு எனக்கு சாப்பாடு வாங்கிக் கொடுத்தார்கள். அடுத்த நாள்

19.08.10ம் தேதி பணிக்கு வந்த காவலர்கள் பல பேர் என்னைப் பற்றி விசாரித்துக் கொண்டே இருந்தார்கள். அடுத்த நாள் 20.08.10ம் தேதி மாலை சுமார் 4.00 மணிக்கு அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத ஒரு போலீஸ்காரர் வந்து என்னிடம் கடலூர் போக வேண்டும் உடனே புறப்படு என்று கூறினார். இன்னொரு அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத போலீஸ்காரரும் சேர்ந்து என்னை கெடார் காவல் நிலையக் குடியிருப்பில் இருந்து கூட்டிக் கொண்டு போனார்கள். அங்கிருந்து என்னை விழுப்புரத்திற்கு அழைத்து சென்றார். விழுப்புரத்தில் இருந்து கடலூர் செல்லும் பேருந்தில் என்னை ஏற்றி உட்கார வைத்தார்கள். பேருந்து விழுப்புரத்தை விட்டு கடலூர் செல்லும் வழியில் சிறிது துாரம் சென்றதும் ஒரு போலீஸ்காரருக்கு தொலை பேசி வந்தது. யார் பேசினார்கள் என்ன சொன்னார்கள் என்று எனக்கு தெரியவில்லை. உடனே நடுவழியில் பஸ்ஸில் இருந்து என்னை இறக்கினார்கள். என்னை திரும்ப கெட்டார் காவல் நிலைய குடியிருப்புக்கு அழைத்து வந்தார்கள். ஒரு வெள்ளைத்தாளில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் எதுவும் எழுதியிருக்கவில்லை. அதன் பிறகு அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத காவலர், என் தம்பி ரவியை விசாரணைக்காக அழைத்துச் சென்ற போது இறந்து விட்டார் என்று கூறினார். என் தம்பி ரவி இறந்த செய்தியைக் கேட்டு நான் பதறி அழுதேன். அதே காவலர் உன் தம்பி பாடியை உன்னிடம் ஒப்படைக்க வேண்டும் உடனே எங்களுடன் வா என்று அழைத்தார் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத காவலர்கள் 4 பேர் என்னை காரில் பரிந்தல் கிராமத்திற்கு அழைத்து வந்தார்கள். பரிந்தலில் சுமார் 100 க்கும் அதிகமான காவல்துறையினர் இருந்தனர். மாலை சுமார் 6.00 மணிக்கு என் தம்பி ரவியின் உடலை புதைத்து விட்டனர். அதன் பிறகு காவல்துறையினர் என்னை பரிந்தலில் விட்டு சென்றுவிட்டனர். அதற்குப்பிறகு24.08.2010 ம் தேதி ஒரு காரில் 4 போலீஸ்காரர்கள் சீருடை இல்லாமல் பரிந்தலுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவர் ஐயா, உடனே உன்னை விசாரிக்கனும்னு சொல்கிறார். உடனே வா என்று தன்னுடன் வருமாறு அழைத்தார். அவர்களிடம் ஐயா, எனக்கு 25.8.10ம் தேதி பண்ரூட்டி நீதிமன்றத்தில் என் தம்பி ரவியின் சாவு விஷயமாக விசாரணைக்கு ஆஜர் ஆகும்படி எனக்கு சம்மன் வந்திருக்கு என்று கூறினேன். அதெல்லாம் எங்களுக்கு தெரியாது வண்டியில் ஏறு என்று கூறி வண்டியில் ஏற்றிக் கொண்டு திருநாவலூர் காவலர் குடியிருப்புக்கு கூட்டிச் சென்றனர். அங்கேயே என்னை உட்கார வைத்து விட்டனர். மதிய உணவு வாங்கிக் கொடுத்தார்கள்.

அன்று இரவு அங்கேயே தங்க வைத்து விட்டார்கள். அடுத்த நாள் 25.08.10ம் தேதி மதியம் சுமார் 2.00 மணிக்கு அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத மூன்று காவலர்கள் ஒரு காரில் என்னை ஏற்றிக் கொண்டு பரிந்தல் கிராமத்திற்கு வந்து என் மனைவியிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டு என்னை அங்கேயே விட்டுச் சென்றுவிட்டனர். 26.8.10ம் தேதி நான் பண்ரூட்டி நடுவர் நீதிமன்றத்தில் ஆஜராகி என் தம்பி ரவியை காவல் துறையினர் சித்திரவதை செய்து அடித்துக் கொன்றதையும், என்னை விசாரணையில் ஆஜராகி போலீசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கவிடாமல் காவலர்கள் தடுத்து சட்டவிரோதக் காவலில் வைத்ததையும் வாக்குமூலமாக நீதிமன்றத்தில் அளித்தேன்.

**சித்ரா (33) கொளஞ்சி, காட்டுக்கூடலூர், அண்ணாசாலை, பண்ருட்டி தாலுகா, கடலூர் மாவட்டம்:** நான் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். என் கணவர் பெயர் கொளஞ்சி (45) எங்களுக்கு பெருமாள் (13), சாந்தி (10), ஞானவேல் (8) என்ற மூன்று குழந்தைகள். நாங்கள் தாழ்த்தப்பட்ட இந்து குறவர் சமுதாயத்தை சார்ந்தவர்கள். என் கணவர் பன்றி வளர்த்து மொத்தமாக விற்பனை செய்து குடும்பத்தை நடத்தி வருகிறார். நானும் அவருக்கு தொழிலில் உதவியாக இருந்து வருகிறேன். இதுவரை என் கணவர் மீது எந்த குற்றவழக்கும் எந்த ஒரு காவல் நிலையத்திலும் கிடையாது. எந்த குற்ற செயல்களிலும் என் கணவர் ஈடுபட்டது கிடையாது.

கடந்த 13.08.2010 அன்று நள்ளிரவு சுமார் 1.00 மணி அளவில் என் வீட்டுக்கதவை யாரோ தட்டினார்கள். உங்களை பத்தி நான் வெளியில் விசாரித்தேன். உங்க வீட்டுக்காரனை வெளியில் அழைத்துக் கொண்டு வா! என அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத காவலர் ஒருவர் கூறினார். நான் வீட்டுக்குள் சென்று என் கணவரை எழுப்பினேன். அவரிடம் உன்னை தேடி போலீஸ்காரங்க வந்திருக்காங்க வெளியில் நிக்கிறாங்க வா, என அழைத்தேன். என் கணவர் வெளியில் எழுந்து வந்தார். என் கணவரை பார்த்து ஒரு அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத காவலர், நீ கலியன் மருமகன் தானே உன்னை விசாரிக்க வேண்டும் என்னுடன் வந்துவிட்டு போய்விடு என கூறினார். நான் எங்க வீட்டுக்காரர் எந்த தப்பும் செய்யவில்லை அவரை எதற்கு விசாரிக்க வேண்டும் என கேட்டேன். உங்க மேல் எந்த தப்பும் இல்லை சும்மா விசாரித்து விட்டு அனுப்பிவிடுவோம் என்று அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத காவலர் கூறினார். மேலும் வீட்டுக்குள் படுத்திருந்த என் மூத்த மகன் பெருமாளை எழுப்பினார். நான் அவரிடம் அவன் படிக்கின்ற பிள்ளை விட்டுவிடுங்கள் எனக் கூறினேன் அதன் பிறகு என் கணவரை வெளியே அழைத்து வந்து என் வீட்டில் இருந்து சுமார் 20 அடி துாரத்தில் நிறுத்தி வைத்திருந்த வேனுக்கு அழைத்து சென்றார்கள். அந்த காவலர்களிடம் நீங்க எந்த ஸ்டேஷனில் இருந்து வந்திருக்கீங்க எனக் கேட்டதற்கு

எந்தப் பதிலும் கூறாமல், என் கணவரை வேனில் ஏற்றிக் கொண்டு சென்று விட்டார்கள். என் கணவரை காவல் துறையினர் அழைத்து சென்றது தொடர்பாக பழைய பஞ்சாயத்து தலைவர், சீனுவிடம் கூறினேன். அவர் காலையில் போன் போட்டுக் கேட்கிறேன் எனக் கூறினார். நான் வீட்டுக்கு வந்துவிட்டேன்.

14.08.2010 அன்று அதிகாலை சுமார் 4.30 மணியளவில் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 3 காவலர்கள் என் கணவரை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து வீட்டில் விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். நான் என் கணவரிடம் என்ன நடத்தது என விசாரித்தேன், நம்ம சொந்தகாரங்க ராமலிங்கம், விஜயகுமார், ரமேஷ், ரவி, சுந்தரமூர்த்தி ஆகியோர்களின் வீடு எங்க இருக்கு என கேட்டாங்க நான் அவர்கள் வீட்டுக்கு எல்லாம் போவது கிடையாது. வியாபாரத்திற்கு போகும் போது பார்ப்பேன் அவ்வளவுதான் எனக் கூறினேன். என்னை ஆத்தி இருப்பு வரைக்கும் அழைத்து சென்று பிறகு திரும்ப அழைத்து வந்து விட்டார்கள் எனக் கூறினார்.

15.08.2010 அன்று இரவு நான் என் பிள்ளைகள், என் கணவர் எல்லோரும் ஒன்றாக சாப்பிட்டுவிட்டு உறங்கினோம். காலை கண் விழித்து பார்த்த போது என் கணவர் வீட்டில் இல்லை. அவரை ஊர் முழுவதும் தேடிப்பார்த்தேன் கிடைக்க வில்லை. பிறகு பழைய தலைவரிடம் என் கணவர் காணவில்லை போலீஸ்காரர்கள் தான் அழைத்து சென்றிருப்பாங்க போலீசுக்கு போன் போட்டு கேளுங்க என கூறினேன். அவர் முத்தாண்டி குப்பம் போலீசுக்க போன் போட்டு கேட்டார் போலீசுக்காரர்கள் யாரையும் கைது செய்யவில்லை என கூறி விட்டனர்.

16.08.2010 அன்று நான் என் அண்ணன் ரவியிடம் என் கணவரை காணவில்லை என்ற விஷயத்தை கூற தாண்டவன்குப்பம் கிராமத்திற்கு சென்றேன். அங்கு என் அண்ணி வீட்டில் அழுது கொண்டு இருந்தார். என்ன விஷயம் என விசாரித்தேன். என் அண்ணன் ரவியை போலீஸ்காரங்க இரவு அழைத்து சென்று விட்ட விஷயத்தை கூறினார். நானும் என் கணவரைக் காணவில்லை என்ற விஷயத்தை கூறினேன். கண்டிப்பாக போலீஸ்தான் பிடித்து கொண்டு போயிருப்பார்கள் என என் அண்ணி என்னிடம் கூறினார். அதன் பிறகு நான் என்ன செய்வது என்று தெரியாமல் ஊருக்கு திருப்பி வந்து விட்டேன்.

19.08.2010 அன்று C.N.பாளையத்தில் உள்ள என் சித்தப்பா செல்வராசு எனக்கு காலை 6 மணிக்கு போன் செய்தார். உன் வீட்டுக்காரன் மற்றும் ராமலிங்கம், விஜயகுமார், ரமேஷ், சுந்தரமூர்த்தி, ஆனந்த ஒளி, பாலா, ஜெயராமன், இவர்கள் எல்லாம் நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் இருக்கிறார்கள் என்று கூறினார். இது எப்படி உங்களுக்கத் தெரியும் என கேட்டதற்கு, என்னை போலீஸ்காரங்க நெல்லிக்குப்பம் போலீஸ் ஸ்டேஷனுக்கு கூட்டிட்டு போய்ட்டு நம்ம, ஆளுங்களை காண்பித்து இவர்கள் எல்லாம் உங்க சொந்தகாரங்க தானே என கூறி கையெழுத்து வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டாங்க என கூறினார்.

இதன் அடிப்படையில் நான் என் மூத்தார் ராமலிங்கம் (48) அவரது மனைவி பூரணி (42) மற்றும் அவரது மகன் ராஜா(20) ஆகியோர்களுடன் எங்கள் கிராமத்தை சேர்ந்த காசி மற்றும் கடாம்புலியூர் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் ரவிச்சந்திரன் ஆகியோர்களுடன் காடம்புலியூர் காவல் நிலையத்திற்கு சென்றோம். காவல் நிலையத்தில் விசாரித்த போது என் கணவர் மற்றும் என் உறவினர்களை சிறையில் அடைத்துவிட்டதாக கூறினார்கள். அதன் பிறகு மாலை 3.00 மணியளவில் கடலூர் மத்திய சிறைசாலைக்கு சென்று என் கணவரை சந்தித்தேன். அப்பொழுது அவர் என் அண்ணன் ரவியை (நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில்) போலீஸ்காரங்க அடித்து சித்தரவதை செய்து கொலை செய்து விட்டதாகவும் மேலும் என் கணவர் தன்னையும் அடித்து சித்திரவதை செய்ததாகவும் கூறினார். அதன் பிறகு இந்த விஷயத்தை என் உறவினர்களுக்கு தெரிவிப்பதற்காக என் வீட்டிற்கு திரும்ப வந்து விட்டேன்.

**மலர் (22) க/பெ. சுந்தரமூர்த்தி, பிள்ளையார் கோவில் தெரு, கெடிலம், உளுந்தூர்ப்பேட்டை தாலுகா, விழுப்புரம் மாவட்டம்:** நான் இம்முகவரியில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். நான் இந்து குறவர் சமூதாயத்தை சேர்ந்தவள். என் கணவரின் பெயர் சுந்தரமூர்த்தி (32). எங்களுக்கு மரகதம் என்ற 3 வயது குழந்தை இருக்கிறது. நானும் என் கணவரும் கூடை, முரம் முடைவது, பன்றி வளர்ப்பது, விற்பது ஆகிய தொழில் செய்து குடும்பத்தை நடத்தி வருகிறோம். கடந்த 15.08.2010 அன்று நள்ளிரவு சுமார் 2.00 மணியளவில் என் வீட்டிற்கு 5 காவலர்கள் சீருடையில்லாமல் வந்தனர். அதில் 2 நபர்கள் என் வீட்டிற்கும் 2 நபர்கள் என் நாத்தனார் வீட்டிற்கும் வந்தனர். நான் அவர்களிடம் என் வீட்டுக்காரர் எந்தத் தப்பு தண்டாவுக்கும் போறதில்லை எதுக்கு கூப்பிடுறீங்க என கேட்டேன். அதற்கு அவர்கள் விசாரிச்சுட்டு உடனே அனுப்பிடுவோம் என கூறினார்கள்.

அதன் பிறகு என் கணவரை அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 2 காவலர்கள் என் வீட்டில் இருந்து சுமார் 50 அடி தூரத்தில் நிறுத்தி வைத்திருந்த வேனிற்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் சென்றதும் நான் என் கணவர் வெற்று உடம்புடன் இருக்கிறார் சட்டை எடுத்து செல்லலாமே என வீட்டிற்குள் நுழைந்தேன். அப்போது திடீரென்று அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 3 காவலர்கள் என் பின்னால் வீட்டிற்குள் நுழைந்தனர். அவர்களில் ஒரு அடையாளம் தெரிந்த காவலர் வீட்டுக்குள்ள என்ன ஒளிச்சு

வைக்க வந்தடி என கூறினார். என் வீட்டுக்காரருக்கு சட்டை எடுக்கத்தான் வந்தேன் என கூறினேன். பணம் நகையெல்லாம் எங்கடி வச்சிருக்க என கூறி வீட்டில் உள்ள பண்ட பாத்திரங்களிலும் துணிமணிகள் எல்லாம் தேடி பார்த்தனர். அதில் கருப்பாக குண்டா இருந்த ஒரு காவலர் எங்கு பணம் நகையெல்லாம் வச்சிருக்க சொல்லுடி தேவடியா என கூறி கொண்டே எனது இடது வலது கன்னத்தில் மாறி மாறி அறைந்தார். நான் வலி வேதனையால் அய்யா என்னை அடிக்காதீங்க நான் எந்த தப்பும் செய்யவில்லை. என கூறி அழுதேன். அதே காவலர் ஆபாசமாக கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டினார். கத்தி சத்தம் போட்ட உன்ன கிழித்து விடுவேண்டி என என்னை கேவலமாக பேசினார். மற்றொரு காவலர் இவளை அடிச்சா சொல்லமாட்டா இவ இடுப்புலதான் காசு வச்சிருப்பா என கூறி என் இடுப்பை பிடித்தார். நான் பதறி அடித்துக் கொண்டு விலகினேன். என்னடி விலகுற என கூறி என் பாவாடையை பிடித்து இழுத்து என் சேலையை உருவினார். என் இடுப்பில் செருகி இருந்த சுருக்குப்பை கீழே விழுந்தது. அதில் நான் முறம் வியாபாரத்தில் சம்பாதித்து வைத்திருந்த ரூ. 7,000 பணமும் என் அம்மா என் மகளுக்கு போட்ட 1/2 கிராம் தங்க மோதிரத்தையும் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத காவலர் எடுத்துக் கொண்டார். அரை நிர்வாணமாக இருந்த நான் இரண்டு கைகளையும் மார்பில் அணைத்தப்படி கீழே உட்கார்ந்து கொண்டு அத்தை உள்ள வாங்க, உள்ள வாங்க என அழுது கொண்டே என் அத்தையை அழைத்தேன். அதில் அடையாளம் தெரிந்த ஒரு போலீஸ்கார் தேவடியா சத்தம் போடாதடி இவ பணத்தை எல்லாம் ஜாக்கெட்டில் ஒளித்து வைத்திருப்பாள், ஜாக்கெட்டை கழட்டுடி என கூறினார். இதை கேட்ட நான் பதறிக் கொண்டு அய்யா என்னை விட்டு விடுங்க என கதறி அழுதேன். நான் சத்தம் போட்டு அழுததால் அவர்கள் வீட்டை விட்டு வெளியே வந்து விட்டனர். அதன் பிறகு நான் புடவையை மாற்றிக் கொண்டு வெளியில் வந்து பார்த்த போது என் நாத்தனாரின் கணவர் ரமேஷை காவல் துறையினர் வேனில் ஏற்றிக் கொண்டு இருந்தனர். நானும் என் நாத்தனாரும் எங்கள் பிள்ளைகளை தூக்கிக் கொண்டு அய்யா எங்க வீட்டுக்காரரை விட்டுடுங்க என கதறி அழுதுக் கொண்டே வேனை நோக்கி ஓடினோம். வேன் வேகமாக உளுந்தூர் பேட்டை நோக்கி சென்றது. நாங்கள் சிறுது தூரம் ஓடி நின்றுவிட்டோம்.

16.08.2010 அன்று காலை சுமார் 10 மணியளவில் பண்ருட்டி காவல் நிலையத்திற்கு நான் என் கணவரின் அக்கா சுமதி மற்றும் என் மாமியார் ருக்மணி ஆகியோர் வந்து என் கணவன் மற்றும் என் நாத்தனாரின் வீட்டுக்காரர் பற்றி விசாரித்தோம். காவல் நிலையத்தில் இருந்த காவலர்கள் நீங்கள் சொல்லும் பெயர் உள்ள நபர்களை நாங்கள் யாரும் பிடித்து வரவில்லை என்று கூறிவிட்டனர். அதன் பிறகு பண்ருட்டி நீதிமன்றத்திற்கு வந்து விசாரித்தோம் அங்கும் யாரும் வர வில்லை என்று கூறிவிட்டனர். அதன் பிறகு நாங்கள் உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்திற்கு சென்று விசாரித்தோம். அங்கும் அழைத்து வரவில்லை என்று கூறிவிட்டனர். அங்கிருந்து புறப்பட்டு திருநாவலூர் காவல் நிலையத்திற்கு சென்று விசாரித்தோம். அங்கும் யாரையும் அழைத்து வரவில்லை என்று கூறிவிட்டனர்.

இந்நிலையில் கடந்த 19.08.2010 அன்று எனது உறவினர் பாகூரைச் சேர்ந்த முருகன் என்பவருக்கு போன் செய்த போது அவர் எனது மூத்தார் ரவியை காவல் துறையினர் அடித்து கொன்று விட்டதாகவும், மேலும் பாடியை கடலூர் மருத்துவ மனையில் வைத்து இருப்பதாகவும் கூறினார். உடனே நான் அலறி அடித்து கொண்டு என் கணவரையும் அடித்து கொண்டிருப்பார்களோ என பயந்து என் நாத்தனார் சுமதி என் மாமியார் ருக்மணி ஆகியோருடன் கடலூர் அரசு பொது மருத்துவமனைக்கு சென்று பிணவறையில் வைக்கப்பட்டு இருந்த என் மூத்தார் ரவி உடலை பார்த்து கதறி அழுதோம். அங்கு இருந்த காவலர்கள் என்னிடம் என் மூத்தாரின் உடலை வாங்கி செல்லும் மாறு கட்டாயப்படுத்தினார்கள். நான் முடியாது என மறுத்துவிட்டு மூத்தார் இறந்த தகவலை உறவினர்களுக்கு தெரிவிப்பதற்காக கெடிலம் வந்துவிட்டோம்.

என் கணவரையும் என் தம்பியையும் காவல் துறையினர் என்ன செய்தார்கள் எங்கு வைத்துள்ளனர் என தெரியாமல் அழுது புலம்பி கொண்டு இருந்தோம். 28.08.2010 அன்று மதியம் சுமார் 2 மணியளவில் சீருடையில்லாத இரண்டு காவலர்கள் கெடிலத்தில் உள்ள என் வீட்டிற்கு வந்து எங்கள் குடும்ப விபரங்கள் கேட்டு சென்றனர். 30.08.2010 அன்று மாலை சுமார் 3 மணிக்கு கடலூர் மத்திய சிறையில் சென்று மனு போட்டு என் கணவரை சந்தித்தேன். என் கணவர் என்னிடம் போலீஸ்காரங்க தன்னை கடுமையா சித்ரவதை செஞ்சாங்க தன் கண் எதிரிலேயே தன் அண்ணனை அடித்து போலீஸ்காரங்க கொன்று விட்டார்கள் என்று கூறினார். மேலும் தன்னை அடித்ததில் தன்னால் நடக்க கூட முடியவில்லை என கூறி கதறி அழுதார். அவர் உடல் முழுவதும் இரத்த காயங்கள் காணப்பட்டது.

**சுமதி (25),க/பெ.ரமேஷ், பிள்ளையார் கோவில் தெரு, கெடிலம், உளுந்தூர்பேட்டை தாலுகா, விழுப்புரம் மாவட்டம்:** நான் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். நான் இந்து குறவர் சமுதாயதை சேர்ந்தவள். என் கணவர் பெயர் ரமேஷ் (32) எங்களுக்கு ஆதி(6), தேவி(3), கிரி (2 மாத குழந்தை) என்ற மூன்று குழந்தைகள் உண்டு கூடை, முறம் மற்றும் பன்றி வளர்ப்பது விற்பது ஆகிய தொழில்களை செய்து வாழ்ந்து வருகிறோம். எனது கணவர் ரமேஷ் இதுவரை எந்த திருட்டு குற்றங்களிலும் ஈடுபட்டது கிடையாது. அவர் மீது இதுவரை

எந்த வழக்கும் கிடையாது. இந்நிலையில் கடந்த 15.08.2010 அன்று நள்ளிரவு சுமார் 2.00 மணியளவில் சுமார் 5 காவலர்கள் சீருடை இல்லாமல் வீட்டிற்கு வந்தார்கள். என் கணவரிடம் உன் பெயர், உன் அப்பா பெயர் என்ன என்று கேட்டார்கள். அதே போல் என் பக்கத்து வீட்டில் இருக்கும் என் உடன் பிறந்த தம்பி சுந்தரமூர்த்தி (22) த/பெ. கலியபெருமாள் அவனையும் இரண்டு போலீஸ்காரர்கள் விசாரித்தார்கள். அதன் பிறகு இருவரையும் விசாரிக்க வேண்டும் வா அய்யா கூப்பிடுகிறார் என அழைத்தார்கள். அதன் பிறகு இருவரையும் எங்கள் வீட்டில் இருந்து 50 அடி தூரத்தில் நிறுத்தி வைத்து இருந்த 108 ஆம்புலன்ஸ் வண்டி போல் இருந்த வேனில் என் கணவரையும் என் தம்பியையும் போலீஸ்காரர்கள் ஏற்றினார்கள். அவர்கள் ஏறியதும் வண்டி உளுந்தூர்பேட்டை நோக்கி வேகமாக சென்றது. நானும் என் தம்பி மனைவி மலரும் போலீஸ் வாகனத்தின் பின்னாடியே அழுது கொண்டு ஓடினோம்.

என் கணவரையும் என் தம்பியையும் காவல் துறையினர் என்ன செய்தார்கள் எங்கு வைத்துள்ளனர் என தெரியாமல் அழுது புலம்பி கொண்டு இருந்தோம். இந்நிலையில் என் உடன் பிறந்த அக்கா செல்வி எனது கணவரையும் என் தம்பியையும் கடலூர் கேப்பர் மலை சிறையில் வைத்து இருப்பதாக என்னிடம் கூறினார். இத்தகவலின் அடிப்படையில் 30.08.2010 அன்று கடலூர் சிறைக்கு சென்று மனு போட்டு எனது கணவர் மற்றும் என் தம்பியை பார்த்தேன். என் கணவர் என்னிடம் நடுவீரப்பட்டு போலீஸ் ஸ்டேஷனில் தன் அண்ணன் ரவியை அடித்து காவல் துறையினர் கொன்று விட்டதாகவும், இதை அவர் நேரில் பார்த்ததாகவும் என்னிடம் கூறினார். மேலும் என் கணவரை காவல் துறையினர் இடது, வலது, தொடை பகுதியில் குண்டு ஊசியால் குத்தி சித்திரவதை செய்து திருடியதை ஒத்துக்கொள் எனக் கூறி குத்தியதாகவும், மேலும் பிறப்பு உறுப்பில் ஊசியால் குத்தி நூலில் கட்டி வைத்து இழுத்ததாகவும் நிர்வாண நிலையில் வைத்து தடியால் உடல் முழுவதும் தாக்கியதாகவும் கூறினார். மேலும் காவல் துறையினர் தாக்கியதில் என் கணவர் உடல் முழுவதும் இரத்தக் காயங்கள் காணப்பட்டது. மேலும் என் கணவர் என்னிடம் காவல் துறையினர் விசாரணை என்ற பெயரில் சிறையில் இருந்து வெளியில் அழைத்து வந்து உன் அண்ணனை அடித்து கொன்றதை நீ யாரிடமும் சொல்லக் கூடாது என கூறி காவல் துறையினர் அடித்து சித்ரவதை செய்ததாக கூறினார். ஆகவே என் கணவரை விசாரணை என்ற பெயரில் அழைத்து சென்று நிர்வாணப்படுத்தி சித்ரவதை செய்து பிறப்பு உருப்பில் ஊசியில் குத்தி கொடுமை படுத்தி பொய் வழக்கு பதிவு செய்த பண்ருட்டி காவல் துணைகண்காணிப்பாளர் தலைமையில்(DSP) தலைமையிலான காவல் துறையினர் மீது கொலை முயற்சி வழக்கு மற்றும் தீண்டாமை வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

**அய்யம்மாள் (18) க/பெ. விஜயகுமார், நெய்வேலி டவுன், விருத்தாசலம் தாலுகா, கடலூர் மாவட்டம்:** நான் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். எனது கணவர் விஜயகுமார் பாய் வியாபாரம் செய்து வருகிறார். எங்களுக்கு சந்தோஷ் (4 மாதம்) என்ற மகன் உள்ளான். கடந்த 16.08.2010 அன்று திங்கள் கிழமை மாலை 4.00 மணியளவில் நான், எனது மாமனார் தர்மலிங்கம்(60) எனது நாத்தனார் ராஜஸ்ரீ(30) க/பெ.குமார் ஆகியோர் எனது வீட்டில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது நான் எனது 4 மாதக் குழந்தையான சந்தோஷ்க்கு பால் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனது வீட்டின் பின்பக்கம் யாரோ நிறைய பேர் திபுதிபுவென வருவது போன்று சத்தம் கேட்டது. நான் திரும்பி பார்த்தப் பொழுது சுமார் 5 போலீஸ்காரர்கள் (சீருடை அணிந்து அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத) எங்கள் வீட்டின் உள்ளே நுழைந்தனர். போலீஸ்காரர்கள் உள்ளே நுழைந்ததும் நான் என்னவோ ஏதோவென்று பதட்டத்தில் எழுந்து நின்றேன். உள்ளே நுழைந்த ஒரு காவலர் நான் சார்ஜ்போட்டிருந்த செல்போனை எடுத்து கொண்டார். மற்றொரு காவலர் வாய் பேச முடியாத எனது மாமனார் ராமலிங்கத்தை சட்டையை பிடித்து தரதரவென்று இழுத்து கொண்டு பின்பக்க வாசல் வழியாக வெளியே வந்தார். அப்பொழுது நானும் எனது நாத்தனார் ராஜஸ்ரீயும் ஐயா எங்க மாமா 5 நாளா உடம்பு சரியில்லாமல் இருக்காரு அவரால் வாய் பேச முடியாது, எங்கய்யா அவரை இழுத்துட்டு போறீங்க என கதறி அழுததற்கு அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத காவலர் ஒருவர் என்னை அவரது பூட்ஸ் காலால் எட்டி உதைத்தார். நான் எனது குழந்தையுடன் கீழே விழுந்து அழுது கொண்டிருந்தேன்.

எனது நாத்தனார் ராஜஸ்ரீ நீங்க யாரு, ஏன் அப்பாவை பிடிச்சிட்டு போறீங்க அவருக்கு ஒண்ணும் தெரியாது என கூறியதற்கு அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத காவலர் ஒருவர் அவர் முகத்தில் எச்சியை துப்பி ஏய் ஒழுங்கா சத்தம் போடாமல் இரு, இல்லைன்னா உன்னையும் கூட்டிட்டு போயிருவோம் என மிரட்டினார். பிறகு என்னிடம் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத காவலர் ஒருவர் உன் புருஷன் எங்கடி அவன் பேரு என்ன என கேட்டார். அதற்கு நான் என் புருஷன் பெயர் விஜயகுமார் என கூறினேன். “அதற்கு அந்த காவலர் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டி உன் பிள்ளையை போட்டு தாண்டு டீ என என்னை மிரட்டினார். நானும் எனது நான்கு மாத குழந்தையை போட்டு தாண்டி சத்தியமா என் புருஷன் பேரு விஜயகுமார் தான் என கூறி அழுதேன்”. பொய் சொல்லாதடி முண்ட என என்னை திட்டினார். நானும் எனது நாத்தனாரும் அழுது கொண்டே எனது மாமனாரை பார்க்க வெளியே வந்தோம். அப்பொழுது வெளியில் வெள்ளையும், கருப்பு நிறமும் கலந்த கார் ஒன்று நின்றிருந்தது எனது மாமனார்

ராமலிங்கத்தை காரில் ஏறி உட்கார வைத்தனர். மேலும் 5 காவலர்கள் இவள் புருஷன் வரட்டும் என எங்கள் வீட்டின் அருகே ஒரு காவலரும் எங்களது வீட்டின் உள்ளே ஒரு காவலரும் அமர்ந்து டி.வி. பார்த்து கொண்டிருந்தார்கள் அப்பொழுது சாப்பாடு சாப்பிட போயிருந்த என் கணவர் விஜயகுமார் மோட்டார் சைக்கிளில் வந்தார். அப்பொழுது போலீஸ்காரர்கள் இதோ வந்துட்டான் என கூறி என் கணவரின் சட்டையைப் பிடித்து கொண்டு ஏய் வண்டிய விட்டு இறங்குடா என கூறி எனது கணவரின் மோட்டார் சைக்கிளில் ஒரு போலீஸ்காரர் உட்கார்ந்து கொண்டு எனது கணவரை நடுவே உட்கார வைத்துக் கொண்டு பின்னாடி ஒரு போலீஸ்காரர் உட்கார்ந்து கொண்டு எனது கணவரை அழைத்து சென்றனர். மீதமுள்ள போலீஸ்காரர்கள் மோட்டார் சைக்கிளின் பின்னே சென்று விட்டனர். எனது கணவரை எந்த ஸ்டேஷனுக்கு கூட்டிட்டு போனங்கன்னு எனக்கு தெரியவில்லை.

கடந்த 24.08.2010 அன்று என் கணவரை கடலூர் மத்திய சிறையில் வைத்திருப்பதாக கேள்விப்பட்டு சிறைக்கு சென்று என் கணவரை சந்தித்தேன். என் கணவர் என்னிடம் சரியாக பேச முடியாமல் திணறி திணறி பேசினார், அவருக்கு நடந்த சித்திரவதையை என்னிடம் கூறினார். நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் வைத்து காவல் துறையினர் உடல் முழுவதும் ஊசியால் குத்தி சித்ரவதை செய்ததாகவும், இதனால் உடல் முழுவதும் சீழ் பிடித்து விட்டதாகவும் கூறி அழுதார். மேலும் என் மாமனாரையும் காவல் துறையினர் வயதானவர் என்றும் கூட பார்க்காமல் சித்தரவதை செய்ததாகவும் கூறினார். அவரை ஆறுதல் படுத்திவிட்டு சிறையில் இருந்து வந்து விட்டோம்.

கடந்த 31.08.2010 அன்று கடலூர் மத்திய சிறைச்சாலைக்கு சென்று நானும் எனது மாமியாரும் என் கணவரை சந்தித்தோம். அவர் எங்களிடம் என் மாமனார் ராமலிங்கத்தை காவல் துறையினர் கடந்த 2 நாட்களுக்கு முன்பு விசாரணை என்ற பெயரில் அழைத்து சென்றுள்ளனர். இன்னும் அழைத்து வந்து விடவில்லை என்ற விபரத்தை எங்களிடம் கூறினார். காவல் துறையினர் பொய் வழக்கு பதிவு செய்து என் கணவரையும், என் மாமனாரையும் சித்ரவதை செய்து சிறையில் அடைத்துள்ளனர். காவல் துறை அதிகாரிகள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**P.கிருஷ்ணமூர்த்தி வயது (58) மாநிலத் தலைவர், தமிழ்நாடு குறவர் பழங்குடி மக்கள் சங்கம், சேட்டு நகர், பொன்னையார் ரோடு, கடலூர்:** நான் மேற்குறிப்பிட்டுள்ள சங்கத்தின் மாநிலத் தலைவர், தமிழ்நாட்டில் உள்ள குறவர்கள் அனைவரையும் குற்றபரம்பரையினர் என்று காவல் துறையினர் முத்திரை குத்தியிருக்கிறார்கள். விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூரில் உள்ள வங்கி கொள்ளையில் குறவர்கள் சம்மந்தப்பட்டிருக்கலாம் என சந்தேகித்து விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்ட காவல் துறையினர் குறவர் சமுதாயத்தைச் சேர்ந்த 10 பேருக்கு மேல கைது செய்து திருட்டை ஒத்துக் கொள்ளும்படி சித்திரவதை செய்துள்ளனர். சித்திரவதையின் கொடுமையால் ரவி இறந்து விட்டார். காவல் துறையினர் சித்திரவதை செய்யப்பட்டதால் இறந்ததை மறைப்பதற்காக ரவி போலீஸ் காவலில் இருந்து தப்பித்துச் செல்லும் போது முந்திரித் தோப்பில் கீழே விழுந்து இறந்து விட்டதாக காவல் துறையினர் நாடகமாடியுள்ளனர். எனவே தவறு செய்த காவல் துறையினர் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும், பாதிக்கப்பட்டட குடும்பத்திற்கு அரசு தகுந்த நஷ்ட ஈடு வழங்க வேண்டும். கைதுக் குறிப்பு இல்லாமல் குறவர்கள் கைது செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

**தணிக்கை செல்வம், வழக்கறிஞர், பண்ரூட்டி:** விழுப்புரம் மாவட்டம் திருவநாவலூரில் உள்ள கூட்டுறவு வங்கியில் நகைகள், கொள்ளை அடிக்கப்பட்டசம்பவத்தில் காவல் துறையினர் சம்மந்தமே இல்லாத ரவி மற்றும் ரவியின் நெருங்கிய உறவினர்களை 13.8.2010 கைது செய்து ஒவ்வொருவர் மீதும் 3 முதல் தகவலறிக்கைகள் பதியப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கைது செய்தவர்கள் ஜெயராமன் என்கிற ரஜினி த/பெ. முனியன், பாலா த/பெ. முனியன் மீது எந்த வித வழக்கும் இல்லாமலே எங்கு கொண்டு போனார்கள் என்பது எற்றி விவரம் தெரியவில்லை, கடலூர் முதன்மை நீதித்துறை நடுவர் (CJM) , ஈஸ்வரன் விசாரணை முடித்து மாவட்ட ஆட்சியரிடம் அறிக்கை கொடுத்துவிட்ட காவல் துறையினரால் அடித்து சித்திரவதை செய்து கொன்ற ரவியின் பிரேத பரிசோதனை அறிக்கை தற்பொழுது வந்துள்ளது.

## II. உண்மையறியும் குழுவினர் சந்தித்த அரசு அதிகாரிகள்:–

**ராமச்சந்திரன், பொது தகவல் அலுவலர் மருத்துவர், கடலூர் அரசு மருத்துவமனை:** கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், நெய்வேலி டவுன் அருகில் தாண்டவன்குப்பம் கிராமத்தில் 16.08.10 ம் தேதி கைது செய்யப்பட்டு பின்னர் காவல் துறையால் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்ட ரவி வயது 32 த/பெ. கலியன் என்பவரது இறந்த உடல் இங்குதான் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இறந்த உடலை கடந்த 19.08.10 ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு இங்கு கொண்டு வந்தது காடாம்புலியூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவல் உதவி ஆய்வாளர் ஜெயசீலன். பிரேத பரிசோதனை செய்வதற்கான வேண்டுகோள் கடலூர் உட் கோட்ட நிர்வாக நடுவரால்

கையெழுத்து செய்யப்பட்டிருந்தது. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் வழிகாட்டல்படி பிரேதபரிசோதனை செய்யும்படி வேண்டுகோளில் குறிப்பிடப்படவில்லை. பிரேதபரிசோதனை மதியம் 12.55 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 01.55 மணிக்கு முடிக்கப்பட்டுள்ளது. Dr.A. குமார் மற்றும் Dr.S.சரவணன் என்ற இரு மருத்துவர்கள் பிரேதபரிசோதனை செய்துள்ளார்கள். பிரேதபரிசோதனை முழுவதும் வீடியோ எடுக்கப்பட்டுள்ளது. பிரேதபரிசோதனை அறிக்கை எண்.251/10. மற்ற விபரங்களை Dr.S.சரவணன் என்ற மருத்துவரிடம் விசாரித்துக் கொள்ளும்படி கூறிவிட்டார்.

**S.சரவணன், கடலூர் அரசு மருத்துவமனை:** ரவியின் பிரேதபரிசோதனையின் போது எடுக்கப்பட்ட உடல் உறுப்புகள் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு அவர்களின் அறிக்கைக்காக காத்திருப்பதாகவும் அந்த அறிக்கை கிடைத்தபிறகு பிரேதபரிசோதனை அறிக்கை எழுதி முடிக்கப்பட்டு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்படுமென்று தெரிவித்தார். பிரேதபரிசோதனைக்கு முன்பு ரவியின் உடலில் ஐந்து இடங்களில் வெளிக்காயங்கள் இறந்ததாக தெரிவித்துள்ளார்.

**அவைகளாவன :** 1. இடது முழங்காலுக்கு கீழே அடிபட்ட வீக்கமும் சிராய்பும் இருந்தது. 2.வலது முழங்காலில் சிராய்ப்பும் அடிபட்டு கன்றிப்போன வீக்கமும் இருந்தது. 3.இடது கணுக்காலில் அடிபட்டு கன்றிப்போய் வீங்கி இருந்தது. 4.இரண்டு கால்களின் பாதங்களில் அடிபட்டு கன்றிப்போய் வீங்கிஇருந்தது. 5.ஆண் குறியின் நுனி மற்றும் அடி மற்றும் மேல் பாகத்திலும் சிராய்ப்பும் இருந்தது. தடய அறிவியல் ஆய்வக அறிக்கை கிடைத்த பிறகு மருத்துவ வல்லுநர்களைக் கலந்து இறுதி பிரேதபரிசோதனை அறிக்கை தயாரித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். பிரேத பரிசோதனை செய்வதற்கான கடலூர் வருவாய் கோட்டாட்சியரின் வேண்டுகோள் கடிதத்தில் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி பிரேத பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடவில்லை.

**திரு. சீத்தாராமன், இ.ஆ.ப. மாவட்ட ஆட்சியர், கடலூர்:** காவல் துறையினர் சித்திரவதை செய்து கொன்றதாகச் சொல்லப்படும் ரவியின் மரணம் தொடர்பாக பண்ருட்டி குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி விசாரணைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை வந்தவுடன் அதன் பேரில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பிரசன்ன குமார், காவல் துணைக் கண்காணிப்பாளர், பண்ருட்டி:** காவல் துறையினரின் பாதுகாப்பில் ரவி மரணம் அடைந்தது தொடர்பாக பண்ருட்டி நடுவர் நீதிமன்றத்தில் IIல் விசாரணையில் உள்ளது. அதனால் வழக்கு முடியும் வரை ஒன்றும் சொல்லவதற்கில்லை என்றார்.

**திரு. அஸ்வின் M.கோட்னீஷ், இ.கா.ப. காவல் கண்காணிப்பாளர், கடலூர்:** மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஊரில் இல்லாததால் அவரைச் சந்திக்க முடியவில்லை. மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக ஆய்வாளர் S.சுரேஸ் கண்ணன் அவர்களைச் சந்தித்தோம். காவல் துறை பாதுகாப்பில் இறந்த ரவியின் மரணம் பற்றி டெல்லியில் உள்ள தேசிய மனித உரிமைகள் ஆணைத்திற்கும், சென்னையில் உள்ள பொதுத் துறைக்கும் முதல் நிலை அறிக்கை உடனே அனுப்பப்பட்டு விட்டது. ரவியின் குடும்பத்தினரையோ, உறவினர்களையோ காவல் துறை தேவையில்லாமல் சட்டத்திற்கெதிராக எந்தவித தொந்திரவும் செய்யகூடா தென்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர். உத்திரவு பிறப்பித்தள்ளார். ரவியின் மரணம் பற்றிய விசாரணையை நீதித்துறை நடுவர் தான் விசாரிக்க வேண்டுமென்று காவல் கண்காணிப்பாளர் தான் அமர்வு நீதிமன்ற நீதிபதிக்கு சிபாரிசு செய்துள்ளார். விசாரணை நியாயமாகவும் சட்டப்படியும் நடக்கும் என்றார்.

**சார்பு ஆய்வாளர் கோவிந்தசாமி, காடாம்புலியூர் காவல் நிலையம்:** காவல்துறை பாதுகாவலில் ரவி மரண மடைந்தது பற்றி நீதித்துறை நடுவர் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு விசாரணை பண்ருட்டி நீதித்துறை நடுவர் நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்நிலையில் வழக்கைப் பற்றி நான் ஒன்றும் கூறுவதற்கில்லை. மேற்கொண்டு விஷயங்கள் தேவையென்றால் துணைக் காவல் கண்காணிப்பாளர் பிரசன்ன குமாரைப் பார்க்கலாம் என்றார்.

**உண்மையறியும் குழுவினர் கண்டறிந்தவைகள்:**

1. விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், திருவெண்ணெய்நல்லூர் கூட்டுறவு வங்கியில் கடந்த ஜூன் மாதம் கொள்ளை நடந்துள்ளது. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க DIG.மாசானமுத்து கடலூர் மற்றம் விழுப்புரம் மாவட்ட காவல் துறையினருக்கு உத்தரவிட்டுள்ளார். இதன் அடிப்படையில் காவல் துறையினர் பல்வேறு நபர்களை பிடித்து சித்திரவதை செய்து விசாரித்துள்ளனர். இறுதியில் குறவர் சமூக மக்கள் இத்திருட்டை செய்திருக்கலாம் என கருதி அவர்களையும் பிடித்து விசாரணை செய்துள்ளனர் என்பதை கள ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.
2. சித்திரவதை செய்து கொல்லப்பட்ட ரவியின் மனைவி கஸ்தூரியின் வாக்குமூலத்திலிருந்து 16.08.2010

அன்று நள்ளிரவு 1.00 மணியளவில் ரவியை தாண்டவகுப்பம் கிராமத்தில் கைது செய்துள்ளனர் என்பதை நான்கு அறிய முடிகிறது. மேலும் பத்திரிக்கையில் வெளியான செய்தியான ரவி சாந்திப்பட்டு கிராமத்தில் உள்ள முந்திரிக்காட்டில் ஒளிந்திருந்த போது காவல் துறையினரை கண்டு பயந்து ஓடியபோது மரத்தில் மோதி இறந்ததாக கூறப்படுவது பொய்யான தகவல் ஆகும்.

3. தட்சிணாமூர்த்தியின் வாக்குமூலத்திலிருந்து 18.08.2010 அன்று ரவி காவல் துறை பாதுகாவலில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டது தொடர்பாக எவ்வித சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடாது என்பதற்காகவும் காவல் துறையினருக்கு எதிராக பண்ரூட்டி நீதி மன்றத்தில் சாட்சி சொல்லகூடாது என்பதற்காகவும் திருநாவலூர் காவல் துறையினர் தண்டபாணியை கைது செய்து எவ்வித விசாரணையும் செய்யாமல் சட்ட விரோதமாக தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர் என்பதை நன்கு அறிய முடிகிறது.

4. அமிர்தம் வாக்குமூலத்திலிருந்து ரவியின் இடது வலது மூட்டு காலுக்கு கீழே இரத்தக்காயங்கள் ஏற்பட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்ததையும் இடது, வலது பாதங்களில் ஊசியால் துளையிட்ட காயங்கள் தென்பட்டது என கூறியதின் அடிப்படையில் ரவி காவல் துறையினரால் சித்திரவதை செய்யப்பட்டு மரணம் அடைந்துள்ளார் என்பதை நம்மால் நன்கு அறிய முடிகிறது.

5. கைது செய்யப்பட்ட அனைவரும், ரவி (36), த/பெ. கலியன், (2) தண்டபாணி (43) த.பெ. கலியன், (3) ரமேஷ் (32) த.பெ. கலியன், (4) கொளஞ்சி (30), த.பெ. மாயவன், (5) ஆனந்த ஒளி (24), த.பெ.மாயவன் (6) விஜயகுமார் (23), த.பெ.ராமலிங்கம், (7) சுந்தரமூர்த்தி (30), த.பெ.கலியபெருமாள், (8) ஜெயராமன் (30), த.பெ.முனுசாமி, (9) பாலா, த.பெ. முனுசாமி, (10) ராமலிங்கம் (60) த.பெ. குப்பன் மேற்கூறிய அனைவரும் ஒருவருக்கொருவர் நெருங்கிய சொந்தங்களாவர்கள் என்பதை கள அய்வு மூலம் அறிய முடிகிறது.

6. மலரின் வாக்கு மூலத்திலிருந்து சுந்தரமூர்த்தியை கைது செய்ய வந்திருந்த அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 3 காவலர்கள் மலரை மானங்க படுத் முயன்றனர் என்பதை அறிய முடிகிறது.

7. சுமதியின் வாக்கு மூலத்திலிருந்து பண்ரூட்டி DSP தலைமையிலான காவல் துறையினர் அடங்கிய குழு ரமேஷ்யை நிர்வாணப்படுத்தி உடல் முழுவதும் குண்டு ஊசியால் குத்தி பிறப்பு உறுப்பை நூல் கட்டி இழுத்து சித்ரவதை செய்துள்ளனர் என்பதை சுமதியின் வாக்கு மூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

8. கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம் தாண்டவன்குப்பம் பகுதியில் ரவியின் வீட்டுக்கு அருகே குடியிருந்த மண்ஒட்டர் சாதியைச்சேர்ந்த நபர்கள் காவல் துறையினருக்கு பயந்து வாக்குமூலம் அளிக்க மறுக்கிறார்கள் என்பதைக் கள ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

9. ரவியின் மரணம் தொடர்பாக கடலூர் மாவட்ட ஆட்சியர் விசாரணை செய்ய பண்ருட்டி குற்றவியல் நீதிபதியை நியமித்துள்ளார். என்பதை கள ஆய்வு மூலம் அறியமுடிகிறது.

10. ரவியின் மரணத்திற்கு பண்ரூட்டி DSP தலைமையிலான காவல் துறையினர் அடங்கிய குழு தான் காரணம் என்பதை சிறையிலுள்ள 8 நபர்களின் வாக்கு மூலத்திலிருந்தும் பத்திரிக்கையின் வாயிலாகவும் அறிய முடிகிறது. மேலும் ரவியின் மரணத்திற்கு காரணமான காவல் துறையினர்களில் ஒருவர் ஆன நெல்லிக்குப்பம் காவல் நிலைய ஆய்வாளர் பாண்டியன்கவிஞர் வைரமுத்துவின் சகோதரர் ஆவார், கவிஞர் வைரமுத்து, முதலமைசருக்கு வேண்டப்பட்டவர் என்பதால் இவ்வழக்கில் ஆளுங்கட்சியின் தலையீடு பெருமளவில் இருந்து வருகிறது.

11. இவ்வழக்கில் டி.கே. பாசுவின் 11 கட்டளைகள் காவல் துறையினரால் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளதை கள ஆய்வின் மூலமாகவும் பாதிப்பு அடைந்தவர்களின் வாக்கு மூலம் மூலமாகவும் நம்மால் அறிய முடிகிறது.

12. ரவியின் இறந்த உடலை பிரேதபரிசோதனை செய்த இரண்டு மருத்துவர்களில் ஒருவரான மருத்துவர் S.சரவணன் அவர்களின் வாக்குமுலப்படி பிரேதபரிசோதணைக்கு முன்பு ரவியின் உடலில் ஐந்து இடங்களில் வெளிக்காயங்கள் இருந்ததாக கூறியுள்ளார். இதிலிருந்து ரவி சித்திரவதை செய்து தான் கொல்லப்பட்டுள்ளார் என்பது புலனாய்கிறது.

### பரிந்துரைகள்

1. ரவியின் மரணம் தொடர்பாக நியமிக்கப்பட்ட பண்ருட்டி குற்றவியல் நீதிமன்ற நீதிபதியின் விசாரணை நியாயமான முறையில் அரசியல் தலையீடு இல்லாமல் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. காவல் துறை சித்ரவதையில் இறந்த ரவியின் குடும்பத்தாருக்கு தமிழக அரசு ரூபாய் 10,00,000/– நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

3. காவல் துறையால் சித்ரவதை செய்து கொல்லப்பட்ட ரவியின் 4 குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ரவியின் மனைவியான கஸ்தூரிக்குச் சத்துணவுப் பணியை அரசு வழங்க வேண்டும்.

4. ரவியின் மரணத்திற்குக் காரணமான காவல் துறையினர் மீது கொலை வழக்குப் பதிவு செய்து சம்மந்தப்பட்ட காவலர்களை பணி நீக்கம் செய்ய வேண்டும்.

5. குறவர் சமுதாய மக்களை திருடர்கள் எனக் கருதி அவர்களை கொல்வது மற்றும் சித்ரவதை செய்வது சாதி பெயரைச் சொல்லி ஆபாசமாக திட்டுவது காவல் துறையின் வாடிக்கையாக உள்ளது. எனவே, காவல் துறை உயர் அதிகாரிகள் காவல் நிலையத்திற்கு திடீர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

6. நாடு விடுதலையடைந்து 60 ஆண்டுகளாகியும் இந்த குறவர்களின் வாழ்வில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை. தமிழகத்தில் குறவர்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. ஊரின் ஒதுக்குப்புறமான பகுதிகளில் வசிக்கிறார்கள் அதனால் காவல் துறையின் அத்துமீறலுக்கு அடிக்கடி ஆளாகிறார்கள். வெவ்வேறு காவல் நிலையங்களில் உள்ள வழக்குகளில் புலன் விசாரணை செய்தும் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முடியாத நிலையில் குறவர் சாதியைச் சேர்ந்தவர்கள் மீது பொய்யாக வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைக்கிறார்கள். கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள குறவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தையும் மறு ஆய்வு செய்வதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

7. இப்பகுதியில் உள்ள குறவர் இனமக்கள் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டுத் தனிமைப் படுத்தப்பட்டு வாழ்கிறார்கள். இவர்கள் மறு வாழ்வுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

8. குறவர் இனப் பெண்களும் மற்ற சமூகத்துப் பெண்களைப் போல் மகளிர் சுய உதவிக் குழுக்களில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

9. காவல் துறையால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட ரவியின் மரணம் பற்றி தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி கேட்கக்கூடிய தகவல்கள் அனைத்தையும் அரசும், அரசு அதிகாரிகளும் உடனே கொடுக்க வேண்டும்.

10. இவ்வழக்கினை வன்கொடுமை சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும். ✸

– அறிக்கை தொகுப்பு

**காவல்நீதி மற்றும் சித்ரவதை ஒழிப்புப் பிரச்சாரம் - சென்னை**

## கைதிக்கு விலங்கு மாட்ட மாஜிஸ்திரேட்டை அணுக வேண்டும்

’கைதிகளுக்கு கையில் விலங்கு மாட்டுவது தொடர்பாக சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த உத்தரவை அரசு அதிகாரிகளுக்கும், சிறை அதிகாரிகளுக்கும் தெரிவிக்க வேண்டும்’ என, சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. பவானியில் அகமதுஅலி என்பவர் ஆயில் கடை நடத்தி வருகிறார். இவர் மீது கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டார். கோவை சிறையில் அடைக்கப்பட்டார்.

இவரது கடையில் பணியாற்றும் இளங்கோ என்பவர் ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், ’கோவை சிறையில் அகமது அலி அடைக்கப்பட்டுள்ளார். ஈரோடு, நாமக்கல், சேலம் கோர்ட்டுகளுக்கும், சென்னையில் உள்ள ஆலோசனைக் குழுவுக்கும் ஆஜர்படுத்தும் போது, கைவிலக்கு மற்றும் சங்கிலியுடன் கொண்டு வருகின்றனர். சுப்ரீம் கோர்ட் உத்தரவுக்கு முரணாக இவ்வாறு செயல்படுகின்றனர். இதை தடுக்க வேண்டும்’ என கூறியுள்ளார். மனுவை நீதிபதி என்.பால்வசந்தகுமார் விசாரித்தார். மனுதாரர் சார்பில் வக்கீல் சி.பிரகாசம் ஆஜரானார். நீதிபதி பால்வசந்தகுமார் பிறப்பித்த உத்தரவு: சுப்ரீம் கோர்ட் உத்தரவை, கோவை சிறை அதிகாரி கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். சுப்ரீம் கோர்ட் உத்தரவை மீறினால், அது கோர்ட் அவமதிப்பாக கருதப்படும். விசாரணை கைதி, தண்டனை கைதிக்கு கைவிலங்கு மற்றும் சங்கிலி மாட்ட வேண்டும் என கருதினால், சம்பந்தப்பட்ட போலீஸ் அல்லது சிறை அதிகாரி, மாஜிஸ்திரேட்டிடம் தேவையான உத்தரவுகளை பெற வேண்டும் என சுப்ரீம் கோர்ட் கூறியுள்ளது.

இந்த உத்தரவு 1995ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது. 14 ஆண்டுகள் ஆகியும், சுப்ரீம் கோர்ட்டின் இந்த உத்தரவு குறித்து கோவை சிறை அதிகாரிகளுக்கு அரசு விளக்கவில்லை. எனவே, சுப்ரீம் கோர்ட் உத்தரவு மற்றும் ஐகோர்ட் உத்தரவை உள்துறைச் செயலர், டி.ஜி.பி.,க்கு முதலில் அனுப்ப வேண்டும். அதன்பின், அனைத்து சிறை அதிகாரிகளுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் இந்த உத்தரவை தெரியப்படுத்தி, அதை கண்டிப்புடன் பின்பற்ற உத்தரவிட வேண்டும். இவ்வாறு நீதிபதி பால்வசந்தகுமார் உத்தரவிட்டுள்ளார்.

**– தினமலர், 13.3.2010**

# நீதி வழங்கும் முறைகளில் பாகுபாடு

## இஸ்லாமிய பயங்கரவாதிகளையும் இந்துத்துவா பயங்கரவாதிகளையும் நீதி வழங்கும் நிர்வாக முறைகளில் சமமாகப்பார்க்கப்பட வேண்டும்.

2008ம் வருடம் நவம்பர் 26ம் தேதியன்று பரிதாபகரமாக மும்பையில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதே வருடம் செப்டம்பர் 29ம் தேதி மாலேகோவன குண்டு வெடிப்புகளில் இந்துத்துவா பயங்கர வாதிகளின் பங்கு இருப்பதை கண்டு பிடித்தவர் இவரே ஆவார். மகாராஷ்ரா பயங்கரவாதத்திற்கு எதிரான காவல் குழுமத்தின தலைவரான ஹெமந்த் கர்கெரன் என்பவர் தான் அவர் இதற்கு அடுத்து வந்த குடியரசு தினத்தன்று (ஜனவரி 2009) அசோக சக்ரா விருது இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஆனால் அவிநவ் பாரத் மற்றும் ராஷ்ரிய ஜாக்ரென் மஞ்ச் என்னும் இரண்டு பயங்கரவாத அமைப்புக்கள் முடிவு கட்டப்பட்டிருக்க வேண்டும். இந்தியாவின் ஒரு தலைப்பட்சமான நீதி நிர்வாக அமைப்பில் கர்கரெய் மிகவும் கஷ்டப்பட்டுக்கண்டு பிடித்த (மலேகான் குண்டு வெடிப்பு) விசயங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமா என்பது சந்தேகமே.

குற்ற வழக்குகளில் இந்துத்துவாவின் அரசியல் பகுதி பங்களிப்பு இருக்கிறதென்று கண்டுபிடிப்புகள் இருந்தும் அவை ஏற்கனவே விடுபடப்பட்டுக்கிடப்பில் போடப்பட்டன என்பது நன்கு தெரியும். இது சந்தேகக் குறைய எப்படி நடந்தது என்று சொல்ல முற்பட்டால் ஏற்கனவே எழுதி நடத்துவிக்கப்பட்ட கதையைப் போல முடிந்து விட்டது எனலாம். மகாராஷ்டிரத்தில் அதன் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் ஆட்சி மும்பையில் ஜனவரி 1993ம் வருடம் முஸ்லீம்களுக்கு எதிராக நடந்த கலவரத்தில் சங் பரிவாரத்தின் பங்கு இருந்தது. வெளிப்படையாகத் தெரிந்தும் அவர்களைத் தண்டிக்க நினைக்கவே இல்லை மத்திய அரசு ஆட்சில் இருந்த காங்கிரஸ் ஆட்சி மார்ச் 2002ல் குஜராத் கலவரத்தில் பங்கேற்ற முக்கிய குற்றவாளிகளை ஏதும் தண்டிக்கத் தக்க விதமாக ஏதும் செய்யவே இல்லை. அதேபோல் ஆட்சிக்கு வந்த பாரதீய ஜனதா கட்சியும் சீக்கியர்களை கொன்று குவித்த 1984 சம்பவத்தில் காங்கிரசாரின் பங்கு இருப்பது தெரிந்தும். எதுவும் செய்துவிடவில்லை. வகுப்புவாத குற்றங்களை மறைத்துவிடுவதில் ஒருவருக்கொருவர் சளைக்கவில்லை. இப்படிப்பட்ட பின்னணியில் இப்போது அபிநவ் பாரத் மற்றும் சங்க் பரிவார் தொடர்புடைய அமைப்புகள் தங்களுடைய பயங்கரவாத குற்றங்களுக்கும் அதன் தொடர்ச்சியாக மார்ச் 1993ல் மும்பையில் நடந்த குண்டு வெடிப்புக்கும் தண்டனைகள் கிடைக்குமா என்றெல்லாம் எதுவும் சொல்லிவிட முடியாது.

பிஜேபி தலைமையிலான நடுவணரசு ஆட்சியில் இருந்தபோது இந்துவாவின் முதல் பயங்கரவாதம் வெளிவரத் துவங்கியது. போபால் இரயில் நிலையத்தில் டிசம்பர் 2002ல் நடந்த குண்டு வெடிப்பில் ஆண்டுக்கொரு முறை நடக்கும் தப்ளீகி ஜமாத் கூட்டத்திற்கு வரும் முஸ்லீம்களை கொன்றதில் இந்துத்துவா அமைப்பினர்க்கு பங்கு இருப்பது தெரிய வந்துள்ளது. அதைத் தொடர்ந்து அதற்கடுத்த வருடம் நவம்பர் 21ம் தேதி பர்பானி மசூதியில் மீண்டுமொரு குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு அமைந்த போது மே 2004 மற்றும் ஆகஸ்டு 27 தேதிகளில் பூர்ணா மற்றும் ஜால்னா நகரங்களில் (மகாராஷ்ரா) குண்டு வெடிப்பு நடந்தது.

2003ல் நடந்த குண்டு வெடிப்புக்கு காரணமான இரண்டு பஜ்ரங்தல் அமைப்பை சேர்ந்தவர்களே என்று 2006ல் தெரிய வந்தது. இந்த 2003 பார்பானி குண்டு வெடிப்பில் துரதிஷ்ட வசமாக குண்டு தயாரித்தவர்களே கொல்லப்படட சம்பவம் நிகழ்ந்தது 2004ம் வருடம் அவர்களைச் சேர்ந்தவர்கள் பூர்ணா மற்றும் ஜால்னா குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்கள் என்று கண்டறியப்பட்டது. ஆனால் 2006ல் நடந்த குண்டு வெடிப்பு மிகவும் துயரமான சம்பவம் ஆகும். இந்த குண்டு வெடிப்பு 2006ம் மாலேகுவான் என்னும் கல்லறையும் மசூதியும் சேர்ந்த இடத்தில் நிகழ்ந்தது. இது 38 நபர்களை கொன்றதோடு பாரத் சாகேப் என்பவர் இறந்தவர்களுக்காக பிராத்திக்க வந்தார். அவரும் கொல்லப்பட்டார்.

அதிகம் வருந்தத் தக்க நிகழ்வுகளும் தொடர்ந்து நடந்து வந்துள்ளது. பின்னர் 2007ல் பிப்ரவரி 18ம் தேதி சாம்தா விரைவு வண்டியில் சூட்கேஸ் ஒன்றின் வைத்திருந்த இரண்டு குண்டுகள் வெடித்து. இந்த வண்டி டெல்லியிலிருந்து லாகூர்க்கு (இந்தியா பாகிஸ்தான் இடையிலான நட்புமுறைப் பயணம்) செல்வதற்கான வண்டியாகும். இந்த வண்டியில் நிகழ்ந்த குண்டு வெடிப்பால் 68 நபர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களில் 42 நபர் பாகிஸ்தானியர்களாவர். அதன் பின் மே 18ம் தேதி ஹைதராபாத்திலுள்ள மெக்கா மசூதியில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 14 நபர்கள் கொல்லப்பட்டனர்.

இதைவிடக் கொடுமை என்னவென்றால் இதை எதிர்த்து நடந்த கண்டன ஆர்பாட்டத்தில் போலீசார் துப்பாக்கியால் மேலும் 5 நபர்களை கல்லறைக்கு அனுப்பினர். அதன்பின் நடந்த இரட்டை குண்டு வெடிப்பில் 53 நபர்கள் கொல்லப்பட்டனர். ‘‘குண்டு வெடிப்பிற்கு பதிலடி குண்டு

வெடிப்பே'' என்று இந்துத்வா கொள்கையின் படி அக்டோபர் 11ம் தேதி ஆஸ்மிர் தர்காவில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. ஆனால் இதன் பின்பு 2008ம் வருடம் செப்டம்பர் மாதம் 29ம் தேதி நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 5 முஸ்லீம்கள் மாலேகுவான் என்னுமிடத்தில் கொலையுண்டனர் ஆனால் இந்த வழக்குதனில் பிரங்கையாசிங் தாக்கூர் ஸ்ரீகாந்த் புரோகித் (ஒரு இராணுவ அதிகாரி மற்றும் தயானந்த பாண்டே தானே தன்னை ஆன்மீக குருவாக கூறிக்கொண்டவர்) ஆகிய மூவரும் கைதானவுடன் வேறெரு திருப்பம் நிகழ்ந்தது. அடுத்த மாதம் அபிநவ் பாரத் சங்க பரிவாரின் பங்கும் வெளிவந்தது. இதுவரை இதுபோன்றவற்றுக்கு எல்லாம் பாகிஸ்தான், லஸ்கர்–இ தைபா அல்லது பங்களா தேஷ்ன்ஹர்கரு உல்ஜெகத்–இ இஸ்லாமி போன்றவர்களும் இஸ்லாம் மாணவர்களின் இயக்கத்தின் ஆதரவோடு நடப்பதாகத்தான் "நிபுணர்கள்" கூற உள்ளூர் முஸ்லீம்கள் கைது செய்யப்பட்டு அவர்களிடம் விசயத்தை கறக்க சித்ரவதை செய்யப்பட்டனர்.

பாப்ரி மசூதி இடித்து நொறுக்கப்பட்டவுடன் பெரும்பாலான முஸ்லீம் இளைஞர்கள் கொதித்தெழுந்து வருத்தப்பட்டனர். இந்துத்துவா சக்திகள் மும்பை முஸ்லீம்களுக்கு எதிராக ஜனவரி 1993ல் 2002ல் குஜராத்தில் செயல்பட்ட போதும் காஷ்மீரில் 1988க்குப்பின் இராணுவ அடக்குமுறை நிகழ்ந்த போது முஸ்லீம் இளைஞர்களின் வருத்தம் சொல்லவொன்னாதது. அவர்களில் சிலர் பயங்கரவாதிகளாக மாறினர். தங்கள் மீது அவிழ்த்துவிடப்பட்ட அநீதி அது ஒன்று தான் வழியாக இருக்கமுடியும் என்று அவர்கள் கருதியதால். பாபர் மசூதி இழப்பு, முஸ்லீம்களை குறிவைத்து நடந்த பயங்கரம், காஷ்மீரில் நடந்த ராணுவ அத்துமீறல் விளைவால் விளைந்த சாவுகள் போன்றவற்றுக்கு முஸ்லீம் பயங்கரவாதம் நீதியாக முடியாது.

இந்திய அரசு நீதி எது என்பதில் அதுவும் வகுப்பு வாரியாக பார்க்கும் தோல்வி அடைந்துவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். நீதி மறுக்கப்பட்டது தான் முஸ்லீம் பயங்கரவாதம் தோன்றிச் செழிக்கக் காரணம் அதுவே மீண்டும் இந்துத்வா பயங்ரகவாதம் தோன்றவும் காரணமாயிற்று. ஆனால் இந்துத்வா பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டதில் இந்திய அரசு நீதி வழங்கும் முறைகளில் பாகுபாடு செய்ததை மறுக்க முடியாது; அதிலும் மதசார்பற்ற அரசு என பறைச்சாற்றிக் கொண்டு. இந்திய அரசு முஸ்லீம்களுக்கு எதிராக நடந்த கொலை வெறிச் செயல்களுக்கும் குண்டு வெடிப்புகளான சாம்கதா, மலேகான், ஹைதரா பாத், அஜ்மீர் போன்றவைகளிலும் முஸ்லீம் பயங்கரவாதிகளுக்கும் இந்துத்துவா பயங்கரவாதிகளுக்கும் நீதி நெறி முறைகளில் பாகுபாடு காட்டாது நடந்து கொள்ள இதுவே தருணம் ஆகும். மேலும் இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் உயர்த்திப் பிடிக்கும் மதசார்பின்மைக்கும் அடிப்படை ஆகும். ✷

**– Economic & Political Weekly, July 31, 2010**

## தவறு செய்தவர்களை பழிவாங்கும் நோக்கில் தண்டனை தரக்கூடாது

தவறு செய்தவர்களை தண்டிக்கும் போது அது ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமே தவிர, பழிவாங்கும் செயலாக இருக்கக் கூடாது என உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. மத்திய பிரதேச மாநிலம் கோலார் அணைப்பகுதி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றியவர் ராமானுஜ்பாண்டே. பொதுப் பணித்துறையில் புல்டோசர் டிரைவராக பணியாற்றி வந்த லட்சுமி நாராயணா என்பவர் குடித்து விட்டு தகராறு செய்ததாக பாண்டே வழக்கு தொடர்ந்தார். 1991ம் ஆண்டு செப்டம்பர் 25ம் தேதி இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது.

துறை ரீதியாக மேல் அதிகாரிகள் நடத்திய விசாரணையில் இது பொய் வழக்கு என்பது தெரிய வந்தது. இதை தொடர்ந்து, கடந்த 1992ம் ஆண்டு மே 7ம் தேதி பாண்டே பணியிலிருந்து நீக்கப்பட்டார். இதை எதிர்த்து பாண்டே, போபால் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். சாதாரண தவறுக்கு மிகப்பெரிய தண்டனை கொடுக்கப்பட்டு இருப்பதாக மனுவில் குறிப்பிட்டிருந்தார். இந்த மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து பாண்டே, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு மனு தாக்கல் செய்தார். இந்த மேல் முறையீட்டு மனுவை நீதிபதிகள் தருண் சட்டர்ஜி மற்றும் எச்.எல்.டாத்து ஆகியோர் அடங்கிய பெஞ்ச் விசாரித்து, பாண்டேவை பணி நீக்கம் செய்து மத்திய பிரதேச அரசு பிறப்பித்த உத்தரவை ரத்து செய்தது. பணி நீக்கத்துக்கு பதிலாக கட்டாய ஓய்வு அளிக்கலாம் என ம.பி.அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மேலும் தவறு செய்தவர்களுக்கு தண்டனை வழங்கும் போது அது ஓர் எச்சரிக்கை நடவடிக்கையாக இருக்க வேண்டுமே தவிர பழி வாங்கும் நடவடிக்கையாக இருக்கக்கூடாது என ஆலோசனையும் வழங்கியது.

**– தினகரன், 27.6.09**

# சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வது அனுமதிக்கப்பட முடியாது –
## தகவல் உரிமை சட்டச் செயல்பாட்டாளர் சுபாஷ் சந்திர அகர்வால் பேட்டி

–அஜாய் ஆசீர்வாத் மகாபிரசஸ்தா

இந்தச் சட்டம் வந்ததில் இருந்து சுபாஷ் சந்திர அகர்வால் தொடர்ச்சியாக போராடிய ஒரு போராளியாக இருந்துள்ளார். 800 மனுக்களை பல்வேறு அரசுத்துறைகளுக்கு அனுப்பி தகவல் பெற்று, அமைப்பில் உள்ள பல ஊழல்களை வெளிப்படுத்தியவர் என்னும் அரிதான பெருமையும் இவருக்கு உள்ளது. இவரும் இவரது மனைவி மது அகர்வாலும் பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கடிதங்கள் எழுதுவதில் ஒரு ஆண்டில் மிக அதிகமான கடிதங்களை அனுப்பியவர்கள் என்னும் உலக சாதனையைப் படைத்துள்ளனர். கின்னஸிலும் இடம் பெற்றுள்ளனர். அமைப்பில் உள்ள ஊழல்கள் மற்றும் ஓட்டைகளைப்பற்றிய விவகாரங்களில் தகவல் உரிமைச் சட்டத்தை இவர் பயன்படுத்தும் முறை என்பது நீதித்துறை மற்றும் நிர்வாகத்துறை வட்டாரங்களைக் கூர்மையாக கவனிக்க வைத்துள்ளது.

**சட்டத்தின் பிரிவுகளில் இருந்து ‘‘கோப்புக்குறிப்புகள்’’ எனும் பகுதியை நீக்கிவிட அரசாங்கம் முயல்கிறது. பணியாளர் மற்றும் பயிற்சித்துறைதான் இந்த சட்டத்தை அமலாக்கும் பொறுப்பு மையம். இந்த சட்டத்தில் ‘‘கோப்பு குறிப்புகளையும் உள்ளடக்குவது பற்றி இது ஒருபோதும் ஆர்வம் காட்டியது இல்லை.**

உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சொத்து விவகாரங்களை வெளியிடக் கோரும் இவரது மனுவை உச்ச நீதிமன்ற தலைமை ஏற்றுக் கொண்ட போது, நீதிபதி அலுவலகத்தையும் தகவல் உரிமைச் சட்ட வரம்புக்குள் இருப்பதாக அறிவிக்க வேண்டும் என்ற அகர்வாலின் மனுவை டெல்லி உயர்நீதிமன்றம் உயர்த்திப் பிடித்தது. டெல்லியில் உள்ள அவரது சாந்தினி சவுக் அலுவலகத்தில் அவரது சாதனைகளையும், அரசியல் அமைப்பை எவ்வாறு தகவல் உரிமைச் சட்டம் மேலும் கடமைப் பொறுப்பு கொண்டதாக ஆக்குகிறது என்பதை பற்றியும் பிரெண்ட் லைனிடம் அவர் பேசினார்.

**கேள்வி: பல்வேறு அரசுத் துறைகளில் இருந்து தகவல்களைப் பெற தகவல் உரிமைச் சட்டத்தை பயன்படுத்த எது உங்களை உற்சாக மூட்டியது ?**

இதுவரை 800 தகவல் உரிமைச் சட்ட மனுக்களை பதிவு செய்துள்ளேன். 150க்கும் மேற்பட்டவை மத்திய தகவல் ஆணையத்துக்குப் போயுள்ளன. முதலில் நீதித்துறை தான் பிரதானமாக எனது நோக்கமாக இருந்தது. தகவல் உரிமைச் சட்டத்தின் மூலம் தகவலகளை வெளிப்படுத்தி, ஊடகத்தோடு ஒத்துழைத்த முதல் மனிதன் அனேகமாக நானாகவே இருப்பேன்.

பொது நன்மைக்காக விவகாரங்களை மேலும் தீவிரமாக பின் தொடர தகவல் உரிமைச் சட்டம் ஒரு ஆயுதமாக மாறியது. ஆனால் உண்மையில் உயர்நீதித்துறையில் ஏற்பட்ட ஒரு தனிப்பட்ட புகார்தான் என்னை இந்த நிலைக்கு உந்தித்தள்ளியது.

**கேள்வி: இதன்பிறகு எந்த எந்த பகுதிகளுக்குக் கவனம் செலுத்தினீர்கள் ?**

பொது நன்மைக்கான எல்லா விசயமும் தான். இவற்றில் முக்கியமானது, மந்திரிகள், நீதிபதிகள் சொத்து விவரம், நீதித்துறை அதிகாரிகளை நியமனம் செய்தல், நீதித்துறையில் முடிவுகள் மீது அமைச்சர்கள் செல்வாக்கை செலுத்துதல் ஆகியவை. நீதித்துறை மீது அக்கறை கொண்ட இந்த மனுக்கள் உச்ச நீதிமன்றத்திலேயே, உச்ச நீதிமன்றத்தால் சவாலாக எடுத்துக கொள்ளப்பட்டன. சமீபத்தில் நான் காமன்வெல்த் போட்டிகளைப் பற்றிய செலவினங்களை வெளிப்படுத்தினேன். போட்டிகளைத் திட்டமிட்ட போது இருந்ததைவிட பல மடங்கு செலவுகள் கூடின. அரசாங்க உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் இடையே உள்ள ஊழல்கள் பற்றி அனேக மனுக்கள் உள்ளன. பத்மபூஷன் உள்ளிட்ட விருதுகளுக்கு தேர்வு செய்வதில் ஊழலும், வேண்டியவர்களுக்குச் சார்பாக செயல்படுவது பற்றியும் வெளிப்படுத்தினேன். நீதிபதிகள் சொத்து விவர சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகமாகியுள்ளது. இது என் வெற்றி

**கேள்வி: இவ்வளவு மனுக்களை தாக்கல் செய்த பிறகும், இந்தத் தகவல் உரிமைச் சட்டத்தில் ஏதேனும் பற்றாக்குறை இருப்பதைப் பார்க்கிறீர்களா ?**

**பதில்:** உலகின் மிகச்சிறந்த தகவல் உரிமை சட்டங்களுக்குள் இந்தியச் சட்டமும் ஒன்று. ஆனால் பிரிவுகள் 27,28 கட்டாயம் அகற்றப்பட வேண்டியவை. தமது சொந்த விதிகளை உருவாக்கிக் கொள்ளலாம் என்று மாநில அரசு அதிகாரிகளுக்கு இவை அதிகாரம்

தருகின்றன. இந்தப் பிரிவு பொது அதிகாரத்துவத்தால் அடிக்கடி தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, டெல்லி உயர் நீதிமன்றம் ஒரு மனுவுக்கு ரூ500/– எனக் கட்டணம் நிர்ணயித்தது. இது சட்டத்திற்கு முரணானது. நீதிபதி ஏ.பி.ஷா டெல்லி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக வந்தபோது இவற்றை மாற்றி சீரமைத்தார். மும்பை உயர்நீதிமன்றம் வேறொருவர் சார்பாக போகும் மனுக்களை ஏற்கவில்லை. இதுவும் ஒரு சட்ட மீறல்தான்.

அதேபோல, பொதுநிறுவன அதிகாரிகளால் எழுதப்பட்ட சமர்பித்தல்கள் மத்திய தகவல் ஆணையத்தின் முன்பாக நிச்சயிக்கப்பட்ட விசாரணைக்கு குறைந்த பட்சம் 20 நாட்களுக்கு முன்பாக தரப்படுவது (புகார் அளித்தவருக்கு ஒரு நகல் அனுப்புவதும் கூட) கட்டாயமாக்கப்பட வேண்டும். ஆணையத்தின் ஒரு நபர் விசாரணை முடிவுகளை மறுபரிசீலிக்க ஆணையத்திலேயே அதிக அளவிலான நபர்களைக் கொண்ட விசாரணை பெஞ்ச் அமைக்க ஆணையத்துக்கு அதிகாரம் தரப்படவேண்டும். பணியாட்கள் மற்றும் பயிற்சித்துறை மற்றும் நீதித்துறை கேட்பது போல சட்டத்தை நீர்த்துப்போகச் செய்தல் கூடவே கூடாது.

**கேள்வி: சட்டத் திருத்தங்களுக்கு எதிரான பிரச்சாரத்தை பற்றி உங்களது கருத்துகள் ?**

சட்டத்தின் பிரிவுகளில் இருந்து "கோப்புக்குறிப்புகள்" எனும் பகுதியை நீக்கிவிட அரசாங்கம் முயல்கிறது. பணியாளர் மற்றும் பயிற்சித்துறை தான் இந்த சட்டத்தை அமலாக்கும் பொறுப்பு மையம். இந்த சட்டத்தில் "கோப்பு குறிப்பு" களையும் உள்ளடக்குவது பற்றி இது ஒருபோதும் ஆர்வம் காட்டியது இல்லை. அதன் இணையதளத்தில் கூட கோப்புக்குறிப்புகள் சட்டத்தின் கீழ் வரவில்லை என உள்ளது. மத்திய தகவல் ஆணையம் தனது பல்வேறு வழக்குகளில் "கோப்புக் குறிப்புகளும்" சட்டத்தில் உள்ளடக்கப்பட்டது தான் என வலியுறுத்தி உள்ளது. எனவே, நான் பணியாளர் மற்றும் பயிற்சித் துறைக்கு ஒரு பொதுத் தகவல் உரிமைச் சட்டத்தில் மனு அளித்தேன். அதன் அதிகாரிகள் எப்போதும் பதிலளிக்க மிகவும் நேரம் எடுத்துக் கொள்வார்கள்.

எனது மனுக்களில் ஒன்றுக்கு பதில் தரும்போது ஜனாதிபதி அலுவலகம் முதல்முறையாக "கோப்புக்குறிப்புகள்" தகவல் உரிமைச் சட்டத்தின் அதிகார வரம்புக்குள் வரவில்லை என அறிவித்தது. ஆனால் அதற்கு முன்பாகவே பல்வேறு கோப்புக் குறிப்புகளை நான் பெற்று இருந்தேன். அதன் பிறகு, முதன்மைத் தகவல் ஆணையர் வஹ்ஹாத் அபிபுல்லாவுக்கு நான் மின் அஞ்சல் அனுப்பினேன். அதில் பணியாளர் மற்றும் பயிற்சித்துறை (ப.ப.துறை) தகவல் அளிக்க நேரம் தேவை என்பதை தகவல் உரிமைச் சட்டத்தை ஊற்றி மூடுவதற்காக பயன்படுத்திக் கொண்டு இருக்கிறது என எழுதினேன். அதை அவர் மிகவும் அக்கறையோடு எடுத்துக்கொண்டார். சட்டத்தை மீறியவர்கள்மேல் ஏன் ஒழுங்கு நடவடிக்கையும், அபராதமும் விதிக்கப்படக் கூடாது எனக் கேட்டு எனது மனுவின் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தார். பணியாளர் மற்றும் பயிற்சித்துறையை தனது இலக்காக எடுத்துக்கொண்ட முதன்மைத் தகவல் ஆணையம் குற்றத்தன்மையுடன் கூடிய அலட்சியம் பணியாளர் மற்றும் பயிற்சித்துறையிடம் உள்ளது என விவாதிக்க முயன்றது. அப்போது கூட பணியாளர் மற்றும் பயிற்சித்துறை அதைப் பற்றி கவலைப்படவில்லை.

எனவே, முதன்மைத் தகவல் ஆணையத்தின் ஆணைகளை நீதிமன்றத்தில் ஏன் பணியாளர் மற்றும் பயிற்சித்துறை சந்திக்க முயலவில்லை என மற்றொரு மனுவை பணியாளர் மற்றும் பயிற்சித்துறையிடம் அனுப்பினேன். இந்த வலையில் பணியாளர் மற்றும் பயிற்சித்துறை மாட்டிக்கொண்டது. ஒன்று, அதன் "கோப்புக் குறிப்புகளை" மக்களுக்கு தரவேண்டும் அல்லது தகவல்களை தராமல் வேண்டுமென்றே தாமதிக்க தனது அதிகாரிகளுக்கு முதன்மைத் தகவல் ஆணையம் தந்த தண்டனைகளை பற்றிய விபரத்தை வெளிப்படுத்த வேண்டும். பணியாளர் மற்றும் பயிற்சித்துறை தகவல் உரிமைச் சட்டத்தின் அதிகார வரம்புக்குள் கோப்புக் குறிப்புகளும் வருகின்றன என்பதை பெற்றுக் கொண்டு முழுமையாக சரண் அடைந்தது. இந்தச் சட்டம் நமது அரசியல் அமைப்பை மேலும் கடமைப் பொறுப்புள்ளதாக மாற்றியுள்ளது. அதன் எல்லா பலம், பலவீனத்தோடு முதன்மைத் தகவல் ஆணையத்தில் தேங்கி இருக்கிற எனது மனுவில் தான் சமீபத்தில் பிரதமர் அலுவலகம் தலையிட்டு பணியாளர் மற்றும் பயிற்சித்துறைக்கு கோப்புக் குறிப்புகளை "தகவல்களாக" எடுத்துக் கொள்ளுமாறு வழிகாட்டியுள்ளது.

**கேள்வி: நாடு முழுதும் எட்டு தகவல் உரிமைச் செயல்பாட்டார்கள் பல்வேறு ஊழல்களை வெளிப்படுத்தியதற்காக கடந்த 7 மாதங்களில் கொல்லப்பட்டுள்ளனர். நீங்களும் ஒரு செயல்பாட்டாளர். செயல்பாட்டாளர்களுக்கு தற்காப்பு உதவியோ, பாதுகாப்போ அரசால் செய்ய முடியும் என நினைக்கிறீர்களா ?**

**பதில்:** இந்தத் தாக்குதல்கள் எப்போதும் உள்ளன. ஏனென்றால் அரசியல் வாதிகளுக்கும் குற்றவாளிகளுக்கும் இடையே நெருக்கம் உள்ளது. இவர்களை யாராலும் தடுக்க முடியாது. ஏனென்றால் ஒரு தகவல் உரிமைச் சட்டச் செயல்பாட்டாளர்களுக்கு ஒரு குறிப்பான வரையறை கிடையாது. அவர்களுக்கு பாதுகாப்பளிப்பது நடைமுறையில் இயலாத ஒன்று. மிகத் தீவிரமான கருத்து இதில் எனக்கு உள்ளது. மிக மிக

முக்கிய பிரமுகர்களையும், உயர் அதிகாரிகளையும் பாதுகாக்கும் வளையம் இல்லாமல் போனால்தான் சாமான்யர்களின் உயிர் பற்றிய சொரணை அதிகாரிகளுக்கு ஏற்படும். தகவல் உரிமைச் சட்ட செயல்பாட்டாளர்கள் மற்றும் புகார்தாரர்களின் உயிரைப்பற்றிய சொரணை அப்போது தான் அதிகாரிகளுக்கு வரும். பிரமுகர்களுக்கான பாதுகாப்புக்கான பணம் மக்களின் கஜானாவில் இருந்து வருகிறது. சமூக விரோதிகள் அரசியல் வாதிகளின் முகமூடிக்குக் கீழே வேலை செய்கிறார்கள். தகவல் உரிமைச் சட்டச் செயல்பாட்டாளர்கள் அவர்களுக்கு உண்மையான அபாயம். சட்டத்தை உருவாக்குபவர்களும் கடமைப் பொறுப்பை வெறுக்கிறார்கள். அவர்களை தகவல் உரிமைச் சட்டம் கடமைப் பொறுப்புள்ளவர்களாக ஆக்குகிறது. எனவே, மேலும் அதிக தாக்குதல்களும், கொலைகளும் நடக்கும் என அஞ்சுகிறேன்.


**கேள்வி: அரசின் பரிசீலனையில் உள்ள “தகவல் தருவோர் பாதுகாப்புச் சட்டம்” தகவல் தருபவருக்கு ஒரு விதமான தற்காப்பை தரும் வகையில் முன்மொழியப்பட்டு உள்ளது. தகவல் உரிமைச் சட்ட செயல்பாட்டாளரை வரையறுக்க முடியாத காரணத்தால் அவரை அவர் பாதுகாத்துக் கொள்ளுமாறு உத்தரவாதப்படுத்த ஏதேனும் வழி உள்ளதா ?**

ஒரு தகவல் உரிமைச் சட்ட செயல்பாட்டாளரைப் பற்றி ஒரு துல்லியமான வரையரையை செய்ய முடியாது. யாரும் தனக்குத் தேவையான விபரத்தைப் பெற தகவல் உரிமைச் சட்ட மனுவை போடலாம் ஒருவர் 100 மனு போட்டால் அவரைத் தகவல் உரிமைச் சட்ட செயல்பாட்டாளர் எனக் கூற முடியுமா? தேவையில்லை. யாரெல்லாம் தகுதியற்றவரோ அவர்கள் எல்லோருக்கும் அளித்துள்ள பாதுகாப்பை நீக்குவது தான் ஒரே வழி. அப்போது தான் சாமான்ய மனித உயிர்களின் மதிப்பைப் பற்றி அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

**கேள்வி: உங்கள் அனுபவத்தில் இருந்து, எந்தத் துறையை மிகவும் ஒத்துழைப்பு இல்லாததாகச் சொல்வீர்கள்.**

டெல்லி மாநகராட்சி தான் மோசமான துறை தகவல் உரிமைச் சட்ட மனுக்களைப் போடாதே எனடக் கீழ்த்தரமாக போன் செய்து திட்டும் குரல்களை அங்கிருந்து நான் கேட்டதுண்டு. கம்பிகளால் சூழப்பட்ட ஒரு உயரமான இடத்தில் பிணத்தை எரிக்க அதிகாரப்பூர்வமற்ற முறையில் டில்லி மாநகராட்சி 4000 ரூபாய் வசூலித்த ஊழலை நான் அம்பலப்படுத்தினேன். அவர்கள் அதை முக்கியப் பிரமுகர் கட்டணம் என்றனர். இதற்கான கோப்புக் குறிப்புகளை நான் கேட்டேன். டில்லி வளர்ச்சிக் கழகத்திடம் அதைத் தள்ளிவிட அவர்கள் முயன்றனர். அது, தனக்கு இது பற்றி ஒன்றும் தெரியாது எனக் கூறிவிட்டது. பிறகு அவர்கள் அது, லோதி ரோட்டில் உள்ள ஆரிய சமாஜ்என்ற தனியார் அமைப்பும் அரசும் சேர்ந்து நடத்துவது எனவே ஆரிய சமாஜ்அந்த கட்டணத்தை வசூலித்திருக்க வேண்டும் என்று கூறியது. ஆனால் ஆரிய சமாஜம் அதை மறுத்துவிட்டது. டில்லி மாநகராட்சி என்னை மிரட்ட சில குண்டர்களையும் அனுப்பியது. அதன் அதிகாரிகள் முரட்டுத் தனமானவர்களாகவும் பகையோடும் உள்ளனர். ✷

**– Frontline, Sep 10, 2010**




Source : The Hindu 14-08-2010

# நிரூபிப்பதற்கான சுயேச்சையான நிறுவனத்துக்காக

## மகசேசே விருது பெற்ற அரவிந்த் கேஜ்ரிவால் பேட்டி

– பூர்ணிமா எஸ். திருப்பாதி

தகவல் உரிமைச் சட்ட செயல்பாட்டாளரும் மகசேசே விருது பெற்றவருமான அரவிந்த் கேஜ்ரிவால், தகவல் உரிமைச் சட்டத்தின் மூலம் சம்பவப்படுத்தப்பட்ட ஊழல்களை நிரூபிப்பதற்கான சுயேச்சையான ஆணையத்தை அரசாங்கம் அமைக்கவில்லை என்றால் தகவல் உரிமைச் சட்டத்தின் நோக்கம் தோர்க்கடிக்கப்பட்டு விடும் எனும் கருத்தோடு இருக்கிறார்.

**ஊழல் வழக்குகளை விசாரிக்க நம்மிடம் சுயேச்சையான நிறுவனம் இல்லை. ஒரு ஊழல் அதிகாரி மீது புகார் அளிக்க விருப்பினால் நீங்கள் எங்கு போவீர்கள்? அவரும் ஒரு பகுதியாக உள்ள அதே நிறுவனத்துக்கும், அதே அதிகாரிகளிடமும் தான்.**

கரக்பூர் ஐஐடியைச் சேர்ந்த (1989) ஒரு மெக்கானிக்கல் பொறியாளரான இவர், 1992ல் இந்திய வருவாய்துறையில் சேர்ந்தார். 2000 ஆண்டு வரை வருமான வரித்துறையில் பணியாற்றினார். அவரது காலத்தில் தனது துறையில் வெளிப்படைத் தன்மையை கொண்டுவர உழைத்தார். நீதி மற்றும் வெளிப்படைத் தன்மை மற்றும் கடமைப் பொறுப்பு கொண்ட ஆளுகைக்கான குடிமக்கள் இயக்கத்தை பரிவர்தான் எனும் பெயரில் 2000த்தில் அவர் துவக்கினார். தகவல் உரிமைச் சட்டத்துக்காக அருணாராய் உள்ளிட்டோரோடு சேர்ந்து பிரச்சாரம் செய்தார். 2006ல் ரொமன் மகசேசே விருது அவருக்கு இந்த துறையில் அவரது பணிக்காக அளிக்கப்பட்டது.

அப்போதில் இருந்து அரசுப்பணியை ராஜினாமா செய்து விட்டு, ஊழலுக்கு எதிரான அவரது பணியைச் செய்கிறார். அவரது பேட்டியில் சில பகுதிகள்:

**கேள்வி: தகவல் உரிமைச் சட்ட செயல்பாட்டாளர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இந்தச் சட்டம் ஊழலை அம்பலப்படுத்தும் பலமான கருவியாக மாறிவிட்டதா? அதனால் அம்பலப்படுத்தப்பட்டோர் செயல்பாட்டாளர்களை கொல்லும் அளவுக்கு செல்கிறார்களா?**

ஊழலை வெளிப்படுத்துவதில், பலமான கருவியாக தகவல் உரிமைச் சட்டம் எழுந்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. தகவல் உரிமைச் சட்ட செயல்பாட்டாளர்கள் மட்டும் என்பதில்லை ஏன்? ஊழலை எதிர்த்து குரல் தரும் எல்லோருமே தாக்குதலுக்கான இலக்காகிவிடுவார்கள். தகவல் உரிமைச் சட்டச் செயல்பாட்டாளர்கள் விசயத்தில் அம்பலப்படுத்தப்பட்ட ஊழல் வழக்குகள் கடந்த 4, 5 வருடங்களில் பல மடங்கு கூடியுள்ளன. இது குற்றவாளிகளுக்குப் பதட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. தங்களை அம்பலப்படுத்தியோரை துன்புறுத்த நினைக்கும் அவர்களது முயற்சிகளில் இது வெளிப்படுகிறது. ஊழலை வெளிப்படுத்தியதற்காகத் தாக்கப்பட்ட, கொல்லப்பட்டவர்களை பற்றிய சங்கடப் படவைக்கும் செய்திகள் எங்களுக்கு வந்துள்ளன. இதில் சம்மந்தப்பட்டுள்ள பெரிய விசயம் என்பது தகவல் உரிமைச் சட்டச் செயல்பாட்டாளர்கள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்டு தனிநபர்களின் மீதான தாக்குதலாக மட்டும் இல்லை. ஜனநாயகத்துக்கு உள்ளிருந்தே வரும் ஆபத்தாகவே இது இருக்கிறது. ஊழலில் ஈடுபடுவோர் ஆக்கிரமிப்பு உணர்வுள்ளவராக, அடங்காதவராக, சகிப்புத்தன்மை இல்லாதவராக, சட்டத்துக்கும் நிர்வாக இயந்திரத்துக்கும் பயப்படாதவராக மாறிவிடுகின்றனர். இது நமது அடிப்படைகளான ஜனநாயக அரசமைபையும், சட்டத்தில் ஆட்சியையும் அசைத்துப்பார்க்கிறது.

**கேள்வி: சட்டத்தை அமலாக்கும் நிறுவனங்கள் இத்தகைய புகார்களை அலட்சியமாக கையாள்கிறார்களா? அல்லது அவர்களும் இத்தகையவற்றுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதை உணர்கிறீர்களா?**

ஆமாம், அதிகாரிகள் உடந்தையாக உள்ளனர். அரசியல் மற்றும் நிர்வாக இயந்திரத்தின் நேரடி அல்லது மறைமுக ஈடுபாடு இல்லாமல் எந்த ஊழலும் நடைபெற முடியாது. எனவே, ஒரு ஊழல் அதிகாரி மீது நீங்கள் புகார் செய்தால், அது அந்த ஊழலோடு சம்மந்தப்பட்டுள்ள அதே அதிகாரிகளிடம் தான் செல்கிறது.

இங்கே இரண்டு பார்வை, கோணங்கள் உள்ளன. முதலாவதாக, ஊழல் வழக்குகளை விசாரிக்க நம்மிடம் சுயேச்சையான நிறுவனம் இல்லை. ஒரு ஊழல் அதிகாரி மீது புகார் அளிக்க விருப்பினால் நீங்கள் எங்கு போவீர்கள்? அவரும் ஒரு பகுதியாக உள்ள அதே நிறுவனத்துக்கும், அதே அதிகாரிகளிடமும் தான். உதாரணமாக, மத்திய ஊழல் தடுப்பு ஆணையம் அல்லது மத்திய புலனாய்வு நிறுவனம் அல்லது மாநில ஊழல் தடுப்பு ஆணையத் துறைகளை எடுத்துக் கொள்வோம். மத்திய ஊழல் தடுப்பு ஆணையம் என்பது பல் இல்லாத ஆலோசனை அமைப்பு அதன் ஆலோசனையை அரசு கேட்கவும் செய்யலாம். கேட்காமலும் போகலாம். மத்திய ஊழல் தடுப்பு

ஆணையத்தால் அரசியல் வாதிகளை விசாரிக்க முடியாது. நிர்வாகிகளை மட்டும் தான். எனவே, அதன் நோக்கத்தில் பாதி தோற்கடிக்கப்படுகிறது.

மத்தியப் புலனாய்வு நிறுவனம் ஏற்கனவே அளவுக்கு அதிகமாக சுமைகளை சுமக்கிறது. நீங்கள் எதை அம்பலப்படுத்த நினைக்கிறீர்களா அதே அரசியல் அமைப்பின் கீழ் தான் மத்தியப் புலனாய்வு நிறுவனம் உள்ளது. தன்னுடைய சொந்த அரசியல் மாஸ்டர்களையே மத்தியப் புலனாய்வு நிறுவனம் அம்பலப்படுத்த இயலும் என உங்களால் எதிர்பார்க்க முடியுமா? ஒரு எதிர் கட்சித் தலைவரையோ, சாதாரண குடிமகனையோ, தனது பலத்தையெல்லாம் திரட்டி விசாரிக்கும். ஆனால், ஒரு அமைச்சர், மத்திய புலனாய்வு நிறுவனத்தால் அம்பலப்படுத்தப்பட்டார் என்றோ, அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது என்றோ ஒரே ஒரு வழக்கையாவது உங்களால் காட்ட முடியுமா? இதே கதை தான் மாநில ஊழல் தடுப்பு ஆணையத் துறைகளிலும், நீங்கள் அம்பலப்படுத்த நினைக்கிற இதே அரசியல், நிர்வாக அமைப்பிடம் தான் அவர்களும் பணியாற்றுகிறார்கள். எனவே, எப்படி அவர்களால் சுயேச்சையாக பணியாற்ற முடியும். ஊழல் வழக்குகளை விசாரிக்க உண்மையாகவே சுயேச்சையான அமைப்பு நமக்கு தேவை, அதற்கு தண்டனைகளை வழங்கும் அதிகாரமும் தேவை. அப்போதுதான் தகவல் உரிமைச் சட்டத்தின் நோக்கம் அதன் முழுமையான ஆற்றலோடு யதார்த்தமாக மாற முடியும்.

**நமது சட்ட அமைப்பு, ஊழலின் காரணமாக யாரையும் தண்டிப்பதை ஏறக்குறைய இயலாத தாக்கும் விதமாக ஓட்டைகள் கொண்டதாக உள்ளது.**

இங்கே சம்மந்தப்படுகிற மற்றொரு பரிமாணம் என்பது பற்றாக்குறையான சட்டங்கள். நமது சட்ட அமைப்பு, ஊழலின் காரணமாக யாரையும் தண்டிப்பதை ஏறக்குறைய இயலாத தாக்கும் விதமாக ஓட்டைகள் கொண்டதாக உள்ளது. இது மாற்றப்பட வேண்டும். 1970களில் ஊழல் கேள்விப்படாத அளவு உயரத்துக்குப் போய், குற்றங்களின் எண்ணிக்கையும் உயர்ந்து அரசு அமைப்பின் மேல் மக்கள் சுத்தமாக வெறுத்துப்போய்விட்ட நிலையில் இருந்த ஹாங்காங்கை நான் மேற்கோளாகக் காட்ட விரும்புகிறேன். மக்கள் எழுச்சி அங்கே இருந்தது. லட்சக்கணக்கான மக்கள் தெருவுக்கு வந்தார்கள். அது ஊழலுக்கு எதிரான சுயேச்சையான ஆணையத்தை உருவாக்கிட அரசுக்கு நிர்பந்தம் தந்தது. இந்த நேரத்தில் 107 காவல்துறை அதிகாரிகள் ஹாங்காங்கில் இருந்தனர். அதில் 103 பேர் ஒரே அடியில் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இன்று ஹாங்காங் உலகின் சுத்தமான இடங்களில் ஒன்று. அதே போன்ற தீவிரத்தோடு நாம் செயல்பட வேண்டும். அப்போது மட்டும் தான் தகவல் உரிமைச் சட்டம் போன்ற புரட்சிகரமான சட்டத்தின் நோக்கம் நிறைவேறும்.

**தகவல் உரிமைச் சட்டச் செயல்ப்பாட்டார்கள் ஒரு மக்கள் இயக்கத்தை பாய்ந்து செல்லச் செய்ய உள்ளோம்.**

**கேள்வி: ஆனால், இந்யிாவில் இதை சாதிக்க முடியும் என்று நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்?**

மக்கள் சக்தி மக்கள் வெளிப்படையாக அரசாங்கத்துக்கு எதிராக, ஊழலுக்கு எதிராக, வராமல் சுயேச்சையான ஊழலுக்கு எதிரான அமைப்பை கொண்டு வரச்சொல்லி அரசை மக்கள் கட்டாயப்படுத்தாமல் எதுவும் நடக்காது. மக்கள் மட்டுமே இதைச் செய்ய முடியும்? ஆனால் மக்கள் இங்கே எங்கே இருக்கிறார்கள்? இதைப்பற்றிய போதுமான விழிப்புணர்ச்சி இந்தியாவில் இல்லை. மிக நீண்ட காலமாக ஊழலால் மக்கள் துன்பப்பட்டு வருவதால், ஊழலை ஒரு வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொள்ளும் நிலைகளுக்கு அவர்கள் வந்துள்ளார்கள். நாம் ஒரு மக்கள் இயக்கத்தை துவக்கி இந்த மாறுதலை உந்தித் தள்ள வேண்டும். தகவல் உரிமைச் சட்டச் செயல்பட்டனர் ஒரு மக்கள் இயக்கத்தை பாய்ந்து செல்லச் செய்ய உள்ளோம். சீக்கிரத்தில் ஏதாவது கண்ணுக்கு தெரியும் படியாக வரும்.

**கேள்வி: மத்திய தகவல் ஆணையம் இதில் ஏதேனும் பாத்திரம் வகிக்குமா?**

எனக்கு சந்தேகம் உண்டு. மத்திய தகவல் ஆணையம் இந்த நிறுவனத்தோடு என்ன செய்ய முடியும்? அதுவும் ஒரு அதிகார வர்க்க ஸ்தானமாக தன்னை தாழ்த்திக் கொண்ட, சிவப்பு நாடா அதிகாரி வர்க்கத்தன்மையால் மென்மையாக்கப்பட்ட இந்த ஆணையத்தால் என்ன பாத்திரம் வகிக்க முடியும்?

**கேள்வி: தகவல் உரிமைச் சட்டச் செயல்பாட்டாளர்கள் மேல் இத்தகைய தாக்குதல்கள் பாதுகாத்துக் கொள்ளும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்று கருதுகிறீர்களா?**

அப்படியானால், தகவல் உரிமைச் சட்டத்தை பயன்படுத்துவதில் அது பிரதிபலிக்காமல் இருக்காது. ஆமாம், மக்கள் குறிவைத்து தாக்கப்படுகிறார்கள். ஆனால் தகவல் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி ஊழலை அம்பலப்படுத்துவதில் இருந்து மக்களை இதனால் தடுக்க முடியவில்லை. இது ஆரோக்கியமான அறிகுறி. ஊழலுக்கு எதிரான சண்டை ஜெயிக்க முடியும் என்பதற்கான அடையாளம் இது. ✸

– **Frontline, Sep 10, 2010**

# சிக்கலான நடைமுறை

## தகவல் ஆணையர்களை தேர்வு செய்கிற முறை என்பது மறுசீரமைக்கக் கோரி அழுகிறது

- V. வெங்கடேஷ், புதுடெல்லி

தகவல் உரிமைச் சட்டம் வெற்றிகரமாக செயல்பட வேண்டுமானால், அது தகவல்களை பகிர்ந்து கொள்வதை உற்சாக மூட்டவும், தகவல்களை தரமறுப் போரைத் தண்டிக்கும் விதமாகவும் பிரிவுகள் கொண்டதாக இருந்தால் மட்டும் போதாது. இத்தகைய ஆதரமான சட்டப்பிரிவுகளை விட, தகவல் ஆணையர்கள் முன்பாக மேல்முறையீட்டு மனுக்கள் வரும் போது சட்டத்தின் நோக்கங்களுக்கு தகவல் ஆணையர்கள் எந்த அளவு கட்டுப்பாடான உறுதி கொண்டுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது என்கிறார்கள் செயல்பாட்டாளர்கள். “பொதுமக்கள் நோக்கம் ஆய்வு அறக்கட்டளை” எனும் டெல்லியை சேர்ந்த அமைப்பு 2009ல் தகவல் ஆணையர்களின் செயல்பாடுகள் நாடுமுழுவதும் மிகவும் ஏற்றதாழ்வான முறையில் இருந்ததை வெளிப்படுத்தி உள்ளன.

பொது மக்கள் நோக்கம் ஆய்வு அறக்கட்டளை தகவல் ஆணையர்களுக்கான விருதுகளை வழங்க முடிவு செய்தது. அதற்காக ஆய்வு செய்து 11 பேர் கொண்ட நடுவர் குழு அமைக்கப்பட்டது. 72 தகவல் ஆணையர்கள் 25 தகவல் ஆணையர்களிடமிருந்து உருவான 14 ஒருங்கிணைந்த 14 பெஞ்சுகள், மூலமாக 2008ல் தொடுக்கப்பட்ட 51,128 வழக்குகளில் அறிவிக்கப்பட்ட ஆணைகள் ஆய்வு செய்யப்பட்டன (உத்திரபிரதேஷ், தமிழ்நாடு சிக்கிம், நீங்கலாக) 35,930 வழக்குகளில் (68 சதவீதம்) மக்களுக்குச் சாதகமாக ஆணைகள் வந்தன. அஸ்ஸாம், சத்திஸ்கர், அருணாச்சலப் பிரதேஷ், பஞ்சாப், கர்நாடகா மாநிலங்களில் 90 சதவீதத்துக்கு மேலான வழக்குகளில் தகவல் தருமாறு ஆணைகள் பிறந்தன. அத்தகைய ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகும் கூட எல்லோருக்கும் தகவல்கள் கிடைத்துவிடவில்லை. தேசிய அளவில் வெறும் 38 சதவீதம் தான் இத்தகைய ஆணைகளுக்குப் பிறகும் தகவல்கள் கிடைத்தன. அருணாச்சலப் பிரதேசம் மட்டும் 90 சதவீதத்துக்கும் மேலான அரசாணைகள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. தகவல் ஆணையர்கள் தகவல் கேட்டவர்களுக்கு ஆணை பிறப்பத்ததோடு அந்த வழக்கை மூடிவிட்டனர். அது நிறைவேற்றப்பட்டதா என பார்க்கவில்லை. மனு செய்தவர்கள் பொது நிறுவனத்தோடு மாதக்கணக்கில் போராடவேண்டி இருந்தது. ஆணையை நிறைவேற்றாத நிலையால் வெறுப்படைந்தால் பல மனுதாரர்கள் திரும்ப தகவல் ஆணையத்துக்கு வரவில்லை. ஒரு புகார் பதிவானால் அது விசாரணைக்கு வரவே சில மாதங்கள் ஆகிறது. ஏனெனில் பெரும்பாலான ஆணையங்களில் புகார்கள் மலை போல் குவிந்து கிடக்கும் நிலைதான் உள்ளது. புகார் மீது விசாரணை நடந்தாலும் மீண்டும் தகவல் தரும்படி சம்பந்தப்பட்ட துறை ஊழியருக்கு வழிக்காட்டல் தந்ததோடு கோப்பு மூடப்படுகிறது. அபராதம் கூட விதிக்கப்படுவதில்லை. பெரும்பாலும் அந்த மறுஆணை கூட மதிக்கப்படுவது இல்லை.

### தொடர்ச்சியாக உத்தரவிடுதல்கள்:

பஞ்சாப், உத்தர்கண்ட், பீகார், ஒரிசா, கர்நாடகா, அருணாச்சலப்பிரதேஷ் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்களில் தொடர்ச்சியாக ’ஆணைகளை’ அனுப்பிக்கொண்டே இருக்கும் நிலை உள்ளது. ஆணையை பிறப்பித்த பிறகு அந்த வழக்கை மூடிவிடுவதில்லை. ஆனால் வழக்கு விசாரணைகளை தொடர்ந்து ஏற்பாடு செய்து கொண்டே உள்ளனர். மனுதாரர் திருப்தி அடைந்துவிட்டார் என்பது தெரியும் வரை வழக்கு மூடப்படுவதில்லை. அதனால் மேலே சொன்ன மாநிலங்களில் மற்ற மாநிலங்களை விட சிறப்பானவைகளாகத் தெரிகின்றன. மாநில ஆணையங்கள், சிலவற்றைத் தவிர தனது ஆணைக்குப்பிறகும் தகவல்களை தொடர்ந்து தரமறுக்கும் துறைகளை பெரும்பாலும் புறக்கணித்துவிடவே விரும்புகின்றன. மனுதாரர் ஆணையர் அலுவலகத்திற்கு தொடர்ந்து நடக்கும் விசாரணைகளுக்கு வராமல் நின்று விட்டால் அவருக்குப் போதுமான தகவல்கள் கிடைத்து விட்டதாக ஆணையம் தாமே யூகம் செய்து கொள்ளும். எனவே, தொடர்ச்சியான ஆணைகள் கண்டிப்பான அமலாக்கத்தோடு, இணை சேர வேண்டிய தேவை இருக்கிறது என மக்கள் நோக்கம் ஆய்வு அறக்கட்டளை ஆலோசனை வழங்குகிறது. அருணாசலப்பிரதேசம் மட்டும் தான் முதலாவது மற்றும் ஒரே தகவல் ஆணையம் தகவல் உரிமைச் சட்டத்தின் பிரிவு 18 (3)ன் படி ஜாமீனில் வரத்தக்க கைது ஆணையை, ஆணையத்தின் ஆணைகளை நிறைவேற்றாதவர்களுக்காக வழங்கியது.

### சங்கடப்படுத்தும் போக்குகள்:

நாடு முழுதும் உள்ள சங்கடப்படுத்தும் போக்குகளையும் மக்கள் நோக்கம் ஆய்வு அறக்கட்டளையின் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. முதன்மைத் தகவல் அலுவலர் தரப்பில் நியாயமான காரணம் இல்லாத நிலையில், தகவல் உரிமை சட்டத்தின் மீதான ஒவ்வொரு மீறலும் அபராதம் விதிக்கக்கூடியதாக இருக்கிறது. அபராதத் தொகை முதன்மை தகவல் அலுவலரின் சம்பளத்தில் இருந்து பிடிக்கப்படும். ஆனாலும், பதிவு செய்யப்பட்ட சட்ட மீறல்களில் 2.4 சதவீதம் மட்டுமே அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. 74 சதவீத சட்ட மீறல்களில் முதன்மை தகவல் அலுவலருக்கு தகவலை தராமல் இருக்க நியாயமான காரணம் உள்ளதா எனக் கூட தகவல் ஆணையர் அவரிடம் கேட்கவில்லை, 26 சதவீதம் சட்ட மீறல்களில் தான் விளக்கம் கேட்டும் நோட்டீஸ்கள் முதன்மை தகவல் அலுவலருக்கு அனுப்பப்பட்டன. 65 சதவீத அறிவிப்புகள் 2008 கடைசி வரை தேக்கமடைந்த நிலையில் உள்ளன. 23 சதவீத வழக்குகளில் முதன்மை தகவல் அலுவலர் கூறிய காரணம் நியாயமானது என தகவல் ஆணையர்கள் ஒத்துக் கொண்டுள்ளனர். 29 தகவல் ஆணையர்களும், மூன்று தகவல் ஆணையர்களும் ஆயிரக்கணக்கான சட்ட மீறல்கள் இருந்தாலும், ஒரே ஒரு அபராதத்தை கூட விதிக்கவில்லை.

முதன்மை செய்தி அலுவலர்கள் “ஆவணங்கள் தொலைந்து போய்விட்டன” எனத் தகவல் தெரிவிப்பது என்பது அதிகரித்து வருவதை பற்றி காமன்வெல்த் மனித உரிமை முன்முயற்சி கவலை தெரிவித்துள்ளது. முதன்மைச் செய்தி அலுவலர்கள் இவ்வாறு பதில் கூறுவதைத் தகவல் தராமல் இருப்பதற்கான சட்ட ரீதியான சாக்கு போக்கு என நினைக்கின்றனர். நிறைய ஆணையர்களுக்குத் தாம் எவ்வளவு வழக்குகளை விசாரித்து முடிவு சொல்லியிருக்கிறோம் என்பது கூட தெரியவில்லை. ஒவ்வொரு முறையும் வேறு வேறு கணக்குகளை சொல்லும் நிலையும் உள்ளது. நிறைய ஆணையங்கள் தமது ஆணைகளின் நகல்களை கூட வைத்திருக்கவில்லை. 2008ல் 22,658 ஆணைகளை வழங்கியதாக உத்தரப்பிதேசம் சொல்கிறது. தமிழ்நாடு ஆணையம் 40 ஆயிரம் ஆணைகளை வெளியிட்டதாக கூறுகிறது. ஆனால் 900 நகல்களை தான் கொடுத்துள்ளது. சிக்கிம் ஆணையத்தால் தன் முன் வந்த மனுதாரர்களின் எல்லா முகவரிகளையும் தரமுடியவில்லை. இதையெல்லாம் கணக்கில் கொண்ட காமன் வெல்த் மனித உரிமை முன்முயற்சி மேலே சொன்ன மாநிலங்களை தனது ஆய்வில் எடுத்துக் கொள்ளவில்லை.

## ஆணையர்களை தேர்வு செய்தல்:

தகவல் ஆணையர்கள் ஒய்வு பெற்றுக் கொண்டு இருப்பதோடு, தகவல் ஆணையர்களைத் தேர்வு செய்யும் நடைமுறை மீது புதுப்பிக்கப்பட்ட ஆர்வம் உருவாகி உள்ளது. மூன்று பேர் மட்டுமே பங்கேற்கும் வகையில் உள்ள இன்றைய தகவல் ஆணையர் தேர்வு முறையை மறு பரிசீலனை செய்வதற்காக டெல்லியில் ஆகஸ்ட் 4ம் தேதி முழு நாள் கூட்டம் நடந்தது. மத்திய தகவல் ஆணையரை பொறுத்தவரை பிரதமர், அவரால் நியமிக்கப்பட்ட ஒரு கேபினெட் அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் தேர்வு செய்கின்றனர். மாநிலத் தகவல் ஆணையரை பொருத்தவரை முதலமைச்சர், அவரால் நியமனம் செய்யப்படும் அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பங்கேற்கின்றனர். தகவல் ஆணையர்களின் தேர்வு முறை பற்றி தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட பதிலில் மேற்சொன்ன தேர்வுக் குழுக்கள், நெருக்கடியின் மூலமோ, எந்தவித காரணத்தின் அடிப்படையில் இல்லாமலோ, அல்லது பெர்சனல் மற்றும் பயிற்சித் துறையின் சிபாரிசு மூலமாகவோ செயல்பட்டு ஆணையர்களைத் தேர்வு செய்கின்றன.


தகவல் ஆணையர்கள் பதவிகளுக்கான மனுக்கள் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு அதன் மூலம் வரவழைக்கப்பட்டவைகளாக இருக்க வேண்டும் என ஆகஸ்ட் 4ம் தேதி கூட்டம் முன்மொழிந்துள்ளது. மக்கள் தாமே போட்டியிடலாம் அல்லது வேறொருவரை அவரது சம்மதத்தோடு முன்மொழியலாம் என்பதும் முன்மொழியப்பட்டுள்ளது. தகவல் உரிமைச் சட்டம், இத்தகைய பதவிகளுக்கான வேட்பாளர்கள் பொது வாழ்வில் அறிமுகமானவர்களாக சட்டம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், சமூக சேவை நிர்வாகம்., ஆளும் தன்மையில் விரிவான அறிவும் அனுபவமும் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என கோருகிறது. தற்போது முன்மொழியப்பட்டுள்ள தேர்வு முறையின்படி எல்லா வேட்பாளர்களின் முழு விபரமும் அவர்களின் விண்ணப்ப மனுக்களோடு பர்சனல் மற்றும் பயிற்சித் துறையின் இணையதளத்தில் ஒரு மாதத்துக்கு முன்பாகவே வெளியிடப்பட்டு அதன் மேலான கருத்துகள் கேட்கப்பட வேண்டும். பிறரால் முன்மொழியப்படுகிற நிகழ்வுகளில் யாரால் முன்மொழியப்படுகிறது என்பது மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும் விண்ணப்பதாரர்கள், தகவல் உரிமைச் சட்டத்தின் எதிர்பார்ப்பு அளவுக்கு தகவல் கடமையை எவ்வாறு நிறைவேற்றுவார்கள் என்பது அவர்களிடம் கேட்கப்பட வேண்டும். ஒரு மாநிலத்தில் பெரிய அதிகாரியாக இருந்தவர் அதே மாநிலத்தில் தகவல் ஆணையராக வருகிறார் என்றால் அது பல்வேறு முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்று கலந்தாய்வில் உணரப்பட்டது. ஆகையால் அத்தகையவர் வேறு மாநிலத்தில் விண்ணப்பிக்க வேண்டும் அல்லது ஒரு நீண்டகால இடைவெளிக்குப் பிறகு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு விண்ணப்பதாரரின் மற்றவகை திறமைகள், சூழல்கள், அவை ஒவ்வொன்றின் மீதும் தரப்படுகிற முக்கியத்துவம் பற்றியும் கலந்துரையாடல் முன்மொழிந்துள்ளது. அவை, எத்தனை வருட அனுபவம் ஒரு விண்ணப்பதாரருக்கு இருக்கிறது மற்றும் தகவல் உரிமைச் சட்ட விசயத்தில் இதுவரை அவரது நடத்தை ஆகியவற்றையும் உள்ளடக்கியது. பர்சனல் மற்றும் பயிற்சித் துறை தனது முதல் சுருக்கப்பட்டியலில் காலி இடங்களைவிட ஐந்து மடங்கு அதிகமான விண்ணப்பதாரர்களை, அவர்களது பல்வேறு திறமைக்கேற்ப தனித்தனியாக மதிப்பெண்கள் தருவது மூலம் மதிப்பிட்டு, விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கையை குறைக்க வேண்டும்.

## ஆய்வுக்குழு:

விண்ணப்பதாரர்களை ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். அதில் நிறுவனங்களின் தலைவர்கள் நல்ல பொறுப்பில் உள்ள பிரமுகர்கள் இந்த குழுவின் உறுப்பினர்களாக செயல்பட வேண்டும். சட்டம், தொழில்நுட்பம், சமூக சேவை, சட்ட மன்றம், சுகாதாரம், மேலாண்மை, இதழியல், ஊடகம், நிர்வாகம், கல்வி, வணிகம் என்பன உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருந்து உபரிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். துணைவேந்தர்கள், பார்கவுன்சில் தலைவர்கள், பத்திரிக்கை நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோர் உதாரணங்களாக இருக்கலாம்.

கலந்துரையாடலில் பேசியதன்படி “ஆய்வுக் குழு சுருக்கப்பட்டியலில் உள்ள ஒவ்வொரு விண்ணப்பதாரரையும் பற்றி தன்னிடம் உள்ள தகவல்களின்படி, அவரது தகுதி, திறமையின் அடிப்படையில் விவாதிக்கலாம். விண்ணப்பதாரர்களை ஆய்வுக்குழு நேர்காணல் செய்யலாம். இந்த ஆய்வுக்குழுவே சில பொருள்சார்ந்த பின்புலத்தையும் தீர்மானித்து விண்ணப்பதாரர்களிடம் அதை எதிர்ப்பார்கலாம். உதாரணமாக, அந்த விண்ணப்பதாரர் மக்களால் மதிக்கதக்கவராக இருந்தாரா? பொது மக்களோடு விவாதித்தல், வெளிப்படைத் தன்மைக்காக அவர் எவ்வளவு கட்டுறுதி மிக்கவராக இருக்கிறார்” என்பது போன்றவையாகும். ஆய்வு குழுக்களின் கூட்டங்களும் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். அந்தக் குழு இரண்டாவது சுருக்கப்பட்டியலை தயாரிக்கும். அதில் காலியிடங்களைவிட மூன்று மடங்கு அதிகம் ஆட்கள் இருப்பார்கள் அது தேர்வுக்குழுவிக்கு அனுப்பப்படும். அதுவே இந்த முடிவை எடுக்கும். அகில இந்திய அளவில் நடந்த இந்த கலந்துரையாடலின் முன்மொழிவுகள் எல்லாம் அரசால் கவனிக்க வேண்டிய அளவு முக்கியமானதாகும். ✷

**– Frontline, Sep 10, 2010**




2008 ஏப்ரல் 13 அன்று, கலிபோர்னியாவில் உள்ள ஹன்டிங்கடன் கடற்கரையல் சந்தேகபடும் நபர் மீது ஒரு காவலர் துரத்தி டேசரை (Taser) பயன்படுத்துகிறார். 2001 முதல் அமெரிக்காவில் 346 மக்கள் காவல்துறை டேசரை பயன்படுத்தியதால் இறந்துள்ளனர்.

*Education Material Published on behalf of*

*Campaign for Custodial Justice & Abolition of Torture by Human Rights Advocacy and Research Foundation (HRF)*

*No.10, Thomas Nagar, Little Mount, Saidapet, Chennai - 600 015.*
*Ph : 044-2235 3503, Fax : 044-2235 5905,*
*E-mail : hrf@md3.vsnl.net.in, Website : www.voicesofstruggletn.org*